பாஸ மகா கவியின்

# இரட்டை நாடகங்கள்

ஆங்கில மூலம் : ஏ.எஸ். பஞ்சாபகேச ஐயர்

தமிழில் : தி.அ. சாமிநாத ஐயர்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி வளாகம், தரமணி, சென்னை - 600 113.

## பாஸ மகாகவியின்

# இரட்டை நாடகங்கள்


ஆங்கில மூலம்

**ஏ.எஸ். பஞ்சாபகேச ஐயர்**, எம்.ஏ., ஐ.ஸி.எஸ்.,
எப்.ஆர்.எஸ்.எல்., பார் அட் லா.

தமிழில்

**தி.அ. சாமிநாத ஐயர்**



**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
டி.டி.டி.ஐ. அஞ்சல், தரமணி,
சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Pāsa Mahā Kaviyiṉ Iraṭṭai Nāṭakaṅkaḷ (The Twin Plays by Basa Maha Kavi) |
| English Translation | : | A.S. Panchabakesaiyer |
| Tamil Translation | : | T.A. Saminatha Aiyar |
| Publisher | : | International Institute of Tamil Studies T.T.T. I. Post, Taramani, Chennai - 600 113. |
| Language | : | Tamil |
| Publication No. | : | 297 |
| Reprint | : | 1998 |
| Paper used | : | TNPL 16 Kg Super Printing |
| Size of the book | : | 1/8 demy |
| Printing types | : | 10 Point |
| No. of pages | : | viii + 158 |
| Price | : | Rs. 36/- |
| No. of Copies | : | 1000 |
| Printed by | : | Pavai Printers (P) Ltd., 142, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Phone : 8532441 |
| Subject | : | Drama |

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது.

*முனைவர் ச.சு. இராமர் இளங்கோ*
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 113.

# அணிந்துரை

பாசமகாகவி வடமொழியில் தொன்மையான நாடக ஆசிரியரான அசுவகோசுக்குப் பிற்பட்டவரும் காளிதாசருக்கு முற்பட்டவரும் ஆவார்.

காளிதாசர் மாளவிகாக்னிமித்திரத்தில் சௌமில்லன், கவிபுத்திரன் முதலியவர்களோடு ஒப்பிட்டுப் பாசமகாகவியைப் போற்றியுள்ளார். மேலும் பாசமகாகவி எழுதிய பிரதிக்ஞா யௌகந்தராயணம் எனும் நாடகத்தில் உள்ள சுலோகநடை காளிதாசருக்கு முற்பட்ட நடையாகும். 'சொப்பன வாசவதத்தை' எனும் நாடகத்தில் பிராகிருதச் சொற்களும் உரையாடல்களும் இடம் பெற்றுள்ளன. எனவே பாசமகாகவி காளிதாசருக்கு முற்பட்டவர் என்று கருத வேண்டியுள்ளது.

ஆய்வாளர்கள் பாசமகாகவியின் காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு என்பர். ஆனால் சிலர் காளிதாசரின் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு என்று குறிப்பிடுவர். அங்ஙனமெனின் பாசமகாகவியின் காலம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு என்பதே பொருந்தும்.

வடமொழி இலக்கியவாணர்கள் பாசமகாகவி பற்றிப் பல்வேறு இடங்களில் புகழ்ந்துரைத்துள்ளனர்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவரான பாணபட்டர் பாசமகாகவியின் நாடகங்களில் காணப்படுகின்ற பல்வேறு சிறப்புக் கூறுகளைக் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 720-ஆம் ஆண்டில் வாக்பதிராசர் எழுதிய 'கௌடவஹோ' என்ற நூலில் பாசமகாகவியின் நாடகங்களைப் பற்றிக் கூறியுள்ளார். கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவரான இராசசேகர் பாசமகாகவி எழுதியுள்ள நாடகங்களை நெருப்பில் போட்ட போது சொப்பனவாசவதத்தம் மட்டும் எரியவில்லை என்று புனைந்துரைத்துள்ளார். 'சாரதானயர்' எழுதிய 'பாவபிரகாசம்' என்ற நூலிலும், போஜர் எழுதிய 'சிருங்காரப் பிரகாசம்' என்ற நூலிலும் இந்நாடகத்தின் சிறப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்ஙனம் வடமொழி இலக்கிய

அறிஞர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட பாசமகாகவியின் நாடகங்கள் 1911 வரை கிடைக்கவில்லை. எனவே பாசமகாகவியின் நாடகங்கள் அனைத்தும் அழிந்து விட்டன என்று ஆய்வாளர்கள் கருதினர்.

திருவனந்தபுரத்தைச் சார்ந்த கணபதி சாத்திரிகள் 1912-இல் பாசமகாகவி எழுதியது என்று 13 நாடகங்களை முதன் முதலாகத் தொகுத்து வெளியிட்டார். இந்நாடகங்களைப் பாசமகாகவி எழுதினார் என்பதற்கு எவ்விதமான சான்றுகள் இல்லை. மேலும் மூலப்படியில் நூல் ஆசிரியர் பாசமகாகவியின் பெயர் சுட்டப்படவில்லை. எனவே இந் நாடகங்கள் பாசமகாகவியால் எழுதப்படவில்லை என்று ஆய்வாளர் களுள் ஒரு சாரார் கருதுகின்றனர்.

ஏ.பி. கீத், புசால்கா, கணபதி சாஸ்திரி முதலியோர் இந் நாடகங்களைப் பாசமகாகவி எழுதினார் என்பர். தேவதார், ராமதாசசர்மா, பர்னட், பட்டநாத சுவாமி, வின்டர்கிட்சு முதலியோர் இந்நாடகங்களைப் பாசமகாகவி எழுதவில்லை என்பர். ஆயின் இந்நாடகங்களின் தொன்மை, நடை, மொழி வழக்கு முதலியவற்றை எண்ணியும், பாணர் அவர்கள் தாம் எழுதின ஹர்ச சரிதத்தில் 'நாந்தி மங்கலத்தின் முன்னரே சூத்திரதாரன் அரங்குக்கு வருவது பாசமகாகவியின் எல்லா நாடகங் களிலும் காணப்படுகின்றன' என்ற குறிப்புக் கருதியும் இந்நாடகங்கள் பாசமகாகவியால் இயற்றப்பட்டவை என்று கருத வேண்டியுள்ளது.

மேலும் நாடகங்களில் காணப்படுகின்ற நாடகக் கதை அமைப்பு, உத்தி, கருத்து, நடை முதலியவற்றை நோக்கின் இந் நாடகங்களைப் பாசமகாகவிதான் எழுதினார் என்பது உறுதியாகிறது.

பாசமகாகவி எழுதிய நாடகங்கள் 14 ஆகும்.

'அவிமாரகம்' எனும் நாடகம் மன்னர் குடும்பத்தைச் சார்ந்த காதல் கதை ஆகும். 'சாருதத்தம்' எனும் நாடகம் மிருச்சகடிக நாடகத்தின் கதை அமைப்பைக் கொண்டுள்ளது. ஆயினும் இந்நாடகம் முழுமை யாகக் கிடைக்கவில்லை.

இந்தியாவில் தோன்றிய இதிகாசங்களான மாபாரதம், இராமா யணம் முதலியவை பாசமகாகவியை ஈர்த்துள்ளன. மாபாரதக் கதை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு 'மத்யமவியாயோகம்', 'தூதகடோற்கசன்', 'தூதுவாக்கியம்' 'ஊருபங்கம்' 'கர்ணபாரம்' முதலிய ஓரங்க நாடகங்களையும் 'பஞ்சராத்திரம்' எனும் மூன்று அங்கங்களைக் கொண்ட நாடகத்தையும் பாசமகாகவி இயற்றியுள்ளார்.

மாபாரதக் கதை நிகழ்ச்சிகளை நாடக அமைப்புக்கு ஏற்ப பாசமகாகவி திருத்தம் செய்துள்ளார். மேலும் பாத்திர வார்ப்பிலும் புதுநெறியைப் படைத்துள்ளார்.

ஊறுபங்கம், கர்ணபாரம் முதலிய ஓரங்க நாடகங்களில் நாடகத் தலைவர்களாக விளங்குகின்ற துரியோதனன், கர்ணன் ஆகியோர் தன்னேரில்லாத் தலைவர்களாகவும், நல்லவர்களாகவும் விளங்குகின்றனர்.

துரியோதனன், கர்ணன் ஆகியோரைத் தீயோராகப் பிற நாடக ஆசிரியர்கள் காட்டினாலும் அதற்கு மாறுபட்ட போக்கில் பாசமகாகவி துரியோதனன், கர்ணன் ஆகியோரை நல்லவர்களாகப் படைத்துள்ளார்.

மேலும் 'மத்யமலியாயோகம்' எனும் நாடகத்தில் கடோற்கசனின் தாயார் இடும்பியை ஒரு நல்ல குடும்பப் பெண்ணாகக் காட்டியுள்ளார்.

'பஞ்சராத்திரம்' எனும் நாடகத்தில் துரியோதனன் நல்லவனாகப் படைக்கப்பட்டுள்ளான். இங்ஙனம் பாத்திரப் படைப்பில் பாசமகாகவி புரட்சி நிகழ்த்தியுள்ளார் என்றால் அது மிகையாகாது.

பாசமகாகவி எழுதிய பிறிதொரு நாடகம் 'பால சரிதம்' என்பதாகும். கண்ணன் பிறப்பு முதல் அவன் கம்சனை வதம் செய்யும் வரை உள்ள நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஐந்து அங்கங்களில் இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது.

கற்றோர்க்குக் களிப்பூட்டும் வகையில் பாசமகாகவியின் படைப்புக்கள் விளங்கின. எனவே பாசமகாகவியை 'மக்கள் கவிஞர்' என்று கூறுவதற்கில்லை. பாசமகாகவி நாடகங்களில் காணப்படுகின்ற எளிமையும், தெளிவும், தூய்மையும் ஓசைநயமும் காளிதாசனை ஈர்த்தன. அவரை மகாகவி ஆக்கின. எனவே காளிதாசன் மகாகவி என்று புகழப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தவை பாசமகாகவியின் நாடகங்கள் எனலாம்.

இராமாயணக் கதை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பாசமகாகவி இரு நாடகங்களை எழுதியுள்ளார். ஒன்று, பிரதிமா நாடகம்; பிறிதொன்று, அபிஷேக நாடகம்.

உதயணன் வாசவதத்தை ஆகியோருடைய வரலாற்றைத் தழுவி வடமொழியில் சமூக நாடகங்களும் அரசியல் நாடகங்களும் இயற்றப்

பட்டன. மக்கள் வழக்கில் இருந்த உதயணன் வாசவதத்தை ஆகியோரின் கதையை கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கருதப்படுகின்ற குணாட்டியர் என்பார் 'பிருஹத் கதை' என்ற தலைப்பில் முதன்முதலாக நூல் எழுதினார். அதனை கி.பி. 1070-இல் வாழ்ந்த சோமதேவர் என்பவர் சில திருத்தங்களுடன் சுருக்கிக் 'கதாசரித்சாகரம்' எனும் பெயரில் எழுதினார். உதயணன் வாசவதத்தை கதை நிகழ்ச்சிகளைத் தழுவி பாசமகாகவி இரு நாடகங்களை இயற்றியுள்ளார். ஒன்று, பிரதிக்ஞு யௌகந்த ராயணம்; பிறிதொன்று, சொப்பன வாசவதத்தம். வடமொழி யில் எழுதப்பட்ட இவ்விரு நாடகங்களையும் பஞ்சாபகேச அய்யர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். தி.அ. சாமிநாத அய்யர் தமிழில் அந்நூலை மொழி பெயர்த்துள்ளார்.

இந்நூலில் பஞ்சாபகேச அய்யர் முன்னர்ச்சுட்டிய இரு நாடகங் களைக் குறித்து விரிந்த ஆய்வுரை எழுதியுள்ளார். அவர் தம்முடைய ஆய்வுரையில் நாடகத்திற்கு ஏற்றவாறு மூலக் கதையைப்பாசமகாகவி திருத்தம் செய்துள்ள தன்மையை விளக்கியுள்ளார். தமிழில் மொழி பெயர்த்த தி.அ. சாமிநாத அய்யர் அவர்கள் 'பிரதிக்ஞாயௌகந்தராயணம்' எனும் நாடகத்தை 'யௌகந்தராயணர் சபதங்கள்' என்றும் 'சொப்பன வாசவதத்தம்' எனும் நாடகத்தை' வாசவதத்தையின் கனவு' என்றும் நல்ல தமிழில் மொழிபெயர்த்துள்ளது போற்றுதற்குரியது. மேற்கூறிய இரு நாடகங்களும் ஒன்றோடொன்று தொடர்பு உடையன.

'பிரதிக்ஞா யௌகந்தராயணம்' எனும் நாடகம் 4 அங்கங்களைக் கொண்டதாகும். இந்நாடகத்தில் உதயணனின் அமைச்சனான யௌகந்த ராயணனின் மதிநுட்பமும் செயலாற்றலும் விரித்துரைக்கப்படுகின்றன. உதயணன் வாசவதத்தையின் காதல் விரிவாக விளக்கப்படவில்லை. எனவே இந்நாடகத்தில் வீரச்சுவையே விஞ்சி நிற்கிறது.

'சொப்பனவாசவதத்தம்' எனும் நாடகம் 6 அங்கங்களைக் கொண்டதாகும். பத்மாவதியைப் பார்க்க வந்த உதயணன் அவள் வராமல் இருந்ததால் அங்கிருக்கும் படுக்கையில் துயில்கிறான். அதன் பின் அங்கு வந்த வாசவதத்தை பத்மாவதிதான் படுக்கையில் துயில்கிறாள் என்று கருதி அருகில் படுக்கிறாள். வாசவதத்தையை நினைந்து நினைந்து வாழ்ந்த உதயணன் துயிலும்போதுகூட வாசவதத்தை என்று புலம்பு கிறான். விழிப்புற்ற வாசவதத்தை அவ்விடத்தை விட்டு விரைந்து சென்றுவிடுகிறாள்.

இவ்விரு நாடகங்களிலும் இந்நிகழ்ச்சிகள் நன்கு சித்திரிக்கப் பட்டுள்ளன.

1949-இல் சென்னையில் இருந்த ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம் வெளியிட்ட 'பாஸமகாகவியின் இரட்டை நாடகங்கள்' எனும் நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மறுபதிப்புச் செய்கிறது.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும், ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நன்றி.

சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தில் இந்நூலுக்கு நிதி உதவி நல்கிய தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ச. நாகராசன் அவர்களுக்கும் இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தார்க்கும் மெய்ப்புத் திருத்திய வ. நீலகண்ட பிள்ளைக்கும் எங்கள் நன்றி.

**இயக்குநர்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அணிந்துரை | .... | iii |
| ஊர்க்கதை | .... | *1* |
| யௌகந்தராயணர் சபதங்கள் | .... | *25* |
| வாசவதத்தையின் கனவு | .... | *93* |

# பாஸனின் இரட்டை நாடகங்கள்

## யௌகந்தராயணசபதமும் வாசவதத்தையின் கனவும்

### தோற்றுவாய்

இவ்விரண்டு நாடகங்களும் இந்தியாவில் வழங்கிய பழைய ஐதிகங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன; வத்ஸ நாட்டு உதயண னுடைய வீரச்செயல்களைப்பற்றிப் பேசுகின்றன. கி.மு. நான்காம் நூற்றாண்டில், பாஸனுடைய காலத்தில் வழங்கிய இந்தக் கதையின் விவரம் இப்போது நமது துரதிருஷ்டத்தால் கிடையாதாயிற்று. ஆனால், ஜனங்கள் சொல்லிக்கொண்டிருந்த கதையைக் குணாட்டி யன் என்பவன் எழுதிய ''பிருஹத் கதை'' என்னும் புத்தகத்தில் உள்ள படி ஏறக்குறைய சுத்தமாகவே எடுத்தெழுதினனென்று கொள்வ தற்காகும். பின்னாளில் சிற்சில சில்லறை மாறுபாடுகளுடன் சோம தேவன் என்பவன் தன்னுடைய ''கதாஸரித்ஸாகரம்'' என்னும் நூலில் எடுத்தெழுதினன். அஃதங்ஙனமாகக் கதையின் அழகை அதிகப்படுத் தும் பொருட்டும், நாடகமாட ஏற்கும்படி அதைச் சிறப்பிக்கும் பொருட்டும் பல முக்கியமான அமிசங்களிற் பாஸன் அநேக மாறு பாடுகள் செய்துள்ளான். இது போலவே ஷேக்ஸ்பியரும் ''ஹாம் லெட்டு[1]'', ''கிங்கிலியர்[2]'', ''மாக்பெத்[3]'', ஒதெல்லோ[4]'' என்னும் திருத்தமில்லாக் கதைகளைத் திருத்தி மாற்றிச் சிறப்பித்துள்ளான்.

கதாஸரித்ஸாகரத்தில் உள்ளபடி ஊர்க்கதையை இதனடியில் எடுத்துரைப்பேன். அதற்குப்பின் நம் நாட்காசிரியன் செய்துள்ள மாறு பாடுகளையும் அவற்றின் அருமைகளையும் சுருக்கமாகச் சொல்வேன்.

---

1. Hamlet. 2. King Lear.

3. Macbeth. 4. Othello.

# ஊர்க்கதை

# யௌகந்தராயண சபதங்கள்

## சபதங்களுக்கு முன்

### உதயணன் பிறப்பு

சதானிகன் * என்னும் புகழ்பெற்ற அரசன் இருந்தான். அவன் பாண்டவ வமிசத்தோன்றல். கௌசாம்பியென்பதைத் தலைநகரமாகக்கொண்டு அவன் வத்ஸ தேசத்தையாண்டுவந்தான். அவனுக்கு சஹஸ்ராணிகன்[1] என்னுமொரு புத்திரன் இருந்தான். அவன் கோசல மன்னனின் குமாரியாகிய மிருகவதி[2] என்பவளை மணந்தான். அவள் கருப்பவதியாயிருக்கையில் மசக்கையினால் மிக வருந்தினாள். ஒரு நாள் அவள் இரத்தக் குளத்திற் குளிக்க விருப்பங்கொண்டாள். அரசன் அறநெறியைக் கடைப்பிடித்தவனாதலின், அவளுடைய ஆசையைத் தணிப்பதற்காக மிருகங்களையேனும் கொல்ல விரும்பினானில்லை. ஆயினும் அவளுடைய விருப்பத்தை ஈடேற்றக் கருதினான். ஆதலால், அவன் அவள் குளிப்பதற்கான நீர்த்தொட்டியில் செவ்வரக்குக் கரைத்த நீரை நிரப்பி வத்தான். அந்நீர் இரத்தம் போலவே தோன்றும். அவ்விரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளாமல் அந்த அரசி குளிப்பதற்காகத் தொட்டிக்குள் இறங்கினாள்.

அவள் அங்ஙனம் குளித்துக்கொண்டிருக்கையில், ஆகாயத்திற் பறந்துகொண்டிருந்த மிகப் பெரியதொரு பறவையின் கண்ணுக்கு, இரத்த வெள்ளத்தில் மிதக்கும் இறைச்சித் துண்டம்போலத் தோன்றினள். உடனே அது விரைந்து அவள் மீது பாய்ந்தடித்து அவளை உதயகிரி மலைக்குத் தூக்கிக்கொண்டு போயிற்று. ஒரு சிகரத்தின்மீது அவளை இறக்கிவைத்துப் பார்த்தபோது உயிருள்ள மானிட உருவேயல்லாமல் பச்சையிறைச்சித் துண்டமன்றென்று தெரிந்து அது வெறுத்து அவளை அங்கேயே விட்டுப் பறந்துபோயிற்று.

---

* **சதானிகன் :** நூறு படைப்பகுதிகள் உள்ளவனென்று அர்த்தம். கௌதம புத்தருடைய காலத்தில் இருந்த சுத்த க்ஷத்திரிய மன்னனென்றும் அவனை அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

1. **சஹஸ்ராணிகன்** - ஆயிரம் படைப்பகுதிகளுடையவன்.
2. **மிருகவதி** - மான்கண்ணி.
3. இப்போது கஞ்சம் ஏஜன்ஸியிற் சேர்ந்துள்ளது.

இரத்தக்குளி குளிக்கவேண்டுமென்று ஆசைப்பட்ட அநியாயத்திற்குத் தகுந்த தண்டனையே தனக்கு வாய்த்ததெனவுணர்ந்து, ஒரு செங்குத்தான இடத்தினின்று கீழே விழுந்திறக்க எண்ணினாளாயினும், அந்த அரசி தன் கருப்பத்திலுள்ள சிசுவை நினைந்து விழாது நின்றனள். ஜமதக்னி* மாமுனிவரின் சிஷ்யனான இளைஞன் ஒருவன் அவ்வழிச் செல்கையில் அவளுடைய அழுகைக் குரலைக்கேட்டு, அவளுடைய விருத்தாந்தத்தை விசாரித்தறிந்து, முனிவராச்சிரமத்திற்கு அவளை அழைத்துக்கொண்டு போயினன். அவ்வாச்சிரமத்தில் அவள் அழகுமிக்க குமாரனை யீன்றனள். அவனுடைய ஜனனகாலத்தில் ''பெரும் புகழுள்ள அரசன் ஒருவன் பிறந்துள்ளான். இவன் உதயணன் எனப்படுவான். இவனுடைய மகன் வித்தியாதரர்*களுக்கு இறைவனாவன்'' என்றோர் ஆகாசவாணி அறைந்தது.

அந்தப் பையன் நாளொருவண்ணமும் பொழுதொரு ,மேனியுமாகத் தேகத் திடமுற்று வளர்ந்துவந்தான். ஆச்சிரமத்துள்ளவர்களெல்லாரும் அவனைக் கண்ணுக்குக் கண்ணாய்ப் பாராட்டி வந்தார்கள். மிருகவதியானவள் தன் கை மணிக்கட்டில் ''சஹஸ்ராணிகன்'' என்னும் பெயர் பதிந்த கடகமொன்றையணிந்திருந்தாள். அதைக்கழற்றி அவள் தன் குமாரனுடைய கையிற் போட்டாள். ஜமதக்னி முனிவரே அச்சிறுவனுக்கு எல்லாக் கலைகளையும் கற்பித்தனர். உதயணன் காட்டில் தனியே திரிந்து, மான் முதலான காட்டு மிருகங்களோடு விளையாடிக்கொண்டு, அச்சமென்பதேயறியாமல் இருந்தான்.

## வீணை கிடைத்த வரலாறு

ஒரு நாள் பெரும் பாம்பொன்றைச் சவரன்[1] ஒருவன் பிடித்திருக்கக் கண்டான். அந்தப் பாம்பை விட்டுவிடும்படி சவரனை உதயணன் கேட்டான். ''நான் விடமுடியாது, பையா! இப்படிப்பட்ட பாம்புகளை விற்றே நான் வயிறு வளர்க்கிறேன்'' என்று சவரன் பதில் மொழிந்தான். அப்போது உதயணன் தன் கையிலணிந்திருந்த கடகத்தைக் கழற்றி அவனுக்குக் கொடுத்து, பாம்பை விட்டுவிடச் சொன்னான்.

---

* **ஜமதக்னி** - பரசுராமரின் தந்தை. இந்த இடத்தில் வெப்பமான கந்தக நீர் ஊற்று ஒன்றிருக்கின்றது. அது ''தப்த பாணிகாட்'' என்றே இன்றைக்கும் வழங்குகின்றது.

* **வித்தியாதரர்** - ஒருவகை உபதேவதைகள்.

1. **சவரர்** - அக் குன்றுகளில் இன்றைக்கும் வசிக்கும் ஆதிக்குடிகள். ப்ளினி (Pliny) என்பவர் இவர்களைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்.

களிமிகுந்த சவரன் பாம்பை விட்டுவிட்டுக் கடகத்தையெடுத்துக் கொண்டு போனான்.

அங்ஙனம் விடுபட்ட பாம்பானது வாசுகி* யின் தம்பியான வசுநேமி என்னும் தெய்விக நாகம். தன்னை விடுவித்த உதயணனது தயாளத்தை மெச்சி அந்தப் பாம்பு அவனுக்குக் கோஷவதி என்னும் தெய்விக வீணையைப் பரிசளித்தது. அதை அதன் தமையனான வாசுகி அதற்குக் கொடுத்திருந்தனன்; வாசுகியே அதனை இசைக்கடவுளான சிவபிரானிடமிருந்து அருட்பேறாகப் பெற்றனன். அந்த வீணையில் நுண்ணிய சுரங்களை வாசிக்கத்தக்கவாறு அநேக தந்திகள் இருந்தன. அந்தத் தொனிகள் மிகமிக இனிமையாயிருந்தன; அந்த இசைகளினால் மிக முரடான காட்டு யானையும் வசப்பட்டு ஆட்டுக்குட்டியைப் போல அமைதியாகும். அந்த வீணையை மிகவும் நேர்த்தியாக வாசிப்பதற்கு அப்பாம்பு அவனுக்குக் கற்பித்தது; அவனுக்கு மந்திரமும் கற்பித்தது; அந்த மந்திரத்தைத் தன் ஆசை நாயகிக்கு உபதேசித்தால், அவள் போடும் வெற்றிலை எப்பொழுதும் கெட்டுப்போகாது தளிர்த்தே இருக்கும்; அவள் கோக்கும் பூமாலை ஒருபோதும் வாடாது; அவளணியும் நெற்றிப் பொட்டு மங்காமற் பிரகாசமாகவே இருக்கும். பின்பு அப்பாம்பு மறைந்துபோயிற்று. அது கொடுத்த பரிசுகளுடன் உதயணன் ஆச்சிரமத்திற்குத் திரும்பிவந்தான்.

## உதயணன் நாடடைதல்

அந்தச் சவரன் கடகத்தையெடுத்துக்கொண்டு சமீபத்திலுள்ள பட்டணத்திற்கு விற்கப் போனான். உடனே அவனைப் போலீஸ்காரர் பிடித்து, கௌசாம்பிக்குக் கொண்டுபோய், அதன்மீது அரசனுடைய முத்திரை இருந்ததனால் அரசன்முன் நிறுத்தினார்கள். அவனைத் தண்டிக்காமல் விவேகியான அரசன், அந்தச் சவரனுக்கு அக் கடகம் எப்படிக் கிடைத்ததென்று அவனைக் கேட்டு விசாரித்து, அவனுடன் உதயகிரியிலுள்ள ஜமதக்கினி ஆச்சிரமத்திற்குப் போனான். முனிவர் அரசனை வரவேற்று மிருகவதியையும் உதயணனையும் அவன் வசம் ஒப்புவித்தனர். தனக்கு அவ்வளவு அழகு வாய்ந்த குமாரன் வாய்த்தானென அரசன் களிகூர்ந்தான். காலப்போக்கில் அவனுக்கு அரசன் இளவரசுப் பட்டங்கட்டி, தன்னுடைய சொந்த மந்திரிகளின் குமாரர்களாகிய வசந்தகன், ருமண்வான், யௌகந்தராயணன் என்பவர்களை

---

* **வாசுகி** - பாற்கடலைக் கடைவதற்குக் கயிறாக உபயோகிக்கப்பட்ட தெய்விக நாகம்; தேவர்களெல்லாருக்கும் பிரியமானது.

அவனுக்கு உசாத்துணைவர்களாக அளித்தான். நாளடைவில், உதயண னுக்கு அரசபட்டங்கட்டி சஹஸ்ராணிகன், ஆரியர்களுடைய தொன்று தொட்ட வழக்கப்படி, தன் மனைவி மிருகவதியுடன் இமயமலையில் ஓர் ஆச்சிரமத்தில் தவஞ் செய்யப் போயினான்.

முதலில் உதயணன் தனக்குரிய இராஜகாரியங்களைச் செய்து, குடிகளை நன்றாகப் பரிபாலித்துவந்தான். ஆனால், பின்பு கொஞ்சங் கொஞ்சமாக அவன் இராஜ்ய விவகாரங்களை மந்திரிமாரிடம் ஒப்பு வித்துவிட்டுத் தன் காலம் முழுமையும் பெரும்பாலும் யானை வேட்டை யிலே கழித்துவந்தான்; கோஷவதி என்னும் வீணையின் மனங்கவரும் வீணை இசையினால் அக்காட்டு யானைகளை மயக்கி வசப்படுத்திக் கொண்டிருந்தான். ஆனால், ஒரு சிந்தை மாத்திரமே இருந்தது. "பிறப்பிலும் அழகிலும் எனக்கு ஈடான மனைவி எங்கும் அகப்பட வில்லை; வாசவதத்தையே எனக்கேற்ற வாழ்க்கைத்துணைவியா வள். நான் கேள்விப்படுவதிலிருந்து, அவளுக்கும் என்மீது ஆசை இருக்கிறதெனத் தெரிகிறது. ஆனால், அவளை அடைவது எங்ஙனம்?" என்றே அவன் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

## வாசவதத்தை

அப்போது அவந்தியரசனாயிருந்தவன் மிக்க பெயர் பெற்றவன். உதயணனைத் தவிர சுற்றுப்புறத்து அரசர்களெல்லாரும் அவனுக்கு அடங்கி நடந்து கொண்டிருந்தார்கள். அவன் உஜ்ஜைனியைத் தலை நகராகக் கொண்டிருந்தான். அவனிடம் பெரிய போர்ப்படை இருந்தது. அதனால் அவனுக்கு மகாசேனன் என்னும் பட்டப்பெயர் வாய்ந்திருந் தது. அவனைச் சண்டமகாசேனன் எனவும் சொல்லுவார்கள். அந்தப் பெயருக்குப் 'பயங்கரமான மகாசேனன்' என்ற அர்த்தம். உஜ்ஜைனி மகாகாளி[1]யை வேண்டிக் கடுந்தவம் புரிந்து அவன் அத்தேவியி னிடமிருந்து ஒரு வாள் பெற்றிருந்தான். அவ் வாளுள்ளவரையில் அவனைப் பகைவர் வெல்லமுடியாதென்னும் வரமும் பெற்றிருந் தான். அவன் தைத்திய[2]மா தொருத்தியை மணந்து அவளிடமாகக் கோபாலகன், பாலகன் என்னும் இரண்டு புதல்வரைப் பெற்றான். ஒரு நாள் தேவர்களுக்கு[3] இறைவனாகிய இந்திரனுக்கு அவன் பெருவிருந்து

1. மாகாகாளி - சிவனாகிய 'மகாகால'னின் பாரியை.

2. தைத்தியர் - ஒருவகை அரக்கர். அவர்களில் ஆண்மக்கள் மிக்க தீரமுள்ளவர்கள்; பெண்மக்கள் அழகு மிக்கவர்கள்.

3. தேவர்கள் - பிரகாசமாய் இருப்பவர்கள்; சூரர்கள்.

அளித்தான். அவ்விருந்தினால் திருப்தியடைந்த இந்திரன் அவனுக்கு அழகிலும் குணத்திலும் சிறந்த புத்திரி பிறப்பாளென வரங்கொடுத்தான். காலப்போக்கில் அந்தப் பெண் பிறந்தாள்; அவளுக்கு 'வாசவதத்தை'[1] எனப் பெயரிட்டார்கள்.

வாசவதத்தைக்கு விவாக வயது வந்தவுடன் மகாசேனன் வருமாறு தனக்குத்தானே நினைந்திருந்தான். ''இவ்வுலகத்தில் என் புதல்விக்கேற்ற கணவன் உதயணனைத் தவிர வேறு எவருமில்லை. ஆனால், அவன் எப்போதும் எனக்குப் பகைவனாகவே இருக்கிறான்; அவனை நான் எப்படி மருமகனாக்கிக்கொள்ள முடியும்; எனக்கடங்கிய துணையரசாக்கிக்கொள்ள முடியும்? அவன் தன்னந்தனியே காட்டில், தன் வீணை வாத்தியத்தால் யானைகளை வசப்படுத்திக்கொண்டு அலை கிறான். அவனுக்குள்ள இந்தக் குணக்குறையை ஏதுவாகக்கொண்டு அவனை வலைபோட்டுப் பிடித்துத் தந்திரமாக இங்கே கொண்டுவரச் செய்வேன். அப்போது வீணை வாத்தியத்தில் வல்லவனான அவனிடம் என் மகளை வீணை கற்க விடுவதாகப் பாசாங்கு செய்வேன். அவளைப் பார்த்தவுடனே அவன் அவள்மீது மோகங்கொள்வான். அவளுடைய அழகைக் கண்டு அயர்ந்துபோவான். நிச்சயமாக எனக்கு மருமகனாகித் துணையரசுமாவான்.''

மேற் சொல்லியவாறு தீர்மானித்துக் கொண்ட பின்னும், அவன் தந்திரோபாயத்தைக் கைக்கொள்ளுமுன் விவகார முறைப்படி சந்தி செய்யலானான். ''என் மகள் உம்மிடத்தில் சங்கீதங் கற்க விரும்பு கிறாள். எம் மீது உங்களுக்கு அன்பு உண்டெனின் இங்கேவந்து அவளுக்கு இசைப்பயிற்சி அளியுங்கள்'' என்று சொல்லும்படி உதயணனுக்குத் தூதனுப்பினான். தற்பெருமை வழுவாத உதயணன் ஓரரசன் மற்றோரரசனுக்கு இணங்கி நடப்பதில்லையென்னும் க்ஷத்திரிய வழக்கத்தைத் தழுவி, ''உங்கள் குமாரி என்னிடம் சங்கீதம் கற்க விரும்பினால், அவளை இவ்விடத்திற்கனுப்புங்கள்'' என்று மறுமொழி சொல்லியனுப்பினான். அம்மறுமொழி மகாசேனனை அவமதித்ததாகும். ''இசையாசிரியனாக என்னைத் தன் ஊருக்கு வரும்படி மகாசேனன் அழைத்த துடுக்குத்தனத்திற்காக அவனை நான் போய் விலங்கிட்டுக் கொண்டுவருவேன்'' என்று உதயணன் தன் மந்திரிமார்களுக்குச் சொன்னான். 'மகா சேனன் பேர்பெற்ற மன்னவன். அவனை நீங்கள் வெல்லமுடியாது. உங்களுடைய எண்ணம் சரியானதன்று; சாதிக்கக் கூடியதுமன்று' என்று யௌகந்தராயணர் உதயணனுக்கு எடுத்துக்

1. இந்திரனால் அளிக்கப்பட்டவள்.

கூறினார். மகாசேனனிடம் பெரும் படை இருக்கின்றதனாலும், அவந்திக்குப் போகும்வழி கஷ்டமாயிருப்பதனாலும் அவனை வெல்ல முடியாதென்றும் அவர் சொன்னார்.

உதயணன் சொல்லிய மறுமொழியை மகாசேனனுடைய தூதன் போய் அவனுக்குச் சொன்னான். தந்திரத்தினாலேயே காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்று அவன் நிச்சயித்துக்கொண்டான். ஆதலின் அவன் தன்னுடைய சொந்த யானையாகிய நளாகிரி என்பதைப் போன்ற போலியாயொன்று செய்வித்து, அதற்குள் நன்கு தேர்ந்த போர்வீரர்களை நிரப்பி, விந்திய மலையிலுள்ள யானைக்காட்டிற் கொண்டுபோய் வைத்தான்.

## யௌகந்தராயணர் சபதங்கள்

### உதயணன் சிறைப்படல்

உதயணனுடைய சாரணர்கள் இந்த யானையைத் தூரத்திலிருந்து பார்த்துத் திரும்பிப்போய், ''தனித்த யானையொன்று விந்தியமலைக் காட்டில் திரியக்கண்டோம். அதற்கீடானது உலகத்தில் எங்கும் இல்லை'' என்று அறிவித்தார்கள். ''மகாசேனனுடைய நளாகிரி என்னும் யானைக்கு ஈடான அந்தப் பெருமைபெற்ற யானையைப் பெறுவேனாயின், மகாசேனன் என் கைக்குள் நிச்சயமாக அடங்கிப்போவான்; தன் மகள் வாசவதத்தையை விவாகஞ் செய்துகொள்ளும்படி என்னைக் கேட்பான்'' என அன்றிரவெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தான். ஆகையால் மறு நாட் காலையில் அவன் விந்தியமலைக் காட்டுக்குப் புறப்பட்டான். 'போகவேண்டா' மென்று மந்திரிகள் தடுத்தார்கள். அவன் புறப்படுகிற வேளை நன்றாயில்லை. 'அவ்வேளையிற் புறப்பட்டால், புறப்படு கிறவன் சிறைப்படுவான்; ஒரு கன்னிகையையும் அடைவான்' என்று சோதிடர்கள் சாஸ்திரம் பார்த்துக் கூறினார்கள். எவருடைய வார்த்தை யையும் அவன் செவிக்கொள்ளவில்லை.

விந்தியமலைக்குப் போய்ச் சேர்ந்தபின் அவன் தன் படை களையெல்லாம் சிறிது தூரத்தில் இருக்க விட்டு, சாரணர்களை மாத்திரம் உடனழைத்துக்கொண்டு, தனது இன்னிசை வீணையாகிய கோஷவதி யைக் கைக்கொண்டு யானைக்காட்டிற் புகுந்தான். விந்தியமலைத் தொடரின் தென்சரிவில் உண்மை யானையைப்போல் தோன்றிய போலியுருவைக் கண்டான். அவனுடைய சாரணர்கள் சிறிது தூரத்தி லிருந்து அதை அவனுக்குக் காட்டினார்கள். அவன் தன் வீணையை

வாசித்துக்கொண்டு அரவம் எழுப்பாமல் தனியே அதனையணுகிப் போனான். இனிமையான, இசைகளை வாசித்தான். அதை எப்படிப் பிடித்துக்கட்டுவதென்று ஆலோசித்துக்கொண்டே போனான்.

அவன் மனமெல்லாம் வீணை இசையில் ஆழ்ந்திருந்ததனாலும், அந்தி மந்தாரம் போட்டுக்கொண்டிருந்ததனாலும், அது போலியானையென்று அவன் கண்டு கொள்ளவில்லை. அதனண்டை போனவுடனே போரணி பூண்ட யுத்தவீரர்கள் யானைக்குள்ளிருந்து வெளிவந்து அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். அரசன் தன் வேட்டைவாளையுருவிக்கொண்டு கடுமையாகப் போர்புரிந்தான். எதிரிலுள்ளவர்களை அவன் அடித்துக்கொண்டிருக்கையில் பின்புறத்திலிருந்த ஆட்கள் வந்து அவனைப் பிடித்துக்கொண்டார்கள். பின்பு அப் படைவீரர்கள் அவனை உஜ்ஜைனிக்குக் கொண்டுபோனார்கள்.

## உதயணனும் வாசவதத்தையும்

மகாசேனனே தன் சிறையை எதிர்கொண்டு மரியாதையாக வரவேற்றுத் தன் நகருக்குள் அழைத்துக் கொண்டுபோனான். சில நாளைக்குப் பின், தன் மகள் வாசவதத்தையை அவனிடம் ஒப்புவித்து, 'அரசகுமாரா, இந்தப் பெண்ணுக்கு வீணை கற்பியும்; இங்ஙனம் உமது வீரச்செயலுக்கு இனிமையான பயன் பெறுவீர். விசனப்படாதேயும்' என்று சொன்னான்.

வாசவதத்தையைக் கண்டவுடன் உதயணனுக்கு அவள்மீது மோகம் மூண்டது. காம மயக்கத்தில் அவன் கோபத்தையும் துக்கத்தையும் மறந்தான். அவன் மகாசேனனுடைய அரண்மனையுட்புறத்தில் இசையரங்கில் இருந்துகொண்டு அவளுக்கு இசை கற்பித்துவந்தான். அவன் கண்கள் அவளுடைய கண்களிலேயே பதிந்தன.

## யௌகந்தராயணர் சூழ்ச்சி

இதற்கிடையில் உதயணனோடு போயிருந்த ஆட்கள் கௌசாம்பிக்குத் திரும்பிப்போயிருந்தனர். அமைதியும் ஆழ்ந்தநினைவுமுள்ள யௌகந்தராயணர் துரைத்தனவிவகாரத்தை ருமண்வானிடம் ஒப்புவித்துவிட்டு, வசந்தகனுடன் உஜ்ஜைனிக்குப் போனார். போகும் வழியில் யௌகந்தராயணர் மந்திர வலிமையால் தம் வடிவையே மாற்றிக் கொண்டனர்; மாறுவடிவம் மேற்கொண்டனர்; கூன் முதுகு வாய்ந்தனர்; முதுமை ஏற்றனர்; பைத்தியக்காரனைப்போலத் தோன்றினர். அந்த

மந்திரத்தின் வலிமையினாலேயே வசந்தகனுடைய உடம்பில் நரம்புகள் புடைத்துத் தோன்றச் செய்தார்; வயிறு பிதுங்கிக் காணச் செய்து விகாரமான வாயும், நீண்ட பல்லும் உண்டாக்கினார்.

யௌகந்தராயணர் ஆடிப்பாடிக் கூத்தாடிக்கொண்டு உஜ்ஜைனிக்குள் நுழைந்து அரசனுடைய அரண்மனைக்குப் போனார். அவரைச் சூழ்ந்து பெரிய ஜனத்திரள் பின்பற்றிச் சென்றது. அவருடைய ஆடல் பாடல்களைக் கேட்டு வாசவதத்தை தன் தாதியையனுப்பி அவரை இசையரங்கிற்கு அழைத்துவரச் செய்தாள். அவ்விடத்தில் அவர் உதயணனுக்கு ஒரு இரகசியமான ஜாடை செய்தனர். அதனால் அவன் அவர் யௌகந்தராயணரென்று தெரிந்துகொண்டு, ஏதோ சாக்குவைத்து வாசவதத்தையை வெளியே அனுப்பிவிட்டு, அவரோடு நெடுநேரம் இடையூறின்றிப் பேசிக்கொண்டிருந்தான். பின்பு யௌகந்தராயணர் விலங்கைத் தெறிப்பதற்கான மந்திரத்தையும், வாசவதத்தையின் மனத்தைக் கவருவதற்கான மந்திரத்தையும் உதயணனுக்கு உபதேசித்தார். பின்பு அவர் வெளியே போய்விட்டார். வாசவதத்தை திரும்பி வந்தவுடன், அரண்மனை வாசலிற் காத்துக்கொண்டிருந்த வசந்தகனை அவளைக்கொண்டு உள்ளே அழைத்துவரச் செய்தான். வாசவதத்தைக்கு வேடிக்கையான கதைகளைச் சொல்லி வசந்தகன் அவளுடைய தயவைச் சம்பாதித்துக்கொண்டான்.

நாள் செல்லச் செல்ல உதயணன்மீது வாசவதத்தைக்கு ஆசை உண்டாயிற்று. தன் தந்தைக்கு எதிரிடையாக அவள் உதயணனைச்சார்ந்து பேசத் தலைப்பட்டாள். யௌகந்தராயணர் திரும்பவும் அரண்மனைக்குப் போய், பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் உதயணனைப் பார்த்தார். வசந்தகனை மட்டும் வைத்துக்கொண்டு அவர் உதயணனை நோக்கி, ''அரசே! மகாசேனன் தந்திரத்தினால் உம்மைச் சிறைப்பிடித்தான். இப்போது தன் மகளை உமக்கு விவாகஞ்செய்வித்து எல்லா மரியாதைகளுடனும் உம்மை விடுதலைசெய்யும் நோக்கங்கொண்டிருக்கிறான்; இவ்விவாகம் நடந்தேறுமுன் இவன் மகளை நாம் எடுத்துக் கொண்டு ஓடிப்போவோம். இவ்வாறு இந்தக் கருவம் பிடித்த அரசன்மீது பழி தீர்த்துக்கொள்வோம்; இவனை அவமானப்படுத்துவோம். இவன் வாசவதத்தைக்குப் பத்திராவதி என்னுமொரு பெண்யானை கொடுத்திருக்கிறான். நளாகிரியைத் தவிர வேறு எந்த யானையும் வேகநடையில் அதை வெல்லமுடியாது. இந்த யானையின் பாகன் இவ்வூர்க்காரன்; ஆஷாடகன் எனப்படுவன். அவனுக்கு வேண்டிய பணம் கொடுத்து நான் அவனை நம் வசப்படுத்திக்கொண்டிருக்கிறேன். நீர் போர்ப்படைகளுடன் வாசவதத்தையுடன் அந்த யானையின் மீது ஏறிக்கொண்டு

இரவில் இரகசியமாக இவ்விடத்தைவிட்டுப் புறப்படவேண்டும்'' என்று சொன்னார்.

யௌகந்தராயணர் சொல்லியதையெல்லாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, உதயணன் வாசவதத்தை வந்தவுடன் அவளுக்குச் சொன்னான். அவள் இசைந்து அவனுடன் திருட்டுத்தனமாக ஓடிப் போகத் தீர்மானித்தாள். அவர்கள் உஜ்ஜைனியை விட்டுத் தப்பியோடி, வழியில் நேர்ந்த இடையூறுகளையெல்லாம் கடந்து கௌசாம்பிக்கு க்ஷேமமாக வந்துசேர்ந்தார்கள்.

## இடைச் சம்பவங்கள்

### உதயணனும் விரசிதையும்

சிலநாளைக்குப் பின் மகாசேனனும் அவனுடைய அரசியும் தங்கள் ஆசீர்வாதம் சொல்லும்படி தம் குமாரன் கோபாலகன் என்பவனை உதயணனிடம் அனுப்பினார்கள். அதற்குப் பின் உதயணன் வாசவதத்தையை முறைப்படி விவாகஞ் செய்துகொண்டான்; மனிதருள் தானே பெரிய அதிர்ஷ்டசாலியென எண்ணிக் கொண்டான். ஆனால், சிறிது காலத்திற்குப் பின் வாசவதத்தையின் மீது அன்பு குறைந்து, முன்னர் ஒரு போது சம்பந்தப்பட்டிருந்த விரசிதை என்னும் சேட்டியுடன் இரகசியமாக அளவளாவத் தலைப்பட்டான். ஒருநாள் வாய் தவறி அவன் வாசவதத்தையை 'என் கண்மணி விரசிதா' என்று விளித்தான். அதன்மீது அவள் கோபங்கொண்டாள். அவளைச்சமாதானப் படுத்த அவன் அவளுடைய காலிற் பணிந்து, 'இனி விரசிதை விவகாரத்தை விட்டுவிடுவே'னென்று வாக்குறுதி கூறவேண்டியதாயிற்று. அவன் அவ்வாறு வேண்டிக்கொண்டதன்மீது அவள் ஊடல் தவிர்ந்தாள். மறுபடி சிறிது காலத்திற்குப் பின் உதயணன் அரசியல் விவகாரத்தைப் புறக்கணித்து, தன் இஷ்ட போகங்களிலே மனத்தைச் செலுத்தலானான்: முக்கியமாக, வேட்டையாடுவதிலே பிரியங்கொண்டிருந்தான். இதைக் கண்டு யௌகந்தராயணர் விசனப்பட்டார். ஏனெனில், உதயணனை உலகத்துக்கெல்லாம் சக்கராதிபதியாக்குவது மந்திரிகளின் கடமையாகும். அதுவே ஒவ்வொரு க்ஷத்திரிய அரசனுக்கும் இருக்க வேண்டிய நோக்கம் என்று அவர் நினைத்தார். அதன் மீது அவர் மற்ற மந்திரிகளையழைத்து, ''உதயணன் இருக்கிறபடி இருந்துகொள்ளட்டும். அவனுடைய முயற்சியில்லாமலே நாம் அவனுக்கொரு நல்லகாரியம் செய்து வைக்கவேண்டும். அஃதாவது, உலகத்துக்கெல்லாம் அவனைச் சக்கரவர்த்தி ஆக்கவேண்டும். இதற்கு உள்ள பெருந்தடை மகத அரசன்

ஒருவனே. அவன் எப்பொழுதும் நம்மைப் பின்புறத்திலிருந்து தாக்கிக் கொடிருக்கிறான். அவனுடைய நாடு நமது நாட்டிற்குப் பின்னே இருக்கின்றது. அவனுடைய மகள் பத்மாவதி என்பவளை உதயணன் கலியாணஞ்செய்துகொண்டு அவனை வசப்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்று அவர் மற்ற மந்திரிகளுக்குச் சொன்னார்.

## யௌகந்தராயணர் சூழ்ச்சி

''அவனுடைய மகளை நம் அரசருக்கு விவாகஞ்செய்து கொடுக்கும்படி மகதத்தரசனை முன்பே நான் கேட்டிருந்தேன். 'என் மகளை நான் என் உயிரினும் அதிகமாகப் பாராட்டுகின்றேன். வாசவ தத்தையை உயிர்போன்று நேசிக்கும் உதயணனுக்கு என் பெண்ணைக் கட்டிக்கொடுக்கமாட்டே'னென்று அவன் எனக்குப் பதில் சொல்லி யிருக்கிறான். ஆகையால், வாசவதத்தையை நாம் ஓரிடத்தில் ஒளித்து வைத்து, அவள் வீட்டைத் தீயிட்டெரித்து, அரசி தீயில் இறந்து போனாளென்று எங்கெங்கும் பறையறையவேண்டும். வேறு எவ்விதத்தி லும் மகதத்தரசன் தன் பெண்ணை நம் அரசனுக்கு விவாகஞ் செய்து கொடுக்கமாட்டான். ஆனால், இங்ஙனம் செய்வோமாயின் நாம் நினைத்த வண்ணமே எல்லாக் காரியமும் கைகூடும்'' என்று மற்ற மந்திரிகளை நோக்கி யௌகந்தராயணர் சொன்னார்.

மற்ற மந்திரிகளை இந்த ஆலோசனைக்கு யௌகந்தராயணர் மெல்ல மெல்ல இசைவித்தார்; கோபாலகனுக்கும் இந்த இரகசியம் ஒருவாறு தெரியும்படி செய்தார். பின்பு மகத தேசத்தையடுத்த இலா வாணகம் என்னும் ஜில்லாவில் அரசன் பெரிய வேட்டையாடு வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். வாசவதத்தையின் வீட்டைக் கொளுத்திவிடுவதற்குத் தீர்மானித்தார்கள். வாசவதத்தையைக் கொண்டுபோய்ப் பத்மாவதியினிடம் ஒப்புவிக்கவும் சூழ்ச்சி செய்தார் கள். வாசவதத்தை மறைந்திருக்கும் காலத்தில் ஒழுக்கந் தவறாதிருந்தா ளென்பதற்கு, உதயணனுக்கு இனிப் பட்டத்தரசியாக வரத்தக்க பத்மாவதியே சாக்ஷியாயிருக்கும் பொருட்டு அவளிடமே ஒப்புவிக்க நினைத்தார்கள்.

# வாசவதத்தையின் கனவு

## வாசவதத்தை பிரிதல்

யௌகந்தராயணரும் மற்ற மந்திரிகளும் உதயணனுடனும் வாசவதத்தையுடனும் இலாவாணகத்திற்குப் போனார்கள். ஒரு நாள்

அரசன் வேட்டைக்குப் போயிருக்கையில் யௌகந்தராயணர் எல்லா ஏற்பாடுகளையும் செய்துமுடித்தார். பின்பு அவரும், கோபாலகனும், ருமண்வானும், வசந்தகனும் இரகசியமாக வாசவதத்தையினிடம் போய், அவளுக்குத் தன் நாயகன்மீதுள்ள பேரன்பின்பொருட்டும், அவருக்குப் பெருமையும் புகழும் விளைவிக்கும்பொருட்டும், தங்களுடைய சூழ்ச்சிக்கு அவள் இசையும்படி செய்தார்கள். பின்பு யௌகந்தராயணர் தமது மந்திர சக்தியால் அவள் பிராமண மாதாகத் தோன்றும்படி செய்தார்; வசந்தகன் பிராமணச் சிறுவன் உருவம் மேற்கொள்ளவும் செய்து, தாம் கிழப்பிராமணனாக மாறினார். அதற்குமேல், ஆவந்திகை* என்னும் பெயருடன் வாசவதத்தையையும், வசந்தகனையும் அழைத்துக்கொண்டு இராஜகிருகத்திற்குப் போனார். அதற்குப் பின் வாசவதத்தையின் வீட்டுக்குத் தீ வைத்துவிட்டு ருமண்வான் 'என்ன பாவம், என்ன கஷ்டம்! அரசியாரும் வசந்தகனும் தீயில் எரிந்து போனார்கள்' என்று உரத்து ஓலமிட்டான்.

யௌகந்தராயணரும் ஆவந்திகையும் இராஜகிருகம் போய்ச் சேர்ந்தார்கள். இளவரசி பத்மாவதி நந்தவனத்திலிருப்பதைக் கண்டு அவளை நோக்கிச் சென்றார்கள். அப்போது அங்குள்ள காவலர்கள் அவர்களைத் தடுக்க முயன்றனர். ஆவந்திகையைப் பார்த்த மாத்திரத்தில் அவள்மீது பத்மாவதிக்கு ஆசை உண்டாயிற்று. அவர்களைத் தடுக்காமல் வழிவிட்டுத் தன்னிடம் வரவிடும்படி காவலர்களுக்கு அவள் கட்டளையிட்டாள். ஆவந்திகை என்பவள் தம் மகளென்றும், அவளுடைய கணவன் அவளைவிட்டுத் தேசாந்தரம் போனானென்றும் சொல்லி, அவளைப் பத்மாவதியின் வசத்தில் ஒப்புவித்துவிட்டு, யௌகந்தராயணர் இலாவாணகத்திற்குத் திரும்பிப்போனார். அவளையும் வசந்தகனையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு பத்மாவதி தன்னுடைய சிறந்த அரண்மனைக்குப் போனாள். ஆவந்திகை என்னும் மாது மிகப்பெரிய பதவியிலுள்ளவள்; மாறுவேடம் பூண்டிருக்கிறாளென்று சீக்கிரமாகத் தெரிந்துகொண்டு பத்மாவதி அவளுக்கு உயர்தரமான சௌகரியங்களை அவளுடைய மனம் திருப்தியடையும்படி அமைத்தனள்.

உதயணன் இலாவாணகத்திற்குத் திரும்பிவந்து வாசவதத்தையின் வீடு எரிந்து சாம்பராய்க் கிடப்பதைக் கண்டான். வாசவதத்தையும் வசந்தகனும் எரிந்து இறந்தார்களென்று ருமண்வான் சொன்னான். அந்த வார்த்தையைக் கேட்டவுடன் உதயணன் தரையில் விழுந்து புரண்டு நினைவுதப்பிப்போனான். ஆனால், யௌகந்தராயணரும் கோபாலகனும்

* அவந்தி நாட்டு மாது.

நடந்துகொள்ளும் விதத்தைக் கவனித்தான்; சோதிட சாஸ்திரிகள் சொல்லியிருந்த வார்த்தைகளையும் நினைத்துப் பார்த்தான்; அதனால், தன்னுடைய அரசி உயிரோடிருத்தல் கூடும் என்று சந்தேகித்து, இனி யொரு காலத்தில் அவளுடன் கூடுவதற்காகுமென்று எண்ணங் கொண்டான்.

## பத்மாவதி திருமணம்

யௌகந்தராயணர் உத்தேசித்திருந்தபடியே, இலாவாணகத்தி லிருந்த மகத அரசனின் ஒற்றர்கள், தம் அரசனிடம் போய்த் தீவிபத்தின் விவரங்களையும் வாசவதத்தையின் மரணத்தையும் அறிவித்தார்கள். அவர்களுடைய வார்த்தையைக் கேட்டும மகத அரசன் தன் மகளை உதயணனுக்கு விவாகஞ்செய்து கொடுக்கும் ஆவல்கொண்டு, அவனை இராஜகிருகத்திற்கு வரவழைத்துத் தன் மகளைக் கலியாணஞ் செய்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டான். யௌகந்தராயணருடைய சொற்படி உதயணன் மகதத்தரசனுடைய வார்த்தைக்கு இணங்கி னான். அவனுக்கும் பத்மாவதிக்கும் முறைப்படி விவாகம் மிகச் சிறப் பாக நடந்தேறியது. உதயணனுக்கு ஒருபோதும் தீங்கு செய்வதில்லை யென மகதத்தரசன் அக்கினி சாக்ஷியாக அந்தச் சுபமுகூர்த்தத்திற் பிரமாணம் பண்ணும்படி யௌகந்தராயணர் செய்தார். தன் பிராண பதிக்கு மேன்மேலும் சிறப்பு உண்டாக வேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு வாசவதத்தை அவ்வரண்மனையிலேயே பிற ரறியாமல் இருந்தாள். ஒருவேளை வாசவதத்தையை உதயணன் பார்த்து விடக்கூடுமென்று நினைந்து, யௌகந்தராயணர் கலியாணம் முடிந்த வுடனே அவனைப் பத்மாவதியுடனும் சைனியத்துடனும் அரண் மனையை விட்டு நீங்கிப்போகும்படி செய்தார்.

சைனியத்தின் பின்னணியில் வசந்தகனை முன்னிட்டுக் கொண்டு வாசவதத்தை இரகசியமாக அந்திக்கூட்டத்தோடு போயினள். உதயணன் இலாவாணகம் போய்ச் சேர்ந்து பத்மாவதியுடன் தனது அரண்மனையிற் பிரவேசித்தனன். ஆனால், எப்பொழுதும் வாசவ தத்தையையே நினைத்துக்கொண்டிருந்தனன். அன்றிரவு கோபாலக னுடைய வீட்டுக்குப்போய் வாசவதத்தை அவனைத் தழுவிக்கொண்டு தன் தலைவிதியை நினைந்து அழுது புலம்பினள். யௌகந்தராயணரும் ருமண்வானும் அங்கு அவளைத் தேற்றினர்.

'அரசியே! ஆவந்திகை இந்த ஊருக்கு வந்திருக்கிறாள்; கோபாலகனுடைய வீட்டிற்குப் போயிருக்கிறாள்' என்று பத்மாவதியின்

வேலைக்காரர்கள் போய் அவளுக்குச் சொன்னார்கள். அதைக் கேட்டவுடனே பத்மாவதி கலங்கி அச்சமுற்று, உதயணன் முன்னிலையில் தன் வேலைக்காரர்களை நோக்கி, ''நீ என் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டவள்; நீ இப்பொழுது இருக்குமிடத்தில் உனக்கென்ன காரியம்; நீ என்னிடம் வா' என்று அரசியார் சொல்வதாக ஆவந்திகைக்குப் போய்ச் சொல்லுங்கள்'' என்று ஏவினாள். பத்மாவதி கலங்கிச் சஞ்சலப்படுவதைக் கண்டு உதயணன் அவளண்டை நெருங்கிப் போனபோது, அவளுடைய மண மாலை வாடாதிருப்பதையும், நெற்றிக்குங்குமப் பொட்டு அழியா திருப்பதையும் கவனித்து அதிசயித்தான். அவை அங்ஙனமிருப்பதற்குக் காரணம் யாதென அவளை வினவினான். அவையெல்லாம் தன்னிடம் ஒரு பிராமணனால் ஒப்புவிக்கப்பட்ட ஆவந்திகை என்னும் மாதின் செய்கையெனக் கூறினள்.

இதையெல்லாங் கேட்டவுடனே, ஆவந்திகை என்பவள் வாசவ தத்தையாகவே இருக்கவேண்டுமென்றெண்ணி உதயணன் கோபாலக னுடைய வீட்டுக்குப் போகப் புறப்பட்டான். கோபாலகனுடைய வீட்டுக்குப் போனபோது அங்கே வாசவதத்தை, யௌகந்தராயணர், ருமண்வான் வசந்தகன் ஆகிய இவர்கள் கோபாலகனுடன் இருக்கக் கண்டான்.

## பிரிந்தவர் கூடல்

உதயணனும் வாசவதத்தையும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு அழுதார்கள். அந்தக் காதலரிருவரும் திரும்பவும் ஒன்று கூடிய உருக்கமான காட்சியைக் கண்டு யௌகந்தராயணருடைய கண்களிலும் நீர் ததும்பியது.

அப்பொழுது வாசவதத்தையைப்பற்றிய உண்மையான விஷ யத்தைத் தெரிந்துகொண்ட பத்மாவதியும் கண்ணீர் சொரிந்தனள். உள்ளம் பிளந்துபோமாறு அழுது வாசவதத்தை, 'என் கணவனுக்குத் துன்பத்தையே விளைத்துக்கொண்டு நான் உயிர்வாழ்வதிற் பயனென்ன?' என்று ஓலமிட்டலறினாள். அப்பொழுது யௌகந்தராயணர், ''அரசே! மகதத்தரசனின் மகளை உமக்குக் கலியாணஞ் செய்வித்து உம்மை இந்தியா முழுமைக்கும் சக்கரவர்த்தியாக்கும் பொருட்டே இத்துணையும் செய்துள்ளேன். இந்தச் சூதுக்கு அரசி வாசவதத்தை சிறிதும் உத்திர வாதியல்லள். இவளுடைய நல்லொழுக்கத்திற்குப் பத்மாவதி அரசி யாரே சாக்ஷி'' என்று உதயணனுக்குச் சொன்னார்.

அதன்மீது பத்மாவதி பொறாமை சிறிதும் இல்லாதவளாய், ''இவள் குற்றமற்றவளென்றும் பதிவிரதையென்றும் மெய்ப்பிப்பதற்காக நான் இப்பொழுதே இந்த இடத்திலேயே தீக்குளிக்க*ச் சித்தமாயிருக்கிறேன்'' என்றனள். 'அரசனுடைய மனத்திற் சந்தேகம் தோன்றாதபடி** நானும் தீக்குளிக்க வேண்டும்' என்று வாசவதத்தையும் சொன்னாள்.

பின்பு யௌகந்தராயணர் வாய் கழுவிச் சுத்தஞ்செய்து கொண்டு, 'என் அரசனுக்கு நான் நன்மை செய்தேனேயாயின், வாசவதத்தை குற்றமற்றவளேயாயின், உலகங்காக்கும் திசைப்பாலகர்களே! வாய் விட்டுச் சொல்லுங்கள். இன்றேல், இன்னே உயிர் துறப்பேன்' என்று இறைஞ்சினர். உடனே ஆகாசவாணி, 'ஓ அரசனே! யௌகந்தராயணரை மந்திரியாகவும், முற்பிறப்பில் தேவதையாயிருந்த வாசவதத்தையை மனைவியாகவும் பெற்ற நீயே பாக்கியவான்; அவள்மீது குற்றம் எள்ளளவுமில்லை' என்று பகர்ந்தது.

அவ்வாறு யௌகந்தராயணர் வைராக்கியத்தோடு திசைப்பாலகர்களை வேண்டிக்கொண்டதற்காக உதயணனும் கோபாலகனும் அவரைத் தழுவிக் கொண்டனர்; பூமண்டலம் முழுதும் தன்வசம் ஆய்விட்டதெனவே உதயணன் நினைத்துக்கொண்டான். அதற்குப்பின் தன் இருமனைவியரோடு அவன் நிறைந்த சௌக்கியங்களை அனுபவித்து ஆனந்தமாகவாழ்ந்தான். அம் மனைவியரின் அன்பு அவன்மீது நாளுக்கு நாள் வளர்ந்து விளங்கியது.

உலக வழக்காகச் சொல்லும் இந்தக் கதையில் பாஸகவி அநேக மாறுபாடுகள் செய்துள்ளான். இவன் செய்துள்ள மாறுபாடுகளினால் கதை அழகுற்றது.

## பாஸன் செய்த கதை மாறுபாடுகள்

யௌகந்தராயணருடைய சபதங்கள்'' என்னும் நாடகத்தில் இவன் செய்துள்ள முக்கியமான மாறுபாடுகள் வருமாறு:-

---

* தீக்குளித்தல் - குற்றமின்மையை நிரூபிப்பதற்காக ஆரியர்கள் கைக்கொண்டிருந்த சோதனை. இதற்குப் பிரபலமான திருஷ்டாந்தம் சீதாதேவி தன்னுடைய கற்பை நிலைநாட்டுவதற்காகத் தீக்குளித்ததேயாம்.

** பலமனை யாட்சியுடையனாயினும், மனைவியருக்கு உண்மையாக நடந்து கொள்ளாதவனாயினும் அவனுக்கு அனுமான புத்தி போகவில்லை.

வாசவ தத்தையைக் காண்பதற்கு நெடுநாள் முன்னரே உதயணன் அவள்மீது காதல் கொண்டிருந்தானெனவும் ஊர்க்கதை சொல்லுகின்றது. இது நள தமயந்தி கதையிலுள்ளது போலாகும். பாஸன் ஒரு பார்வையிலே அவள்மீது மையல் கொண்டதாக மாற்றியுள்ளான். அதற்குச் சந் தர்ப்பத்தைப் பல்லக்கின் காலாட்கள் தோள்மாறுவதற்காகப் பல்லக்கு இறக்கிய இடத்தில் அவளை மூடுதிரையில்லாமல் தெளிவாகக் காணும் படி அமைத்துள்ளான். வாசவதத்தைக்கு வீணை கற்பிக்கும் விஷயமாக மகாசேனனுக்கும் உதயணனுக்கும் நடந்த கருவ வார்த்தைகளையும் சுடுசொற்களையும் பாஸகவி தவிர்த்துவிட்டான். உதயணனை வீணை யாசிரியனாக நியமிக்கும் விஷயம், அங்காரவதி அனுப்பிய தூது வாக்கியங்களினாலும், வீணை கற்பித்தலைப்பற்றிச் சொல்லும் சில அழகிய சுலோகங்களினாலும் மட்டுமே குறிப்பிடப்படுகின்றது.

நாடகத்தில் உதயணன் வாசவதத்தையை முதன் முதல் தற் செயலாகப் பார்த்தது மேற்சொல்லிய சந்தர்ப்பத்திலேயேயல்லாமல், அவளுக்கு வீணைப்பாடம் கற்பிக்க நியமனம் பெற்றபின் அன்று. அப் போது அவளை விவாகஞ் செய்துகொள்ளும் நோக்கத்தை விகாரமாகக் குறிப்பிட்டுச் சொல்லவுமில்லை. இவ்வாறு கதையின் சிறப்புத்தன்மை அதிகரிக்கப்பெற்றது.

யானைக் கதையைப்பற்றி அநேக மாறுபாடுகள் தொடர்ச்சி யாகச் செய்யப்பட்டிருக்கின்றன. உதயணனுடைய சாரணர்கள் வந்து அந்த அதிசய யானையைப்பற்றி அவனுக்குச் சொன்னதாக ஊர்க்கதை கூறு கின்றது. அதை மாற்றிப் பாஸன் ஒரு போர் வீரன் (மகாசேனனின் ஒற்றனென்பது தெளிவு) வந்து அவனுக்குச் சொல்வதாகத் திருத்தி யிருக்கிறான். அந்தப் போலியானைக்கு உண்மைத்தன்மை தோன்றுமாறு உண்மையான யானைக்கூட்டமொன்றை இடையிற் கொண்டு வந்து சேர்க்கிறான். தரை மீது நின்று வேட்டைவாளைக் கைக்கொண்டு போர்புரிகிறானென்பதற்குப் பதிலாக, சுந்தரபடலம் என்னும் தன் குதிரை மீதிருந்து ஈட்டியைக்கொண்டு, மகாசேனனுடைய படையாட் களோடு சண்டைசெய்ததாகப் பாஸன் காட்டியுள்ளான். அவனைச்சேர்ந்த இருபது பிரபுக்கள் அவனுடன் போய்ப் போரிலமர்ந்து மாண்டன ரெனவும் சொல்லியிருக் கிறான். அதற்குப்பின் அரசனைக் கொடி களினாலும் மிலாறுகளினாலும் கட்டுகிறார்களே யல்லாமல், அவன் சண்டை செய்துகொண்டிருக்கையில் பின்புறமாக வந்து, ஊர்க்கதையிற் போலக் கட்டவில்லை. உறவினரைப் போரிற் பலிகொடுத்த வீரர்களின் புலம்பல்கள், ஒரு தனி வீரன் உதயணன் குடுமியைப் பிடித்திழுத்து அவன் தலையை வெட்ட முயன்றது, அம் முயற்சியில் அவன் இரத்தம் படிந்த

தரையில் வழுக்கி இறந்தது, முற்போரிலே காயமுண்ட சாலங்காயனன் அவ்வாபத்தான வேளையில் தெளிந்தெழுந்துவந்து உதயணனை அதற்கு மேலும் கொடுமைப்படுத்தாமல் செய்தது ஆகிய இவையெல்லாம் ஊர்க்கதையில் இல்லை; பாஸ கவியின் சொந்த கற்பனைகளே.

ஹம்ஸகன் என்னும் ஆளையனுப்பி உதயணன் தன் நிலைமையை யௌகந்தராயணருக்கு அறிவித்ததாகவும் அவளை விடுவிப்பேனென்று அவர் சபதம் செய்ததாகவும் ஊர்க்கதை சொல்வதில்லை. கதையில் மகாசேனனுடைய சைனியம் சிறந்ததென்று யௌகந்தராயணர் சொல்லுகிறாரேயல்லாமல், நாடகத்தின் முதலாம் அங்கம் நான்காம் சுலோகத்திலுள்ளதுபோல இழிவாகக் கூறவில்லை. இரட்சாஸனாத் திரத்தையும் பேரரசியின் ஆசிமொழிகளையும் பற்றிச் சொல்லுகிற இனிமையான வாக்கியங்கள் உலகியற்கதையில் இல்லை. யானைக் காட்டுக்கு உதயணன் புறப்படும் சமயத்தில அந்த வேளையின் பயனாக அவன் ஒரு பெண்ணையடைந்து சிறைப்படுவானென்று சோதிடர் கூறுகிற நாடகாலங்காரத்திற் கேலாத வார்த்தைகள் நாடகத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அவ்விடத்தில் அற்புதரஸம் தோன்றவேண்டும். அந்தச் சோதிடக் கூற்றுக்கள் அவ்வற்புத ரஸத்தைக் கெடுக்குமாதலின் அவை விடப்பட்டன. அதுபோலவே, உதயணனை எதிர் கொண்டு மகாசேனன் அரசாங்க மரியாதைகளுடன் அவளை நகரத்திற்குள் அழைத்துக்கொண்டுபோனதாகவும் நாடகத்தில் சொல்லவில்லை.

ஊர்க்கதையில யௌகந்தராயணர் பெரிய மந்திரவாதி; மாயாவி. அம்மந்திரவலிமையால் அவர் தம் வடிவத்தையும் வசந்தகனுடைய வடிவத்தையும் மாற்றி விடுகிறார்; பிறர் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து செயல் புரிகின்றார்; இன்னும் பலப்பல சித்துக்கள் செய்கிறார். நாடகத்திலோ, துவைபாயனர் விட்டுப்போன ஆடையையணிவதனால் யௌகந்தராயணர் உருமாறுகின்றாரேயல்லாமல், தம்முடைய சொந்த மந்திரசக்தியினாலன்று. வாசவதத்தையின் உருவத்தை அவர் மாற்றியதாகச் சொல்லவில்லை. நாடகத்தில் ருமண்வானும் உஜ்ஜைனிக்குப் போகிறான். கதையிலுள்ளதுபோலக் கௌசாம்பியில் தங்கியிருக்கவில்லை. கதையிலுள்ளதுபோல யௌகந்தராயணரை அரண்மனைக்கு வாசவதத்தை அழைக்கவில்லை. அவர் உதயணனோடு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து தம் சூழ்ச்சிகளையெல்லாம் விரித்துரைக்கவில்லை. விலங்கை முறிப்பதற்கும், வாசவதத்தையின் மனத்தைக் கவர்வதற்கும், இவை போன்ற வேறு சில காரியங்கள் செய்வதற்கும் அவர் உதயணனுக்கு மந்திரோபதேசம் செய்யவில்லை.

மறுபடி யௌகந்தராயணர் உதயணனுக்கும் வசந்தகனுக்கும் மட்டுமின்றி மற்றெவருக்கும் புலப்படாமல் உதயணனைப் பார்த்துப் பேசவில்லை. மகாசேனனை அவமானப்படுத்தும்பொருட்டு வாசவ தத்தையையெடுத்துக் கொண்டு போவோமென்று சொல்லவும் இல்லை. இதைக் காட்டிலும் உலகியல் ஒழுக்கத்திற்கேற்ப, மந்திரிகள் மூவரும் மாறுவேடம்பூண்டு, ஜன நடமாட்டமில்லாததோரிடத்தில் ஒரு பழைய கோயிலிற் கூடிக் கலந்து பேசிக்கொண்டு, ஜனங்கள் நடமாடத் தொடங்கியவுடன் வேறு வேறு வாயிலாகப் பிரிந்து வெளியேறுகிறார் கள். வசந்தகன் மட்டும் அரசனைச் சந்தித்து அவனுக்கும் யௌகந்த ராயணருக்கும் ருமண்வானுக்கும் இடையே செயல்புரிகிறான். மகா சேனனை அவமானப்படுத்தும் பெருட்டு வாசவதத்தையையெடுத்துக் கெண்டு போய்விடுவோமென உதயணனே ஆலோசனை சொல்லு கிறான். அதை ஒப்பாமல் யௌகந்தராயணர் கோபப்படுகிறார்.

யௌகந்தராயணர் சண்டை செய்யாமலே கதையில் உதயண னும் வாசவதத்தையும் ஓடிப்போகிறார்கள். அவர்கள் ஓடிப்போன பின் யௌகந்தராயணர் சண்டை செய்ததாக நாடகத்திற் சொல்லப்படுகின்றது. ஊர்க்கதையில் மகாசேனனும் அரசியும் தங்கள் மகன் கோபாலகனைக் கௌசாம்பிக்கு அனுப்பி அவன் மூலமாகத் தங்கள் ஆசீர்வாதத்தைத் தெரிவிக்கிறார்கள். விவாகத்தை வெளிப்படையாக உதயணன் அங்கே நடத்திக்கொள்கிறான். யௌகந்தராயணருக்கும் பரதாரோகனுக்கும் நடந்த வாக்குவாதம், அங்காரவதி தற்கொலை செய்துகொள்ளும் முயற்சி, யௌகந்தராயணருக்குப் பொற்கிண்ணம் அளிக்கும் உருக்கமான நிகழ்ச்சி, உதயணனுடைய படத்தையும் வாசவதத்தையினுடைய படத்தையும் வைத்து விவாகோற்சவம் கொண்டாடல் ஆகிய இவை யெல்லாம் பாஸகவியின் சொந்த கற்பனைகளே.

'சுவப்பன வாசவதத்தத்'திலும் பாஸகவி ஊர்க்கதையைப் பெரிதும் மாற்றியிருக்கின்றான். உதாரணமாக உதயணனுக்குச் சொந்த மாக ஆசையில்லாவிடினும் அவனை உலகத்திற்கெல்லாம் அரசனாக்கும் கருத்துக்கொண்டு வாசவதத்தை தீயில் எரிந்துபோனதாகப் புரளி யெழுப்பவேண்டுமென்று யௌகந்தராயணர் ஆலோசனை சொல்லி, உதயணனுக்கும் பத்மாவதிக்கும் விவாகமாகும்படி செய்கிறார். தங்கள் அரசன் உலகம் முழுவதையும் ஜயித்து இராசசூய யாகம் செய்ய வேண்டுமென்று மந்திரிகள் ஆசைப்படுவது ஆரியர்களுக்கு உண்டான பெருநோக்கம். ஆயினும், அந்த ஆசையை நிறைவேற்றுவதற்காக யௌகந்தராயணர் இப்படிப்பட்ட காரியங்கள் செய்ததை நாடகம் பார்க்கும் ஜனங்கள் பெரும்பாலார் ஒப்புக்கொள்ளமாட்டார்களென்பது தெளிவு. பாஸன் மானிடர் இயல்பை நன்கு உணர்ந்தவன். ஆதலால்

இவன் இந்தக் கதையை மாற்றிவிட்டான். உதயணனைச் சக்கராதிபதி யாக்கும் பொருட்டு இப்படிப்பட்ட திடுக்கிடத்தக்க காரியங்களைச் செய்து யௌகந்தராயணர் உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் எல்லை யில்லாத் துன்பம் விளைவித்தாரென்னாமல், கௌசாம்பியையும் வத்ஸ நாட்டையும் ஆக்கிரமித்துக்கொண்டிருந்த ஆருணியின் கையினின்று அதை விடுவிக்கும் பொருட்டே இங்ஙனம் செய்தார் என்று பாஸன் சொல்லுகிறான். ஊர்க்கதையிற் சொல்லப்படுகிற காரணத்திற்காக யௌகந்தராயணர் இங்ஙனம் செய்தாரென்றால், அவர்மீது ஜனங்கள் எவ்வளவு குற்றம் சொல்வார்களோ, அவ்வளவு நாடகத்திற் சொல்லிய காரணத்திற்காகச் சொல்லமாட்டார்கள் என்பதேயாம்.

வாசவதத்தையின் தமையனான கோபாலகனும், உதயணனை உலகத்திற்கெல்லாம் அரசனாக்கும்பொருட்டு இந்தச் சூழ்ச்சியிற் கலந்திருந்தானென்று கதையிற் சொல்லப்படுகின்றது. இதில் இரண்டு விதமான குற்றங்கள் இருக்கின்றன. முதலாவது, தன் தங்கைக்குப் பதிலாக வேறொருத்தியை அரசியாக்குவதற்கு அவன் உடன்பட்ட வனாகின்றான். இரண்டாவது, அவன் அரசியல் விவகார தந்திரங்களில் கைதேர்ந்தவனென்று அவனுடைய தகப்பனார் சொல்லியிருக்க, தன் சொந்த தந்தையையும் இராச்சியத்தையும் வென்று உதயணன் சக்கரவர்த்தியாவதற்கு அவன் ஒப்புக்கொள்கிறான் என்பதுமாகும். கோபாலகனுடைய பெயர் இந்தச் சூழ்ச்சியிற் சம்பந்தப்பட்டதாகச் சொல்லாததனால் நாடகாசிரியன் மேற் சொல்லிய குற்றங்களுக்கு இடமில்லாமற் செய்தான்.

வாசவதத்தையுடன் வசந்தகனும் தீயினுக்கு இரையாயினான். வாசவதத்தையையும் வசந்தகனையும் அழைத்துக்கொண்டு யௌகந்த ராயணர் இராஜகிருகத்திற்குப் போய்ப் பத்மாவதியிடம் வாசவதத்தையை ஒப்புவித்து விட்டு, காட்டினின்று உதயணன் திரும்பி வருமுன்னரே, இலாவாணகத்திற்குத் திரும்பி வந்துவிட்டாரென்று கதை கூறுகின்றது. இதில் ஒரு குற்றம் இருக்கின்றது. யௌகந்தராயணர் மகதத்துக்குப் போய் வந்தபின்னரே உதயணன் வேட்டையாடிக் காட்டிலிருந்து திரும்பி வந்தானென்பது பொருந்தாது. ஆகையால் வாசவதத்தையோடு நெருப் பில் மாண்டது யௌகந்தராயணர் என்று பாஸன் சொல்லுகிறான். ஆவந்திகையைத் திரும்ப அழைத்துக்கொண்டு போக வரும்போதே கடைசியில் யௌகந்தராயணர் அரசனுடன் மறுபடி சேர்வதாக அவரைக் கொண்டு வருகிறான்.

யௌகந்தராயணருடைய நடவடிக்கையையும் கோபாலக னுடைய நடவடிக்கையையும் பார்த்தும், சில சோதிடர்களுடைய

முற்குறிப்பை ஞாபகப்படுத்திக்கொண்டும், வாசவதத்தை இறந்துபோக வில்லையென்று உதயணன் அனுமானிக்கிறான்; 'இனி ஒருகால் அவளோடு கூடி வாழ்வோ'மென்னும் ஆசையோடிருக்கிறான். இப்படிச் சொல்வதனால் நாடகத்தின் அதிசயத்தன்மை குறைந்து போகின்றது. ஆதலால் பாஸன் இதை எடுத்துக்கொள்ளவில்லை; இதற்குப் பதிலாக, பத்மாவதியின் நெற்றிப் பொட்டு அழியாதிருந்ததைக் கண்டு, வாசவ தத்தை உயிரோடிருக்கிறாளென்று அரையனுமானங் கொள்கிறானென்று சொல்லியிருக்கிறான். கதையின்படி பார்த்தால், வாசவதத்தையைக் குறித்து உதயணன் புலம்புவது பிள்ளைத்தனமான உணர்ச்சியெனத் தோன்றும்; பத்மாவதியை மணந்துகொள்வது பலமனையாட்சிக்காரருக்கு வழக்கமாயுள்ள காரியமெனத் தோன்றும். ''அரசி இறந்துபோகவில்லை; மறுபடி அவளோடு கூடிவாழ்வோ''மென்னும் எண்ணம் உதயணனுக்கு இருக்குமாயின், வாசவதத்தையின் பிரிவாற்றாமல் அவன் படும் கடுவேதனையும், பெருந்துயரும், புலம்பும் அன்புமொழிகளும் பய னற்றனவாகத் தோன்றும். நீராழிமண்டபத்தில் அவன் காணும் கனவுக் காட்சியின் அருமையும் அழகும் இனிமையும் தோன்றாவாகும். வாசவ தத்தையின் கனவுக்காட்சி 'வாசவதத்தையின் காட்சி'யேயாகிவிடும்.

இந்நாடகத்திற்குள் சிறந்த காட்சி நீராழி மண்டபத்துக் கனவுக் காட்சியே. அதனாலேயே இந்நாடகத்திற்குச் ''சுவப்பன வாசவதத்தம்'' என்னும் பெயர் வந்துள்ளது. ஊர்க்கதையில் அந்தக் காட்சியே இல்லை. கதையின்படி வத்ஸராஜன் கலியாணமானவுடன் இராஜகிருகத்தைவிட்டு நீங்கிப்போகிறான்; அங்கேயே இருந்தால் வாசவதத்தையை ஒருவேளை அவன் காணுவதற்காகும்; அதனால் யௌகந்தராயணர் செய்த சூழ்ச்சி யெல்லாம் பங்கமாய்ப்போகும் என்னும் காரணத்தினால் அவன் அவ்வூரைவிட்டுப் போகும்படி அவர் செய்தார் என்பதாகின்றது.

'பத்மாவதியின் மணமாலையை வாசவதத்தை தொடுப்பது, இது, என்ன! என் பாக்கியக்குறைவு! இந்தக் காரியமும் என் தலைமீது விடிந்ததே! என் பிரியநாயகரும் இப்பொழுது வேறொருத்திக்கு உரிய வராயினரே' என்று அவள் ஓலமிடுவது முதலான ரஸமான நுண்ணிய அமிசங்கள் கதையில் இல்லை.

ஊர்க்கதையில் வசந்தகனுடன் வாசவதத்தையை யௌகந்த ராயணர் அரண்மனை முற்றத்திற்கு அழைத்துக் கொண்டு போன போது வாசவதத்தையின் மீது பத்மாவதி முதற்பார்வையிலேயே அன்பும் ஆசையும் கொண்டாளென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால் தவச்சாலையின் அரியவர்ணனையும், அங்கு நடந்த இனிமையான காட்சி யும், பத்மாவதி பக்திவிசேஷத்தினால் அறவோர்க்குக் கொடையளிக்கும்

அழகிய விதமும், தவத்தினரொருவரின் வேண்டுகோட்கிணங்கிப் பத்மாவதி அந்த வாசவதத்தையைத் தன் பார்வையில் வைத்துக் காக்க ஒப்புக்கொண்டு பெருங் குணமும் சுவையற்றுக் களையற்றுக் காணா மற்போகும்.

ஊர்க்கதையில், பத்மாவதியின் விவாக முகூர்த்த சமயத்தில், உதயணனுக்கு ஒருபோதும் தீங்கிழைப்பதில்லையென்று மகதத்தரசன் அக்கினி சாக்ஷியாகப் பிரமாணம் பண்ணும்படி யௌகந்தராயணர் செய்கிறார். இது மிக விகாரமாகவும் நாடகவியலுக்குப் பொருந்தாத தாகவும் இருக்கின்றது. இப்படிச் சொல்வதனால், உதயணனுக்கு மகத அரசன் சமயோசிதமாகத் தானே முன்வந்து உதவிசெய்தானென்னும் பெருமை அழிந்துபோகின்றது. அவன் சொல்லியனுப்பிய தூதுச்செய்தி யின் அழகும் ஐந்தாம் அங்கம் 12-ஆம் சுலோகத்திலடங்கிய நட் புரிமையும் நாகரிகச்சிறப்பும் மறைந்துபோகும்.

நாடகத்தில், கௌசாம்பியில் தன் கணவன் வீட்டிற்குப் பத்மாவதியுடன் வாசவதத்தை போகின்றாள். அங்கு நிகழும் விஷயங்கள் வாசவதத்தையின் உண்மையுரு வெளிப்படுவதற்குச் சரியான ஏது வாகின்றன. கதையின் படி பத்மாவதியினின்று பிரிந்து வாசவதத்தை போர்ப்படையின் பின்னணியோடு சேர்ந்து இலாவாணகத்திற் கோபால கனுடைய வீட்டுக்குப்போய் அவனைத் தழுவிப் புலம்புகிறாள். இந்த உளவு தெரிந்து பத்மாவதி சிற்ற முற்று, தன் வசமாயிருக்கத்தக்க வாசவதத்தையைத் தன்னிடம் திரும்பிவந்து சேரும்படி அவளுக்குச் சொல்லியனுப்புகிறாள். பத்மாவதி கலக்கமுற்றுத் திகைக்கையில் அவளுடைய நெற்றிப்பொட்டு அழியாதிருப்பதை வத்ஸராஜன் கண்டு ஆவந்திகையே வாசவதத்தையாக இருக்க வேண்டுமென்று அனுமானப் படுகிறான். கோபாலகனுடைய வீட்டுக்கு ஓடிப்போகிறான். அங்கே வாசவதத்தையைப் பார்த்து அவளைக் கண்டுகொள்கிறான். எல்லாரும் அழுகிறார்கள். வழக்கம்போல வாசவதத்தையும் பத்மாவதியும் தீக்குளிக்க முன்வருகிறார்கள். வாசவதத்தை பரிசுத்தமானவளென்று பகரும்படி யௌகந்தராயணர் விண்ணவரை வேண்டுகின்றார். அதன் மீது ஆகாசவாணி பேசுகின்றது.

இவையெல்லாம் சீதாதேவியினது போன்ற பேர் பெற்ற கதை களைப்பார்த்து மாறுபடுத்திப் போலிசெய்த செய்திகளாம். இவை நாடகத்திற்குச் சிறிதும் ஏலாத வீண் சுமைகளெனப் பாஸன் இவற்றை யெல்லாம் ஒழித்து விட்டான். ஊர்க்கதையை அனுசரித்து நாடகத்தை எழுதியிருந்தால் வாசவதத்தையைத் தன் பராமரிப்பிலேயே எப்போதும் வைத்துக் கொண்டிருப்பதாக யௌகந்தராயணருக்குப் பத்மாவதி

கொடுத்த வாக்குறுதி நிறைவேறாதாகும். வாசவதத்தை தன் இயல்புக்குத் தகாத விதமாக நடந்துகொண்டிருப்பாள். வாசவதத்தையை யௌகந்த ராயணர் பத்மாவதியின் வசம் ஒப்புவித்து, அவளுடைய நல் லொழுக்கத்திற்குச் சான்றாகும்படி செய்வது, வத்ஸராஜனுக்கு வாசவ தத்தையின் கற்பையுணர்த்தும் பொருட்டுத் தீக்குளிக்க முன்வருவது போலவும், ஆகாசவாணி வந்து சாக்ஷி சொல்வது போலவும் பய னற்றதாகும்.

வத்ஸராஜன் தன் நாட்டைத் தவிர வேறு எதனையும் வெல் லாதவன், உலகமுழுவதையும் வென்றதாக நினைத்துக் கொண்டா னென்று கபடமில்லாமற் கதையிற் சொல்லப்பட்டிருக்கின்றது. பாஸன் இருந்தது சந்திரகுப்த சக்கரவர்த்தியின் காலமாகும். சந்திரகுப்தனோ, வத்ஸராஜ்யத்தைக் காட்டிலும் நூறுமடங்கு பெரிதான இராஜ்யத்தை ஆண்டுகொண்டிருந்தான். ஆனதனால் வத்ஸராஜன் உலக சாம்ராஜ்யம் பெற்றானென்னும் மாயையைக் கைக்கொள்ளாமல் ஒதுக்கிவிட்டான். யௌகந்தராயணர் செய்த சூழ்ச்சிக்கு அதைக் காரணமாகக் கொள்ளாமற் கைவிட்டதனால், ஆருணி என்பவனொருவன் வத்ஸராஜ்யத்தை ஆக்கிர மித்துக்கொண்டிருந்தானெனப் பாஸன் கற்பனை செய்யவேண்டிய தாயிற்று. அரண்மனை நந்தவனத்தில் அழகிய காட்சியைக் கற்பித்தவனும் பாஸனே. அதைப்போலவே, தனது சிறந்த கோஷவதி அரசன் கைக்கு வந்து சேர்ந்த கதையையும், அதைப் பழுதுபார்த்து வைத்துக்கொண்டு வத்ஸராஜன் துக்கித்த உப கதையையும், உற்ற தருணத்தில் உஜ்ஜைனி யிலிருந்து கஞ்சுகியும் தாதியும், உதயணனுடைய படத்தையும் வாசவ தத்தையின் படத்தையும் வைத்துக் கலியாணம் நடத்தியதாக அவர்கள் அப்படங்களைக் கொண்டுவந்த காட்சியையும், இவைபோன்ற அழகான வேறு காட்சிகளையும் கற்பனை செய்தவன் பாஸனே.

இந்த இரண்டு நாடகங்களையும் ஜனங்கள் பெரிதுங் கொண் டாடினார்கள். இவைகளைப்போல அநேக நாடகங்கள் எழுதலானார் கள். உதாரணமாக, ''வீணா வாசவதத்தம்'' என்பதும், ''உன்மத்த வாசவதத்தம்'' என்பதும் ''பிரதிக்ஞா யௌகந்தராயண''த்தைத் தழுவி எழுதப்பட்டனவாகும். ''பிரியதரிசிகை'', ''ரத்னாவளி,'' ''மாளவிகாக்நி மித்ரம்'' என்பனவும் ''சுவப்பன வாசவதத்தத்''தின் போலிகளேயாம்.

''ரத்னாவளி'' என்னும் நாடகத்தில் அரசி வாசவதத்தைக்குச் சாகரிகை என்னுமொரு பரிசாரிகை இருந்தாள். அவள்மீது உதயணன் இரகசியமாகக் காதல்கொண்டொழுகியது வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. தீ விபத்தொன்று நேர்கின்றது. முடிவில் சாகரிகையையும் உதயணன் கலியாணஞ் செய்துகொள்ளுகிறான். நீராழி மண்டபத்தில் தோன்றும்

ஆவந்திகைக்குப் பதிலாகச் சாகரிகை வைக்கப்பட்டிருக்கிறாளென்பது சொல்லாமலே தெரியும்.

''பிரியதரிசிகை''யிலும் தன் அரசியின் பணிப்பெண் ஆரண்ணியகையின் மீது உதயணன் ஆசைகொண்டு இரகசியமாக அளவளாவுகின்றான். அந்த விவகாரம் வெளியாகிவிடுகின்றது. முடிவில் அவனுடைய அரசியேஆரண்ணியகையை உதயணனுக்கு இரண்டாம் மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி செய்கிறாள். ஆரண்ணியகை என்பவள் அங்கதேசத்தரசனின் குமாரியெனத் தெரிகின்றது. விரசிகை யையும், ஆவந்திகையையும் ஒருமித்து ஆரண்ணியகை என்பவளை அந் நாடகாசிரியன் சிருஷ்டித்துள்ளானென்று சொல்லவும் வேண்டுமோ!

''மாளவிகாக்நிமித்திர''த்தில் அக்நிமித்திரனென்பவன் தன் அரசியின் வேலைக்காரியின்மீது ஆசைப்படுகிறான். அவள் மாளவிகை எனப்படுவள். அவள் அழகிற் சிறந்தவளானமையின், அரசனின் கண் ணுக்குப் படாதபடி பொறாமையினால் அரசி அவளை மறைத்தே வைக்கிறாள். கடைசியில், அவன் மாளவிகையை மணந்துகொள்கிறான். அவள் ஒரு அரசகுமாரியென்று ஏற்படுகின்றது. மாளவிகை என்னும் நாடகபாத்திரம் ஆவந்திகை என்பதை ஒத்திருக்கிறதென்று நாம் வற் புறுத்திக் காட்டவேண்டியதில்லை. 'மாளவ' என்னும் சொல்லுக்கு 'அவந்தி' என்று அர்த்தம். பாஸன்காலத்தில் அவந்தி எனப்பட்ட தேசமே காளிதாசனுடைய காலத்தில் மாளவம் என வழங்கப்பெற்றது.

★★★

# பாஸனின் இரட்டை நாடகங்கள்

## 1. யௌகந்தராயணர் சபதங்கள்

### நாடக பாத்திரங்கள்

### ஆடவர்

**யௌகந்தராயணன்** - உதயணனது முதன் மந்திரி, பைத்தியக்கார வேஷத்தோடும் வருகிறான்.

**சிரமணகன்** - உதயணனது மந்திரி ருமண்வான் பௌத்த பிக்ஷு வேஷந் தரித்தவன்.

**விதூஷகன்** - உதயணனுக்கு உற்ற நண்பன், வசந்தகன்.

**பிராமணன்** - யௌகந்தராயணனது ஆள்.

**ஹம்ஸகன்** - உதயணனது பிரியாத்துணைவன்.

**காத்திரசேவகன்** - யௌகந்தராணனது ஒற்றன்; வாசவதத்தையின் யானையாகிய பத்திராவதியின் மாவுத்தனாக மாறுவேஷம் பூண்டவன்.

**சாலகன்** - யௌகந்தராயணன் உத்தேசித்த தூதன்.

**நிர்முண்டகன்** - யௌகந்தராயணனது வீட்டு சர்க்கீர்.

**மகாசேனன்** - அவந்தி அரசனான பிரத்யோதன். வாசவதத்தையின் தந்தை.

**பரதாரோஹகன்** - மகாசேனனது முதன் மந்திரி.

**பாதராயணன்** - மகாசேனனுடைய பரபத்தியக்காரன்.

**ஒருகாவலன்** - வாசவதத்தையின் வேலைக்காரன்.

**இரண்டு படியாட்கள் (தைநாத்திகள்)** - பரதாரோஹகனுடைய ஆட்கள்.

### மகளிர்

**அங்காரவதி** - மகாசேனனது பட்டத்தரசி.

**விஜயை** - யௌகந்தராயணன் வீட்டு வாயிற்காவலாளி.

★★★

## நாடகத்திற் குறிப்பிட்டும் அரங்க மேறாதவர்கள்

### ஆடவர்

**உதயணன்** - வத்ஸ தேசாதிபதி

**சாலங்காயனன்** - மகாசேனனது மந்திரி.

### மகளிர்

**வாசவதத்தை** - மகாசேனனது புத்திரி

**அரசி** - வத்ஸனது தாயார்.

# யௌகந்தராயணர் சபதங்கள்

## அங்கம் -1

### பிரஸ்தாவனை

*(நாந்தி பாடி முடிந்தவுடன் சூத்திரதாரன் பிரவேசிக்கிறான்)*

***சூத்திரதாரன் :***

1. ஊழியின் இறையாம்* உருத்திரன் மைந்தன்
பொருபடைத்தலைவன், முருகவேள், அந்நாள்
தாருகன் பகையை வேரற வீழ்த்தி
வாகையும் மகிழ்வும் வாசவற் கருளினான்,
அளவிலா ஆற்றலின் இளைஃயவேல் வேந்தன்,
வருக! வெவ்விதியற அருளுக, உனக்கே!

*(அரங்கமேடையின் பின்புறத்தைப் பார்த்துக்கொண்டே முன்னும் பின்னும் நடக்கிறான்)*

*நற்குண நங்காய்! இங்கே வா.*

*(நடி ஒருத்தி வருகிறாள்)*

**நடி :** இதோ வந்தேன், ஐயா!

---

* யுகந்தரன் - ஒவ்வொரு கற்பத்தின் முடிவிலும் சர்வ சங்கார கர்த்தாவாயிருக்கிற அழித்தற் கடவுளாகிய சிவபிரான். இந்துக்களின் திரிமூர்த்திகளில் இவர் மூன்றாமவர். முதலிருவராவார் ஆக்கற் கடவுளாகிய பிரம்மதேவர், காத்தற் கடவுளாகிய விஷ்ணு. சிவபெருமானுடைய இளங்குமாரர் பாலராஜன், வத்ஸராஜன், ஸ்கந்தன், கார்த்திகேயன், சுப்பிரமணியன் எனப்படுவர். இவர் தேவேந்திரனை மிகக் கொடியனாகிய தாரகாசுரனுடைய பீடையினின்று தப்புவித்துக் காத்தவர். மூத்த குமாரர் கணபதி எனப்படுவர்.

இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட முக்கியமான நாடக பாத்திரங்களின் பெயர்களெல்லாம் அவர்களுக்கும், தேவர்களுக்கும் பொருந்துமாறு சிலேடையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

**சூத்திரதாரன் :** மாதே! ஒரு பாட்டுப்பாடி இங்கே வந்திருக்கிற மகா ஜனங்களின் மனம் மகிழச் செய். அதற்குப் பின் நம் நாடகம் தொடங்குவோம். ஏன் தயங்குகிறாய்? நீ பாடப் போகிறாயா? இல்லையா?

**நடி :** என் உறவினர்களுக்கு ஏதோ இடர் நேரிட்டிருப்பதாக இன்றைக்குக் கனவு கண்டேன். அதனால் பாடுவதற்கு மனம் வரவில்லை. அவர்களெல்லாரும் க்ஷேமமாயிருக்கிறார்களென்று தெரிந்து வருவதற்கு ஓர் ஆளை அனுப்பக் கோருகிறேன்.

**சூத்திரதாரன் :** அவசியம் அனுப்புகிறேன்.

2. போக்குவன் தூது
சீக்கிரமாகப் (போக்)

ஆற்றலும் உனக்கு நல்லுரிமையும்
ஏற்றவன் இருக்கிலன் ஒருவனைப் (போக்)

*(திரைக்குப் பின்னால் குரல்: சாலகா, தயார்தானா?)*

**சூத்திரதாரன் :**

போவென யௌகந்தராயணன்
ஏவிய தூதனை ஒப்பவே (போக்)

*(போகிறார்கள்)*

*(பிரஸ்தாவனை முற்றிற்று)*

*(சாலகனோடு யௌகந்தராயணன் வருகிறான்)*

**யௌகந்தராயணன் :** சாலகா! சித்தமாயிருக்கிறாயா?

**சாலகன் :** சித்தம், ஐயா.

**யௌகந்த :** நீ நெடுந்தூரம் போகவேண்டியிருக்கிறது.

**சாலகன் :** தங்கள்மீது எனக்குள்ள ஆசையினால் அதினின்றும் அதிக தூரமும் பேகாவல்லேன், ஐயா.

**யௌகந்த :** ஆ! பலவானும் பக்தனும் வெகுதூரம் போவான், ஆதலினாலே

3. அரிய பணியை இடுக, மெய்மை
அன்பர் நின்று புரிய! இன்றேல்
விரவு சீலம் அறிவு பூண்ட
மேன்மையாளர் கையை உறுக!
உற்ற அன்பர் யாவரேனும்,
உன்னி ஏது திட்டமிடினும்
வெற்றி தோல்வி விதியினாகும்!
வேறு நியதி இல்லை கண்டேன்!

என்று சொல்லுகிறார்கள்.

நாளையதினம் அரசர் மூங்கிற் காட்டைவிட்டு நீங்கி, மூன்று அடர்ந்த காட்டுகளின் வழியாக, யானைக்காட்டுக்குப் போகிறார். அவர் புறப்படுமுன் நீ போய்ச் சந்திக்க வேண்டும்.

சாலகன் : சொல்லவேண்டிய சமாசாரம் அடங்கிய கடிதமொன்று என் கையிற் கொடுப்பீர்களென்று நினைக்கிறேன்.

யௌகந்த : விஜயா!

(விஜயை வருகிறாள்)

விஜயை: இதோ இருக்கிறேன். ஐயா!

யௌகந்த : விஜயா, அந்தக் கடிதத்தையும் ரக்ஷாசூத்திரத்தையும்* விரைந்து எடுத்துக்கொண்டு வா.

விஜயை : அங்ஙனமே ஐயா! (போகிறாள்)

யௌகந்த: இதற்குமுன் எப்பொழுதேனும் அவ்வழிச் சென்றிருக்கின்றாயா?

சாலகன் : இல்லை, ஐயா! ஆனால் அதைப்பற்றிக் கேள்விப்பட்டுள்ளேன்.

யௌகந்த : அதுவும் அறிவுக்குறியே. நல்லது, நமது அரசரை பிரத்யோதன் ஏமாற்றிக்கொண்டு போகச் சூழ்ச்சி செய்வதாக நமக்குச் செய்தி

---

* பூதங்கள், சத்துருக்கள் துஷ்டாவேசங்கள் முதலியவைகளினின்றும் காப்பதற்கான ரக்ஷைக் கயிறு.

வந்திருக்கிறது. செய்யப்பட்ட போலி நீலயானை யொன்றை யானைக்காட்டில் வைத்து, அதைச் சுற்றிக் காட்டானை யென்பவைகளை நிறுத்தப் போகிறானாம். இந்த நீலையானை உண்மையானதென்று நமது அரசர் ஏற்கெனவே நம்பி மோசம் போகாதிருப்பாரென்று நம்புகிறேன். ஆனால், ஓ, வத்ஸராஜர்களிடத்து பிரத்யோதனுக்கு எவ்வளவு பயம் இருக்கவேண்டும். அவனது பெரும்படை பயனற்றதென்பது தெளிவாகத் தெரிகின்றது.

4. உண்டு பெரியசேனை! என்னில்
ஒருமையில்லை அங்கே - நல்ல
தண்டு வீரர் உள்ளார்! ஆயின்
சான்ற நேயம் இல்லை! (உண்டு)

கண்டு சூழ்ச்சி செய்தான் - மன்னன்
கபடு நெஞ்சிலுற்றான்! நேரில்
சண்டை பண்ணும் ஆற்றல் - இல்லான்
தாழ்வு தேடி விட்டான்! (உண்டு)

வாழ்க்கை யென்றபோரில் - அன்பு
மாறிநிற்கும் இல்லாள் - போலப்
பாழ்த்த சேனை கொண்டான்! - சமரின்
பான்மை கெட்டு நின்றான்! (உண்டு)

*(விஜயை வருகிறாள்)*

**விஜயை :** இதோ கடிதம் கொண்டு வந்துவிட்டேன். ஐயா! ரக்ஷா சூத்திரத்தை அவசரமாகத் தயார் செய்து சுமங்கலிகளெல்லாரும் அதை ஆசீர்வதித்துக்கொண்டிருப்பதாகத் தாயார் பேரரசியார் சொல்லுகின்றார்.

**யௌகந்த :** விஜயா! ரக்ஷைக்கயிற்றைச் சுமங்கலிகளெல்லாரும் தொட்டு வாழ்த்தியிருந்தாலும் சரி, ஒரே சுமங்கலி வாழ்த்தியிருந்தாலும் சரி, அதை உடனே என்னிடம் சேர்ப்பிக்கும்படி நான்கேட்டுக் கொண்டதாக அரசியாரிடம் சொல்.

**விஜயை:** சித்தம், சுவாமி! (போகிறாள்)

*(நிர்முண்டகன் வருகின்றான்)*

*நிர்முண்டகன் :* உங்களுக்கு ஆரோக்கியம் உண்டாகுக, ஐயனே!

*யௌகந்த :* என்ன செய்தி நிர்முண்டகா?

*நிர்முண்டகன் :* ஐயா! நமது அரசரது உபதளகர்த்தனாகிய ஹம்ஸகன் பாசறையினின்று இங்கே வந்திருக்கிறான்.

*யௌகந்த :* ஏன், ஹம்ஸகன் மட்டும் தனித்து வருவானேன்? சாலகா! சற்றுப்பொறு. அதற்குப் பிறகு நீ மும்மடங்கு வேகமாகப் போகவேண்டியிருக்கும், அல்லது, போகவேண்டியிராது.

*சாலகன் :* நல்லது, சுவாமி! (போகிறான்)

*யௌகந்த :* நிர்முண்டகா, ஹம்ஸகனை அழைத்துவா.

*நிர்முண்டகன் :* அப்படியே, ஐயா. (போகிறான்)

*யௌகந்த :* (தனக்குத்தானே) இதற்குமுன் எப்பொழுதேனும் அரசரது அண்மையினின்று ஹம்ஸகன் நீங்கினதில்லை. அவன் இங்கே தனித்து வந்திருப்பதனால் என் மனத்தில் அச்சம் தோன்றுகின்றது. ஏனெனில்,

5. தீதோ, நன்றோ, செய்தி?
ஏதோ இன்னல் அறியேன்!

உற்றார் துயரில் உறவே
மற்றோர் நாட்டில் வதியச்
சென்றான், மீளச் சேர்வான்
நின்றான் நினைவே போலென்

நெஞ்சம் நிலைதான் குன்றி
அஞ்சும், அஞ்சும்! அழியும்! (தீதோ)

(ஹம்ஸகனும் நிர்முண்டகனும் வருகிறார்கள்)

*நிர்முண்டகன் :* வாருங்கள், வாருங்கள், ஐயா!

*ஹம்ஸகன் :* யஜமானர் எங்கே! எங்கே இருக்கிறார்?

**நிர்முண்டகன் :** அதோ நின்றுகொண்டிருக்கிறார். அவரண்டை போ.

**ஹம்ஸகன் :** (அணுகிக் கொண்டு) ஆரோக்கிய முண்டாகட்டும் சுவாமி!

**யௌகந்த :** ஹம்ஸகா! நமது அரசர் யானைக்காட்டுக்கு இன்னும் போகவில்லையென்று நினைக்கிறேன்.

**ஹம்ஸகன் :** அந்தோ! சுவாமி! அரசர் நேற்றே அக்காட்டுக்குப் போய்விட்டார்.

**யௌகந்த :** ஐயோ! இனி இப்பொழுது தூதனை அனுப்புவதிற் பயனில்லை. நாம் மோசம் போனோம். தப்பிக்க வழியுண்டா அல்லது, இன்றே நாம் இறக்க வேண்டுமா?

**ஹம்ஸகன் :** அரசர் இன்னும் உயிரோடு இருக்கிறார், ஐயா.

**யௌகந்த :** ''இன்னும் உயிரோடிருக்கிறார்'' என்று சொல்கிறாயே. அதாவது, அதனிற் குறைந்த ஆபத்து அவருக்கு நேர்ந்துள்ளதென்பதாம். நமது அரசர் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கவேண்டும்.

**ஹம்ஸகன் :** உங்கள் ஊகை சரியே. அரசரைப்பிடித்துக் கொண்டு விட்டார்கள்.

**யௌகந்த :** என்ன! அரசராகிய என் எஜமானர் பிடிபட்டாரா! ஐயோ! அடா! பிரத்யோதன் நல்லதிருஷ்டத்தால் பெருங்காரியம் சாதித்துவிட்டான். வத்ஸராஜனது மந்திரிமார்களின் திறமையின்மையும் தலைகுனிவும் இன்றுமுதல் தெற்றெனத் தெரியும். ருமண்வான் இப்போது எங்கே இருக்கிறான்? வருங்காரியம் அறிந்து முன்னரே அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும் பேரறிவாளியாயிற்றே. குதிரைப்படை என்னவாயிற்று?

6. நல்ல மரபு தேர்ச்சியும்
நண்ணி ஆன்ற சமரிலே
வல்ல வீறு நேயமும்
வாய்ந்திலங்கு நமது போர்த்

துரகவீரர், குழ்ந்து நம்
அரசனருகில் இல்லையோ?

பாயிருண்ட கானிலே
பாதை மாறினார் கொலோ?
போயெதிர்த்து நெறியிலார்
புன்மை காய்ந்து சிலையெனா

நின்று பொருது வீரரும்
பொன்றி வீழ நேர்ந்ததோ?

இல்லை, செறுநர் நிதியிலே
இச்சைகொண்டு வீரரும்
ஒல்லை சமர பூமியில்
ஓடமுந்தினார் கொலோ?

அரசனருகில் இல்லையோ
துரகவீரர்? சொல்லுவாய்!

**ஹம்ஸகன் :** இவர்களெல்லாரும் அரசருடன் இருந்திருப்பார்களாயின் அவருக்கு இந்த விபத்து வந்திருக்காது, ஐயா.

**யௌகந்த :** என்ன! என் யஜமானருடன் அவருடைய ஆட்களெல்லாரும் போகவில்லையா?

**ஹம்ஸகன் :** இல்லை, சுவாமி! சொல்லுகிறேன் கேளும்.

**யௌகந்த :** நீ வழிநடந்து களைத்திருக்கிறாய், உட்கார்.

**ஹம்ஸகன் :** உத்தரவுப்படியே, ஐயா (உட்காருகிறான்) கதையைக் கேளும். ஐயனே! நேற்றிரவு, பொழுது புலருமுன், குதிரைச் சவாரிக்கு உற்ற மனமகிழ்ச்சி நிறைந்த வேளையில், மணற்றிடர்த் துறையின் வழியாக அரசர் நர்மதா நதியைக் கடந்தார். ராணி வாசத்து மாதர்களை மூங்கிற் காட்டிலுள்ள தமது 'முகாமில்' இருக்கச்செய்து, அவர் ஓர் ஒடுக்குப் பாதையினூடே யானைக் காட்டிற்குச் சென்றார். குடை பிடிக்கிறவர்களையும், யானை பிடிக்கப் பழகின சிலரையும் மாத்திரம் தம்முடன் அழைத்துச் சென்றார்.

**யௌகந்த :** அதற்குமேல்?

**ஹம்ஸகன் :** சூரியன் உதித்து வானத்தில் ஒரு முழம் உயர்ந்திருந்தான்; நாங்கள் அநேக மைல் தூரம் கடந்துவந்து விட்டோம்; மதகந்தீர பர்வதத்திற்கும் எங்களுக்கும் இடையில் இரண்டுமைல் தூரமே

இருந்தது. அவ்விடத்தில் ஒரு யானைக்கூட்டத்தைக் கண்டோம். அந்த யானைகள் நீர் அரைவாசி வற்றியதொரு குளத்தில் நின்று மண்ணை வாரியெறிந்து கொண்டிருந்தன. அவை முற்றுப் பெறாமல் மேடும் பள்ளமுமாயுள்ள கற்சுவரைப்* போல இருந்தன.

யௌகந்த : அதற்கு மேல்?

ஹம்ஸகன் : நமது படைகள் சுற்றி ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்கையில் யானைக் கூட்டம் ஒன்றோடொன்று நெருங்கியடைந்து கொண்டிருந்தன. நமது நடமாட்டங்களைக் கண்டு சந்தேகப்பட்டுக் காலாட் படைவீரனொருவன் நம் யஜமானரண்டை போனான். அவனே இந்தத் துன்பங்களுக்கெல்லாம் காரண புருஷன்.

யௌகந்த : நில். ''இங்கிருந்து இரண்டுமைல் தூரத்தில் உடம்பு முழுதும் நீல நிறமான யானையொன்றைக் கண்டேன். நகங்களும் கொம்புகளும் மாத்திரம் வெண்மையாயிருந்தன. மல்லிகைக் கொடிகளும் சாலவிருக்ஷங்களும் அதன் உடலை மறைத்துக்கொண்டிருந்தன'' என்று அவன் சொல்லவில்லையா?

ஹம்ஸகன் : என்ன! யஜமானருக்கு அந்தச் செய்தி தெரிந்திருக்கிறதே. அங்ஙனமாயின், தாங்கள் விழிப்புற்றிருக்கையிலேயே அவ் விபத்து நேர்ந்திருக்கின்றது.

யௌகந்த : அந்தோ! ஹம்ஸகா! ஒருவன் விழித்துக்கொண்டிருக்கலாம். ஆயினும், மனிதனைக் காட்டிலும் வல்லதாகிய விதி மேலிடுவதற்காகும். மேலே சொல்.

ஹம்ஸகன் : பின்பு அந்தத் துஷ்டனுக்கும் நம் யஜமானர் ஒரு நூறு பொற்பணம் கொடுத்துவிட்டு எங்களை நோக்கி, ''அது யானை அரசாயிருக்க வேண்டும் அது நீல குவலயதனு என்பதாகும். யானைகளைப் பற்றிய நூலொன்றில் அதைக்குறித்து நான் படித்திருக்கிறேன். இந்த யானைக் கூட்டத்தைக் கவனித்துப்

---

* யானைகளின் முதுகுகள் சாம்பல் நிறமாயிருக்கும். அவற்றின்மீது சேறு வீசியதனால் அவை அரைவாசி கட்டிவிட்ட சுவரைப்போல் தோன்றும். அந்தச் சுவர் மங்கலான சாம்பல் நிறமுள்ள கற்குண்டுகளினாலாயது போலிருக்கும்.

பார்த்துக்கொண்டிருங்கள். நான் என் வீணையுடன் போய் அந்த யானை அரசை அடக்கிக்கொண்டு வந்துவிடுகிறேன்'' என்றார்.

**யௌகந்த :** ருமண்வான் சும்மா உட்கார்ந்திருந்தானா? நாம் யஜமானரது இந்த முரட்டு முயற்சியைத் தடுப்பதற்கு ஒன்றும் செய்ய வில்லையா?

**ஹம்ஸகன் :** இல்லை, இல்லை அரசருடைய மனத்தை மாற்றித் தடுப்ப தற்கு அம்மந்திரியார் முயன்றார். தனியே போகவேண்டாமென்று மிக மன்றாடி அவரைக் கேட்டுக்கொண்டார். ''எட்டுதிக்கு யானைகளை*யும் ஐராவணம் முதலான மற்றவைகளையும் நீங்கள் பிடிக்கவல்லீர். ஆனால், எல்லைப்புறப் பிரதேசங்களில் தொல்லையதிகம். அங்குள்ளவர்கள் கட்டுக் கடங்கினவர் களல்லர்? அவர்களை அடக்கியாள்வது கஷ்டம். அவர்கள் வெட்கங்கெட்டவர்கள்; இழிபிறப்பாளர்கள். ஆகையால், இந்த யானைக்கூட்டத்தைப் பார்த்துக்கொள்ளும்படி காலாட்படைக்கு ஒப்பித்துவிட்டு நாமெல்லோரும் சேர்ந்து போவோம். அரச ரவர்கள் ஒன்றியாய்ப் போகக்கூடாது'' என்று அவர் சொன்னார்.

**யௌகந்த :** இத்தனை வார்த்தைகளையும் பெரிய மனிதர்களின் எதிரிலே ருமண்வான் சொன்னானா? நானும் அதேமாதிரிவாக்குக்கெட் டாத இராஜபக்தி காட்டக்கூடியவனாக விரும்புகிறேன். அதற் குப்பின் என்ன நிகழ்ந்தது சொல்.

**ஹம்ஸகன் :** அப்போது அரசர் தனியே போவேனென்று தம்மீது ஆணை வைத்துப் பிடிவாதமாகச் சொல்லி மந்திரியின் வாயை அடைத்துவிட்டார். நம்முடைய நீலவலாஹம்** என்னும் யானை யினின்றும் இறங்கி சுந்தரபடலம்*** என்னும் குதிரைமீதேறிக் கொண்டு, பத்துக் காலாட்படையுடன் மாத்திரம், சூரியன் உச்சிக்கு வருமுன்னர், சவாரி போய்விட்டார்.

**யௌகந்த :** அவருக்கு வெற்றி வாய்க்குமா! அடடா, அவர்மீதுள்ள ஆசையினால் நீ முன் சொல்லிய செய்தியை மறந்துவிட்டேன். நல்லது. மேலே சொல்.

---

* பூமியின் எட்டுத்திக்சகளையும் காக்கும் யானைகள்.

** ''இருண்ட மேகம்''

*** அழகிய இளஞ்சிவம்பு.

**ஹம்ஸகன் :** அப்படைவீரன் சொல்லிய இரண்டு மைலுக்கு மேல் இன்னும் இரண்டு மைல் தூரம் போனபின் தேவயானைப் போலியொன்றைக் கண்டோம். அது நூறுவில் தூரத்தில்* இருந்தது. அதன் நீல நிறம் அதேசாயலான சாலவிருக்ஷங்களினால் மறைக்கப்பட்டிருந்தது. கொம்புகள் மாத்திரம் சூரிய வெளிச்சத்தில் விளங்கிக் கொண்டிருந்தன. உடலில்லாமல் அந்தரத்தில் முளைத்தன போன்று அவை விளங்கின.

**யௌகந்த :** ஹம்ஸகா! நமக்கு நேர்ந்த விபத்தைக் கண்ணாரக் கண்டேனென்று சொல்லலாகாதோ? இன்னும் விளம்பு.

**ஹம்ஸகன் :** பின்பு அரசர் தம் குதிரையை விட்டிறங்கித் தேவர்களை வணங்கி, வீணையைக் கைக்கொண்டு, அப்போலி யானையை அணுகினார். அத்தருணத்தில் எங்களுக்குப் பின்புறமாகப் பெரிய சிம்மநாதம் போன்ற கூக்குரல் பேரொலி எழுந்தது.

**யௌகந்த :** சிம்மநாதமா? இன்னும் சொல்.

**ஹம்ஸகன் :** பேரொலியின் காரணங்காண நாங்கள் திரும்பியபோது, மாவுத்தர்களுக்குப் பதிலாக அப்போலியானைக்குள் காத்துக் கொண்டிருந்த போர்ப் படைகளைக் கொண்ட வீரர்கள் எங்களை நோக்கி முன்வந்தனர்.

**யௌகந்த :** அதற்கப்பால்?

**ஹம்ஸகன் :** அப்போது நம் அரசர் தம் முடனிருந்த யுவர்களைப் பெயரையும் குலப்பேரையும் சொல்லியழைத்து உற்சாகப்படுத்தி, ''பிரத்யோதனுடைய தந்திரங்களில் இது ஒன்றாகும். என்னுடன் வாருங்கள். என் பராக்கிரமத்தால் பகைவனது சூது பலிக்காமற் செய்வேன். வஞ்சத்தினால் அவன் எவ்வளவு அனுகூலம் வாய்ந்திருப்பினும் அவனை வெல்வேன்'' என்று சொல்லிக் கொண்டே அவர் அணிவகுத்து நிற்கும் பகைப்படைக்குள் நுழைந்தார்.

**யௌகந்த :** என்ன, அணிவகுத்த பகைப்படைக்குள் புகுந்தனரா! ஆயினும், பொறு, அவர் செய்தது சரியே.

---

* ஏறக்குறைய 200 கெஜதூரம்.

7. வேறென்ன செய்வான், ஏறன்ன வேந்தன்?
வீராதி வீரன், பூபாலர் நாதன்!
ஊறெண்ணி மாற்றோர் சூதிட்ட வலையில்
உணராத தனியே தளையுற்றகாலை (வேறெ)
வெந்நிட்டு மீளான்! வெருவுற்று வீழான்!
வில்வாங்கி வெம்போர் வினைநாடி முனைவான்!
அந்நின்ற பகையோர் அலமந்து நோக
அதிர்வித்து வீரச் சுடர் வீச நின்றான்! (வேறெ)

*அப்பால்?*

**ஹம்ஸகன் :** *சுந்தரபடலம் என்னும் தமது குதிரையின் மீதேறிக் கொண்டார். அவர் அசையும் ஜாடையைக் கண்டு அதற்கேற்ற வாறு அக்குதிரை வளைந்து சாரிவந்தது. வேட்டைக்காரனைப் போல அவர் கரகரவெனச் சுழன்றுவந்து பகைவரையடித்தார். அவர் எண்ணியிருந்ததைக் காட்டிலும் அதிகபலமாகவே அடித் தார். பகைவர்கள் எண்ணிக்கை தம்மினும் மிக்கவர்களாயிருப்பி னும் தம்மால் இயன்றமட்டும் முயன்று அடித்தார். கடைசியில் அவருடைய ஆட்களெல்லாரும் மடிந்து போயினர். நான் ஒரு வனே மிஞ்சினேன் அவரைக் காப்பதற்கு. காப்பதற்கு என்றேனா? இல்லை, இல்லை, அவரால் காக்கப்படுவதற்கு. நாள் முழுவதும் போர்புரிந்ததனாற் களைத்து அவர் அவ்வசுரஸந்தியா காலத்திலே சோர்ந்து வீழ்ந்தார்; உடம்பு முழுதும் அநேக காயங்களுடன் குதிரையினின்றும் விழுந்தார்.*

**யௌகந்த :** *அரசர் மூர்ச்சித்தாரா? அதற்குப்பின்?*

**ஹம்ஸகன் :** *பின்பு அவரை அவர்கள் மனம் வந்தவாறு இழிவுபடுத்தி பங்கப்படுத்தி, அருகிலிருந்த புதரினின்று முரட்டுக் கொடிகளைப் பிடுங்கி அவரைக் கட்டினார்கள்.*

**யௌகந்த :** *ஹா, அரசரை இங்ஙனம் மானபங்கப்படுத்தினார்களா!*

8. அலைகின்ற தோழர் படுவாதைதீர
அணைகின்ற கைகள், பகையோர்
உலைவெய்தி வீழ ஒருகோடி வாளி
தொலையெய்த கைகள், மறையோர்

தலைமக்கள், தேவர் தமையன்றி நின்று
பணியாத கைகள், தமுவாப்

புலமைக்களிட்ட சிறுமைக்குளின்று
பொலிவற்றதென்ன பழியே!

வளைகின்ற வில்லை நிகராக மண்டி
அதிர்கின்ற தோளில் விளையா
வளர்கின்ற கைகள், மணிவேய்ந்து திண்மை
வளமுற்ற கைகள், பெரிதே

கிளர்கின்ற கைகள், மதயானையொத்த
கேடற்ற கைகள், இது நாள்
தலைகொண்டு நொந்து தாழ்வெய்த, நின்று
சதிகாரர் செய்த வினையே!

*அரசருக்கு எப்பொழுது நினைவு வந்தது?*

**ஹம்ஸகன் :** *அந்தத் துஷ்டப் பையல்கள் வேண்டிய மட்டும் அவமானப்படுத்தியபின் தெளிவுற்றார், ஐயா.*

**யௌகந்த :** *அவரது உடலைப் பங்கப்படுத்தினார்களேயன்றிப் பெயரைப் பங்கப்படுத்தவில்லை. கடவுள் கிருபை. அதன் பின்?*

**ஹம்ஸகன் :** *அரசருக்கு நினைவு வந்துவிட்டதெனத் தெரிந்தவுடனே அந்தப் பாபிகள் பல திக்குகளிலும் சிதறி யோடிப்போனார்கள். அங்ஙனம் ஓடுகையில், 'அவர் என் தமயனைக் கொன்றார்,' 'என் தந்தையைக் கொன்றார்', 'என் மகனைக்கொன்றார்,' 'என் நண்பனைக் கொன்றார்,' எனக்கூவித் தம்மையறியாமலே நம் அரசரது பாராக்கிரமத்தைப் பாராட்டிக்கொண்டு போனார்கள்.*

**யௌகந்த :** *பின்னர் என்ன நிகழ்ந்தது?*

**ஹம்ஸகன் :** *விபரீதமான சம்பவம் ஐயா. அவர்கள் நம் அரசரை அடிப்பதற்கு ஒருவரையொருவர் தூண்டிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் கொடுஞ்செயல் செய்யத்தீர்மானித்தான். அவன் அரசருடைய குடுமியைப் பிடித்து அவரை இழுத்தான். போர் மும்முரத்தில் தலைமயிர் அலங்கோலப்பட்டிருந்தது. அவரைத் தென்புறம்* நோக்கச் செய்தான். பின்பு வாளைக்*

---

* மரித்தோர்க்கு இறைவனான யமனுடைய லோகம்.

கையிலேந்தி, பலமாக அடிக்கும்பொருட்டு அவன் வேகங் கொள்வதற்காக ஓர் ஓட்டம் ஓடினான்.

யௌகந்த : ஒரு நிமிஷம் பொறு, ஹம்ஸகா! எனக்கு மூச்சுத் திரும்பட்டும்.

ஹம்ஸகன் : அந்தச்சண்டாளன் இங்ஙனம் விரைந்தோடி வரும்வழியில் இரத்தம் தோய்ந்து தரை வழுக்கலாயிருந்தது. அவ்விடத்தில் அவன் காலிடறிக் கீழே விழுந்து இறந்தான்.

யௌகந்த : அச்சண்டாளன் அங்ஙனம் வீழ்ந்து இறந்தனனா! பார்.

9. வந்த வெம்பகை வீழவும்,
 வாழ்ந்து நல்லறம் ஒளிரவும்
 அந்த நாடு நின்றுயரவே
 அன்று மன்னவன் அருளினான்!

 நன்றி எண்ணிய நிலமகள்
 நன்று காத்தனள் அரசனைக்
 கொன்று தீர்க்கமுன் வந்தவன்
 குலைய நல்வினை பண்ணினாள்!

ஹம்ஸகன் : முன் நடந்த சண்டையில் பிரத்யோதனுடைய மந்திரிகளில் ஒருவனான சாலங்காயனன் என்பவன் நம் யஜமானரது ஈட்டினாற் குத்துண்டு நினைவு தப்பிக் கிடந்தான். ஓடிவந்த சண்டாளன் வீழ்ந்திறந்த தருணத்தில் அம்மந்திரி மூர்ச்சை நீங்கி விழிப்புற்று அவ்விடம் விரைந்தோடி, நம் அரசருக்கு இனிக்கொடுமை போதும், போதும்; இனிக் கொடுமை செய்யக் கூடாதெனத் தன் ஆட்களைத் தடுத்துக்கட்டளையிட்டான்.

யௌகந்த : அப்புறம்?

ஹம்ஸகன் : பின்பு அவன் நம் அரசருக்கு வணங்கி வந்தனம் செய்தான். அது எவரும் எதிர்பாராத மரியாதை. உடனே அரசருடைய கட்டுகளை அவிழ்த்து அவரை விடுவித்தான்.

யௌகந்த : என் யஜமானரை விடுவித்தானா! நன்று நன்று, சாலங்காயனா! இடுக்கணில் நண்ணாரும் நண்பராதல் கூடும். ஹம்ஸகா! இப்பொழுது என் மனத்திற்குக் கொஞ்சம் ஆறுதலேற்பட்டது. அந்நல்லோன் பின்பு என்ன செய்தான்?

**ஹம்ஸகன் :** குதிரை மீதேறிச் செல்லமாட்டாத அளவு அரசர் காயப் பட்டிருந்தார். ஆதலின் சாலங்காயனன் அவரை டோலியில் வைத்து, அனபும் ஆதரவும் பாராட்டி உபசரித்து அவருக்குண்டான காயங்களுக்காக வருந்தி இரக்கங்காட்டி, தன் ஆட்கள் அவரைத் தோளிற் சுமந்து உஜ்ஜைனிக்குக் கொண்டுபோகக் கட்டளை யிட்டான்.

**யௌகந்த :** என் யஜமானரைக் கொண்டு போய்விட்டார்களா?

10. அரசனவ்வனம் அணுகியபோதே
அஞ்சினோம் பழி வருமென நாமே?
பெருமை சீர்கெடு மெனு நினைவாலே
பின்னுறான் துயர் சூழ்வுற வீழ்ந்தான்:

பிரதியோதன் செய்த சூழ்ச்சி
பெரிய வெற்றி அடையலாச்சு?

11. என்றும் மதியான் எமதிறைவன்
இந்த அவந்தி மன்னவனை
இன்றெவ்விதமோ தளையெய்தி
எதிரே நிற்பான்? அறியேனே!

உணர்வான் அரசன் தேனினிய
உரையே! எவ்வாறினியம்மா
அணையார் பேசும் வசையெல்லாம்
ஆற்றா நிற்பான்? அறியேனே!

பொல்லா வினையைக் கண்ணுற்றால்
புகைவன் கோபக் கனல் எழவே!
வல்லான் எவ்வாறினியம்மா
வாளா நிற்பான்? உணரேனே!

சிறைவாயுற்றான் இழிவற்றான்!
சீரும் சுகமும் நகை மொழியும்
குறையா விடினும் குறையின்றே?
கோமானுறைவான் எவ்வாறோ?

*(துவாரபாலகி வருகிறாள்)*

**துவாரபாலகி :** இதோ அந்த ரக்ஷாசூத்திரம், ஐயா.

**யௌகந்த :**

12. விரய மிப்பொருளெலாம்
        இனியுறும் பயனிலை!
    விலக நற்பேறு வெந்
        துயரமே மூண்டதால்!

    செருமுடிந்தான பின்
        துரகத்தை மஞ்சனம்
    செய்வித்த பொருளிலாச்
        செயலெனப் போயதே!

**துவாரபாலகி :** இதே ரக்ஷாசூத்திரம் கொண்டுவந்திருக்கிறேன். ஐயனே!

**யௌகந்த :** அதைக் கீழே வை, விஜயா!

**துவாரபாலகி :** நான் போய்ப் பேரரசித் தாயாருக்குச் சொல்லட்டும், ஐயா?

**யௌகந்த :** விஜயா! அப்படித்தான்.

**துவாரபாலகி :** அப்படித்தான் என்றால் என்ன?

**யௌகந்த :** இதுதான்.

**துவாரபாலகி :** சொல்லுங்கள், யஜமானே சொல்லுங்கள்.

**யௌகந்த :** (தனக்குத்தானே) நல்லது இந்த விஷயத்தை ஒளிக்க முடியாது. பேரரசித் தாயாருக்குச் சொல்ல வேண்டும். (உரக்க) விஜயா, உன் மனத்தைக் கெட்டிப்படுத்திக்கொள். (அவளுக்குக் காதோடு சொல்கிறான்). அது இங்ஙனமாகும்.

**துவாரபாலகி :** ஆ!

**யௌகந்த :** உன் பெயர் 'விஜயை' யல்லவா? ஆதலின் சோர்வுறாதே.

**துவாரபாலகி :** சரி போய்ச் சொல்லுறேன். என் பாக்கியக்குறைவு எத்தன்மையது?

யௌகந்த : விஜயா! அரசரைச் சிறைப்பிடித்திருக்கிறார்களென மகாராணியாருக்குச் சரேலெனச் சொல்லாதே. பெற்ற மனம் பித்து. அன்பினால் தாய் மனம் தளம்பும். அது நொந்து அயராமற் காக்க வேண்டும்.

துவாரபாலகி : யஜமானே, மற்றெங்ஙனம் இச்செய்தியைச் சொல்வேன்?

யௌகந்த : சொல்லுகிறேன், கேள்.

13. போரின் துயரமும் போரின் கொடுமையும்
சாற்றுவாய் அரசியின் சஞ்சலம் மிகவே!
மாற்றிலா மைந்தனை மனதிலே எண்ணி
நொந்து நைகின்ற வெந்துயர் வேளை
சொல்லுவாய் நிகழ்ந்த அல்லலும் பழியும்
இறைமகள் எய்திய சிறையையும் பின்னே!

துவாரபாலகி : சரி, ஐயா, இனி நான் மெல்லச் சொல்ல மாட்டுவேன்.
(போகிறாள்)

யௌகந்த : ஹம்ஸகா, அரசனுடன் நீ ஏன் போகாதிருந்தாய்?

ஹம்ஸகன் : நான் போகவேண்டுமென்றே இருந்தேன். ஆனால், கௌசாம்பிக்குப் போய் இச் செய்திகளையெல்லாம் அறிவிக்கும் படி சாலங்காயனன் என்னை இவ்விடம் அனுப்பினான்.

யௌகந்த : அவன் எண்ணம் யாது? அச்செய்தியைக் கேட்டு நாம் ஏங்கித் திகைக்க வேண்டுமென்பதா; அல்லது நம் யஜமானருக்கு உற்ற சேவகனாயிருப்பவனை அகற்றியொழிக்க வேண்டுமென்பதா?

ஹம்ஸகன் : பெரும்பாலும் அவனுக்கு அவ்விரண்டு எண்ணமும் இருத்தல் கூடும்.

யௌகந்த : அவனுடைய இறுமாப்பு இதனில் நன்கு விளங்குகின்றது. ஆனால், அவனுடைய காரியம் கைகூடியதனால் அவன் களி கூர்தல் தகும். அரசர் என்னைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையா?

ஹம்ஸகன் : சொன்னார், ஐயா, நான் அவரிடம் விடை பெற்று நீங்கும் போது எத்தனையோ செய்திகள் அவர் சொல்ல விரும்பியதாகத் தோற்றிற்று. கடைசியில் கண்ணீர் பெருகி முட்டிக் கண்ணை

மறைக்க அவர் 'யௌகந்தரைப் போய்ப்பார்' என்று எனக்குச் சொன்னார் (மந்திரியாருடைய பெயரை உச்சரித்ததற்காக வெட்கிக் கூச்சத்தினால் மேலே பேசாமல் நிற்கிறான்.)

**யௌகந்த :** மேலே சொல், அரசர் உரைத்த வார்த்தையை நீ திருப்பிச் சொன்னாயேயொழிய, வேறு இல்லை. அதனாற் குற்றமன்று.

**ஹம்ஸகன் :** 'யௌகந்தராயணரைப் போய்ப் பார்' என்று சொன்னார்.

**யௌகந்த :** என்ன! மந்திரிகணத்தாரெவரையும் குறிக்காமல் என் பெயரை மட்டுமா சொன்னார்.

**ஹம்ஸகன் :** அவர் சொல்லியது அப்படித்தான்.

**யௌகந்த :** அது அங்ஙனமாயின், வேண்டியவளவு நான் முன்ஜாக்கிரதை செய்யாததனாலேயாகும். அவர் அன்னத்தை நான் உண்டதற்காகவும், அவர் எனக்கு உயர்பதவியும் பெருமையும் அளித்ததற்காகவும் நன்றி பாராட்டி நான் பதில் ஒன்றும் செய்யவில்லை என்பதனாலேயாகும்.

**ஹம்ஸகன் :** ஒருவேளை அங்ஙனம் இருப்பினும் இருக்கலாம்.

**யௌகந்த :** அரசர் என்னை வேறு உருவிற் காண்பாராக,

14. எங்கு வேந்தனுள்ளான் - அங்கே
யானு மெய்தி நிற்பேன்!
பொங்கமுறை நகரோ? - அன்றிப்
பொலிவிழந்த சிறையோ? (எங்கு)

இருளடர்ந்த வனமோ, - அன்றி
எமனுலகு தானோ?
பரவு மாயுளெல்லாம் - மன்னன்
பணி இயற்றி நிற்பேன் (எங்கு)

வெற்றி வீரனென்றே - வீணில்
வீறுகொண்ட பகைவன்
உற்ற ஆசையெல்லாம் - குலைய
யூகமொன்று செய்வேன்! (எங்கு)

மாண்பினெங்கள் இறையோன் - அருகில்
மன்னி நின்று வாழ்வேன்!
மீண்டு நாடுசேர்வோம் - அன்றே
மேன்மை யாவு முறுவேன்! (எங்கு)

*(திரைக்குப் பின்னால்)*

*ஐயோ, ஐயோ, என் யஜமானரைப் பிடித்துக் கொண்டார்களே!*

**யௌகந்த :**

15. வாய்விட்டழுது விசனத்தை
மறைப்பார் இந்தப் பெண்மணிகள்!
ஆய்வுற்றுரிய இயற்றாத
அமைச்சர் குறையே காட்டும்!

*(துவாரபாலகி வருகிறாள்)*

**துவாரபாலகி :** *தாய் அரசியார், ஐயா.*

**யௌகந்த :** *சரி.*

**துவாரபாலகி :** *அவர் சொல்லுகிறார்*

**யௌகந்த :** *அவர் என்ன சொல்லுகிறார்?*

**துவாரபாலகி :** *''வத்ஸதேசத்து அரசனாகியவீரன், அநேக நண்பர்களுக்குப் பிரியமானவன், இந்தக் கோரமான கதிக்கு ஆளாயினன். அதை மாற்றுவதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? அவனது நண்பர்களைக் கௌரவித்துக் காரியத்தைத் திருத்திச் செம்மைப் படுத்துவோம். நீங்கள் மிக்க புத்திசாலி. விபத்து நேர்ந்தக்கால் சோர்வடைய மாட்டீர். மனமிடிந்து செயலற்று நிற்கமாட்டீர். ஏமாற்றப் பெறினும் ஆசையொழியீர். சாதிக்க முடியாமல் தவறின், தற்கொலை புரியமாட்டீர். நான் உமக்கு முக்கியமாகச் சொல்வது இதுவே. 'முதன் முதலில் நீர் எனது வத்ஸராஜனுக்கு ஏற்புடைய நண்பனாயிருந்தீர், பின்னரே மந்திரியானீர். நீர் எனக்கு மகனைப் போன்றவர் மகனே! என் மகனை எனக்குக் கொண்டுவா!''*

**யௌகந்த :** ஆ! தாய் அரசியார் இந்த அரச குடும்பத்துப் பெருமைக்கேற்ற தீரமொழிகள் கூறியிருக்கின்றனர். என்மீது அவர் வைத்துள்ள நன்மதிப்புக்காக அவருக்கு நான் நன்றி பாராட்டுகின்றேன். விஜயா, கொஞ்சம் ஜலம் கொண்டுவா.

**துவாரபாலகி :** உத்தரவு, ஐயா, (உள்ளே போய்த் திரும்பி வருகிறாள்) இதோ ஜலம், ஐயா.

**யௌகந்த :** அதைக் கொடு (அந்நீரை முறைப்படி உறிஞ்சுகிறான்) விஜயா, தாயார் அரசியார் என்ன சொன்னார்?

**துவாரபாலகி :** ''மகனே, என் மகனைக் கொண்டுவா.''

**யௌகந்த :** ஹம்ஸகா, அரசர் என்ன சொன்னார்?

**ஹம்ஸகன் :** ''யௌகந்தராயணரைப் போய்ப் பார்.''

**யௌகந்த :** விஜயா.

16. எது வந்தாலும் மதியேன்
இதுவே விரதம் பூண்பேன்

நிலவைக் கொள்ளும் பாம்பை
நிகர்வார் கையின் மீள

நலியா தரசைக் கொணர்வேன்! இன்றேல்
நான் யௌ-கந்த-ராயணன் அன்றே!*

**துவாரபாலகி :** அப்படியே ஆகட்டும், ஐயா. (போகிறாள்)

(நிர்முண்டகன் வருகிறான்)

**நிர்முண்டகன் :** யஜமானே, ஆச்சரியமான செயலொன்று நடந்திருக்கின்றது. நமது அரசருடைய க்ஷேமத்தை யுத்தேசித்து அநேகம் பிராமணர்களுக்குச் சிறப்பாகச் சமாராதனை செய்தார்கள். அவர்கள் போஜனம் செய்வதைப் பைத்தியக்காரக் கோலம் பூண்ட

---

* இதுவே அவனுடைய முதல் பிரதிக்ஞை.

பிராமணன் ஒருவன் பார்த்துக்கொண்டிருந்து உரக்க நகைத்து அவர்களை நோக்கி, ''ஐயன்மீர், அமைதியோடு உண்ணுங்கள். வயிறாரத் திருப்தியாகப் புசியுங்கள். இந்த அரச குடும்பம் செழித்தோங்கும்'' என்று சொன்னான். இந்த வார்த்தை சொல்லிய வுடனே அவன் மறைந்துபோனான்.

**யௌகந்த :** இது உண்மையா?

*(ஒரு பிராமணன் வருகிறான்)*

**பிராமணன் :** பூசிக்கத்தக்க அந்தப் பிராமணர் புறப்பட்டுப் போகையில் அங்கே விட்டுப்போன விசித்திரமான ஆடைகள் இவை. இவைகளை எதற்காக விட்டுப் போனாரோ தெரியவில்லை. ஐய! நாம் ஆராதிக்கத்தக்க துவைபாயனரே* இந்தப் பைத்தியக்கார வேஷத்துடன் அங்கு வந்தவர்.

**யௌகந்த :** அப்படியா, துவைபாயனர் இங்கு வந்தாரா!

**பிராமணன் :** ஆம்.

**யௌகந்த :** அவ்வாடைகளை நான் பார்க்கட்டும்.

**பிராமணன் :** இதோ இருக்கின்றன, ஐயா.

**யௌகந்த :** *(அவ்வாடைகளை அணிந்துகொண்டு)* இதோ நான் முற்றும் வேறு மனிதனாய் விட்டேன். நான் அரசருடைய திருமுன்போய்ச் சேர்ந்துவிட்டதாக எனக்குத் தோன்றுகிறது. இவ் வணிகளை எனக்காகவே அவர் அங்கு விட்டுப் போயினர்.

17. புனித முனிவன் தேடிப்
  பூண்ட பித்தனாடை
இனிதினணிவன் நானே!
  இறையை மீட்பன் உறுதி!

*(துவாரபாலகி வருகிறாள்)*

---

* தீவிற்பிறந்த மாமுனிவராகிய வியாசர்.

**துவாரபாலகி :** ஐயா, தன் மகனைப்* பார்க்கவேண்டுமென்று தாய் அரசியார் கூறுகின்றனர்.

**யௌகந்த :** இதோ வந்துவிட்டேன் பெரியாரே! நான் வருகிற வரையில் பூஜை அறையில் இரும்.

**பிராமணன் :** நல்லது (போகிறான்)

**யௌகந்த :** ஹம்ஸகா, நீ இனிச் சிறிது நேரம் இளைப்பாறலாம்.

**ஹம்ஸகன் :** அங்ஙனமே, ஐயா. (போகிறான்)

**யௌகந்த :** விஜயா, முன் நடந்து வழி காட்டு.

**துவாரபாலகி :** அப்படியே, ஐயா.

**யௌகந்த :**

18. இடையறாமற் கடையவே
    எரிபிறக்கும் கோலிலே!
கடுகி நீரும் தோன்றுமால்
    கருதி மண்ணிற் குடையவே

★★★

ஆக அரியது காண்மலார்
    ஆண்டல ஆள்விணை கொண்டுளார்!
வாகை சூடுவர் நாள்தோறும்
    வளரும் அன்னவர் வெற்றியே!

(எல்லோரும் போகிறார்கள்)

(முதலங்கம் முற்றிற்று.)

---

* இங்கே 'மகன்' என்பது யௌகந்தராயணனைக் குறிக்கின்றது.

# அங்கம் - 2

## இடையங்கம்

(உஜ்ஜைனியில் மகாசேனனது அரண்மனை)

(பரபத்தியக்காரனாகிய பாதராயணன் வருகிறான்)

**பரபத்தியக்காரன் :** ஆபிரகா, ஆபிரகா* மகாசேனர் சொல்லிய இவ் வார்த்தைகளைத் துவாரபாலகனுக்குப் போய்ச் சொல் - ''காசி** அரசின் குருவாகிய ஜைவந்தி என்பவர் ஒரு காரியமாக இன்று இங்கே வந்திருக்கிறார். அவருக்கு வசதியான விடுதியமைக்க வேண்டும். தூது வருகிறவர்களுக்குச் சாதாரணமாகச் செய்கிற உபசாரங்களல்லாமல் அவருக்குச் சிறந்த கௌரவம் காட்ட வேண்டும். மேன்மை வாய்ந்த விருந்தினருக்குச் செய்யத்தக்க மரியாதையும் உபசாரமும் அவருக்குச் செய்ய வேண்டும்.''

ஆ, இவ்வாறுநாளுக்கு நாள் நடந்துகொண்டிருக்கின்றது. அரச குமாரியின் மணங்கேட்கப் பெரும் பதவி வாய்ந்த அரச குடும்பங்களிலிருந்து ராயபாரிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், மகாசேனர் அவர்களில் எவருக்கேனும் 'ஆம்' என்றும் சொல்வதில்லை, 'இல்லை' என்றும் சொல்வதில்லை. இது ஏன் இப்படி நடக்கின்றது? அரசகுமாரியின் விவாக விஷயத்தை விதி தன் வசத்திலேயே வைத்துக்கொண்டிருக்கின்றது போலும். ஏனெனில்,

1. கோமகட் கெனவே நான்முகன் விதித்த
   குமரனோ தூது விடுத்திலன் இனியும்!
   ஆமிது தேர்ந்தே அரசனும் வருவார்
   ஆற்றலும் தகவும் ஆய்ந்திலன் சூழ்ந்தே.

இங்குள்ள வேலைக்காரர்களின் முகத்தில் பயக்குறி காண்பதனால் யஜமானர் இங்கே இருக்கிறாரென்று தோன்றுகிறது. ஆ, இதோ மகாசேனர் வருகிறாரே.

---

* ஆபிரகன் என்னும் தூதன் அரங்கமேடையில் இல்லை.

** வாரணாசி.

2\. காணீர் வந்தான் கனகக்
　　காவின் நீங்கிக் குரிசில்!
மானார் நாணற் பொய்கை
　　வருவான் செவ்வேள் எனவே!*
காணீர் பெரிதே நீலக்**
　　கருமா மணிகள் பொலியும்
பூணார் சந்தத் திண்டோள்
　　பொருவேளரசன் வந்தான்!

*(போகிறான்)*

*(இடையங்கம் முற்றிற்று)*

*(பரிவாரங்களுடன் உஜ்ஜைனிப் பேரரசர் வருகிறார்)*

**அரசர் :**

3\. என்ன பயன் என் மகிமை,
என்னிறையும் என்னாம்?
நானிவரும் அசுவத்தின் காலடியின் மண்ணை
நல்லமணி முடியீது பூண்பர் பல மன்னர்
ஆனபணி ஏற்றிடுவர், ஏவல்கொள நிற்பார்
ஆயிரவர் உலகாளும் எழில்வேந்தர் எனினும் (என்)
கானுரையும் மதகரியின் பான்மைதரு நூலைக்
கரைகண்ட பேரறிஞன் எழில் வத்சமென்னும்
மான நாடுடையான், நானரசுமேவி
வாழும் அரமனை வாயில் வந்துதொழும் வரையில் (என்)

*பாதராயணா!*

**பரபத்தியக்காரன் :** *மகாசேனருக்கு ஜே!.*

**அரசர் :** கன்னியரான ஜைவந்திக்குக் தகுதியான இருக்கை அமைத் திருக்கின்றாயா?

**பரபத்தி :** ஆம், சௌகரியமான விடுதி பெற்றுத் தக்கவாறு உபசரிக்கப் படுகின்றார்.

---

* ஸ்கந்தர், போர்க்கடவுள். அவர் (சரவணப் பொய்கையினின்று) நாணற் காட்டி னின்று வெளிவந்ததாகச் சொல்வர்.

** ஆழ்ந்த நீலநிறமான தர்ப்பைப் புல்.

**அரசர் :** நல்ல காரியம் செய்தாய், நமது ஸம்ஸ்தானத்துப் பெருமை குன்றாமல் எப்போதும் பாதுகாக்கின்றாய். இங்கு வருகிறவர்களெல்லாரும் ஏற்றவாறு வரவேற்கப்படுகின்றனர். ஒரு விசித்திரம். அரசகுமாரியின் விவாகத்தைப்பற்றி நான் கேட்கிறவர்களெல்லாரும் தம் எண்ணத்தை ஒளிக்கிறார்கள். (பரபத்தியக்காரனைப் பார்க்கிறார்) பாதராயணா, நீ ஏதோ சொல்ல விரும்புவது போலத் தோன்றுகின்றதே.

**பாதராயணன் :** அது ஒன்றுமில்லை. இவ்விவாகத்தைப்பற்றி எனக்கு ஒன்று தோன்றியது.

**அரசன் :** தயங்காதே இந்தக் காரியம் எல்லாருக்கும் சம்பந்தமானதே. மனத்திலுள்ளதைத் தாராளமாகச் சொல்.

**பரபத்தி :** மகாசேனரே, நான் சொல்லவந்தது இதுவே. உயர்ந்த அரசகுடும்பங்களிலிருந்து நமது அரசகுமாரியை மணம்புரிந்து கொள்ள விரும்பிய ராயபாரிகள் நாள்தோறும் வந்துகொண்டேயிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் சொல்லும் வரன்களில் எதையும் மகாராஜா வேண்டாமென்று சொல்வதும் இல்லை; வேண்டுமென்று சொல்வதும் இல்லை. அது ஏன் அப்படி?

**அரசர் :** பாதராயணா, செய்தி இது. வாசவதத்தையின் மீது எனக்குள்ள அன்புப் பெருக்கத்தால் அவளுக்கு நல்ல கணவனைப் பார்த்து எடுக்கவேண்டும்; எல்லா நற்குணங்களும் வாய்ந்தவனாயிருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனதனால் எவன் சிறந்த வரன் என்று தீர்மானிக்க முடியாமல் நிதானிக்கின்றேன்.

4. உயரிய குலமும், உள்ளுறை அன்பும்,
கனிவுறு நெஞ்சும், காதலிதன் பால்
வியனுறு மொய்ம்பின்தயை மிகு மணமும்
வாய்ந்து நல்லெழிலும் ஏய்ந்திடல் வேண்டும்!
அழகொரு மாண்பென அவசியமென நான்
நினைத்திலன், ஆயினும் இனிப்பிறமாதர்
இகழுரைசொல்ல இடம் சிறிதின்றி
மணமகன் அழகும் மன்னுதல் வேண்டும்!
மன்னிய கவினொடு தன்கர மேற்ற
மங்கையைக் காக்கும் வலிமையும் வேண்டும்!

**பரபத்த :** இந்நற்குணங்களெல்லாம், மகாசேனரிடத்தில் தவிர, வேறு எவரிடத்தும் ஒருங்கே அமைந்திருக்கமாட்டா.

**அரசர் :** அதனாலேதான் நான் நிச்சயிக்க முடியாமல் திகைக்கிறேன்.

5. தன் மகளுக்கேற்ற ஒரு மணமகனைத் தேடித்
தருகின்ற பெரியகடன் ஈன்றவனைச் சாரும்!
பின்னுறும் விளைவெல்லாம் பழவிதியின் பயனே
பிறிதறியேன் மணவினையிற் காரணமும் நானே!

ஆனால், பெண்ணை விவாகம் செய்து கொடுக்கும்போது தாய்மார் விசனப்படுகிறார்கள். ஆதலால் அரசியாரை இங்கே வரச்சொல்.

**பரபத்திய :** மகாராஜாவின் உத்தரவுப்படி *(போகிறான்.)*

**அரசர் :** காசிராஜரிடமிருந்து வந்துள்ள தூதினால், வத்ஸராஜனைப் பிடிப்பதற்காகப் போன சாலங்காயனனுடைய ஞாபகம் எனக்கு வருகின்றது. ஒரு நாளாயிற்று. அந்தப் பிராமணனிடமிருந்து செய்தி ஒன்றும் வரவில்லை.

6. ஓர்ந்து நாமொரு சூழ்ச்சியமைத்தோம்
உதயணற் கினிதாகிய பொருளில்,
தேர்ந்து நாம்விடு மற்பெருவீரர்
திறமை சான்றவர் பிழையிலரேனும்,
உதயணற்குறு மாண்பி னமைச்சர்
உறுதி வாய்ந்தனர், ஆற்றலுமுள்ளார்;
சதியகற்றிட எவ்வகையானும்
சார்ந்து வல்லினை ஆற்றுவர் திண்ணம்!

*(பரிவாரத்துடன் மகாராணி வருகிறாள்)*

**அரசி :** மகாசேனருக்கு ஜே!

**அரசர் :** தயைசெய்து உட்காரவேண்டும்.

**அரசி :** என் நாதரின் நியமனப்படியே *(உட்காருகிறாள்)*

**அரசர் :** வாசவதத்தை எங்கே இருக்கின்றாள்?

அரசி : நாரதவீணைப் பாடம் படிப்பதற்கு உத்தரையினண்டை போயிருக்கிறாள்.

அரசன் : திடீரென்று அவள் இப்படி இசை பயில மேற்கொண்டது என்னோ?

அரசி : அவளுடைய தோழி காஞ்சனமாலை என்பவள் வீணை வாசிப்பதைப் பார்த்தாள்; தானும் கற்றுக்கொள்ள வேண்டுமென ஆசைப்பட்டாள்.

அரசர் : அது சிறு பெண்களின் தன்மையே.

அரசி : தங்களிடம் தெரிவிக்கும்படி எனக்கு ஒரு செய்தி சொன்னாள், மகாசேனரே.

அரசர் : அது என்ன?

அரசி : தனக்கு ஒரு ஆசிரியர் இருந்தால் நன்றாயிருக்குமென்று சொல்லுகிறாள்.

அரசர் : அவளுக்கு ஆசிரியர் எதற்காக? இனி கலியாணமாகப் போகிறதே. அவளுடைய கணவனே கற்றுக் கொடுக்கட்டும்.

அரசி : ஓ, ஏன் சிறு பெண்மணி கலியாணம் செய்து கொண்டு என்னைவிட்டு நீங்கும் காலம் உண்மையாக வந்துவிட்டதா?

அரசர் : இதோ பார். அவளுடைய கலியாணத்தைப்பற்றி ஏற்பாடு செய்யத்தான் வேண்டுமென்று என்னைத் தினந்தோறும் துளைத்துக்கொண்டிருக்கிறாயே. இப்பொழுது ஏன் வருத்தப்படுகிறாய்?

அரசி : அவளுக்கு விவாகமாகிப் பார்க்கவேண்டுமென்று எனக்கு ஆசைதான். அவளை விட்டுப் பிரியவேண்டி வருமென்னும் எண்ணமே என்னை வருத்துகின்றது. அவளை யாருக்குக் கலியாணம் செய்து கொடுக்கிறது?

அரசர் : அது இன்னும் நிச்சயமாகவில்லை.

அரசி : என்ன, இன்னும் நிச்சயமாகவில்லையா?

அரசர் :

7. இளமும் மகள் கன்னி
என்றால் அவ - மானம்!
புனைவாள் இனி வதுவை
போவாள் என நோவாய்!
ஒருசார் உயர் கடமை,
ஒருசார் பரி வென்னும்
இருதீ - யிடை வெம்பி
ஈன்றாள் மனம் அலையும்!

தன் மாமனாருக்குப் பணிவிடை செய்யத்தக்க வயது வாசவ தத்தைக்கு வந்துவிட்டது. இன்றைக்கு மற்றொரு ராயபாரி வந்துள்ளார். அவர் காசியரசரின் குருவாகிய கனமிக்க ஜைவந்தி என்பவராவர். அவருடைய கீர்த்தியைக் கேட்டு நான் மகிழ் கிறேன். (தனக்குத்தானே) இவள் ஒரு வார்த்தையும் சொல்லாமல் இருக்கிறாள். ஆனால், கலக்கமுற்றிருக்கிறாள்; இவளுடைய கண்களில் நீர் ததும்புகின்றது. இவள் எப்படித் தீர்மானம் செய்வதற்காகும்? எங்ஙனமிருப்பினும் நான் இவளுக்கு அதைப் பற்றிச் சொல்வேன். (உரக்க) நம்மோடு சம்பந்தம் செய்து கொள்வதற்கு .....அரசர்கள் முன்வந்திருக்கிறார்கள்.

அரசி : இந்த விவரங்களெல்லாம் ஏன்? எவருக்கு விவாகம் செய்து கொடுத்தால் அந்த லக்னத்தை நினைத்து நாம் விசனிக்க மாட்டோமோ அப்படிப்பட்டவருக்கு அவளைக் கன்னியாதானம் செய்யுங்கள்.

அரசர் : ஆமாம். இப்போது நீ அப்படிக்கொண்டேயிருப்பாய். இது கஷ்டமான விஷயம் ஆகையால், பிரியே! உன் இஷ்டத்தைச் சொல். சொல்கிறேன் கேள்.

8. மகதமன்னன், காசிவேந்தன்.
வங்கநாடன், கூர்ச்சரத்தின்
மகிபனாவான், மிதிலை அண்ணல்,
வளமை சான்றான் சூரசேனன்.*

---

* பீஹார், வாரணாசி, வங்காளம்; குஜராத் (கூர்ஜ்ஜரம்) திர்ஹட், மட்ரா.

எவரை நீக்கி எவரை ஏற்பேன்
புவியை ஆளும் பொருநர் தம்முன்!

அரியசீலம் அறிவுகொண்டார்
அணுகிநின்றார், இவரிலாரே
உரியவேந்தர்? முடிவு காணேன்!
ஓர்ந்து நீயே மொழிக மாதே!

எவரை நீக்கி எவரை ஏற்பேன்,
புவியை ஆளும் பொருநர் தம்முன்

*(பரபத்தியக்காரன் வருகிறான்)*

*பரபத்தி :* வத்ஸராஜன்.

*அரசர் :* வத்ஸராஜனுக்கு என்ன?

*பரபத்தி :* பொறுக்க வேண்டும், பிரபுவே, பொருத்தருள வேண்டும். நற்செய்தி சொல்ல வந்த அவசரத்தில் சொல்வதை மறந்தேன்.*

*அரசர் :* என்ன நற்செய்தி?

*அரசி :* (எழுந்து) அவ்வரசன் நீடூழி வாழ்க.

*அரசர் :* (மகிழ்ச்சியோடு) தேவி! அந்நற்செய்தியை நீ கேட்கவேண்டாம்? உட்கார்.

*அரசி :* நாதன் ஆணைப்படியே (உட்காருகிறாள்).

*அரசர் :* (ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துக் கொண்டிருந்த பரபத்தியக் காரனை நோக்கி) எழுந்து தாராளமாகப் பேசு.

*பரபத்தி :* (எழுந்து) வத்ஸராஜனை நமது கனமிக்க மந்திரியாராகிய சாலங்காயனர் சிறைப்பிடித்துள்ளார்.

*அரசர் :* (மகிழ்வுற்று) என்ன சொன்னாய்?

---

* வந்தவுடன் 'மகாசேனருக்கு ஜே' என்று அவன் சொல்ல வேண்டும். அப்படி அவன் சொல்லவில்லை.

*பரபத்தி* : (திரும்ப அப்படியே சொல்கிறான்) வத்ஸராஜனை நமது கனமிக்க மந்திரியாகிய சாலங்காயனர் சிறைப்பிடித்துள்ளார்.

*அரசர்* : உதயணனையா?

*பரபத்தி* : மற்றெவரை?

*அரசர்* : சதானிகன் குமாரனையா?

*பரபத்தி* : ஆமாம்.

*அரசர்* : சஹஸ்ரானிகனது பேரனையா?

*பரபத்தி* : அவரையே.

*அரசர்* : கௌசாம்பிக்கு இறைவனையா?

*பரபத்தி* : ஆம்.

*அரசர்* : அந்த இசை நிபுணனையா?

*பரபத்தி* : அப்படித்தான் சொல்கிறார்கள்.

*அரசர்* : வத்ஸராஜனையேதானா?

*பரபத்தி* : ஆம், வத்ஸராஜனையே, சந்தேகமில்லை.

*அரசர்* : யௌகந்தராயணன் இறந்துபோயினனோ?

*பரபத்தி* : அவர் இறந்துபோகவில்லை, கௌசாம்பியில் இருக்கிறார்.

*அரசர்* : அங்ஙனமாயின், வத்ஸராஜன் பிடிபட்டானென்பதை நான் நம்பமாட்டேன்.

*பரபத்தி* : நம்பத்தான் வேண்டும். மகாராஜர் என் வார்த்தையையெடுத்துக் கொள்ள வேண்டும்.

அரசர் :

9. உற்றான் சிறைவாய் உதயனன் என்றாய்
ஏற்றால் நம்புவன் இம்மொழி யானே?

உள்ளங் கையுற மந்தாரமலையை*
உயரத்தூக்கினை நீயென வந்து
விள்ளும் சேதியை ஒத்தது சொன்னாய்!
வீரத்திருமகன் உதயணன் என்பார்! (உற்)

துள்ளும் பகைமிக எத்துணைவரினும்
தூளாய் வீழ்த்துவன்! அவனுறுதுணையாய்க்
கொள்ளும் மந்திரி நுண்ணிய அறிஞன்
கோதறுதந்திர நிபுணனுமன்றோ? (உற்)

பரபத்தி : பேரரசே, பொறுக்கவேண்டும், நான் முதுமை வாய்ந்த பிராமணன். மகாராஜரிடம் ஒருபோதும் பொய் சொன்னதில்லை.

அரசர் : அது சரியே. சாலங்காயனன் அனுப்பிய நற்செய்தி சொன்னவன் யார்.

பரபத்தி : அவர் ஆள் எவனையும் அனுப்பவில்லை. வத்ஸராஜனை அதிவிரைவான இரதத்தி லேற்றிக் கொண்டு அவரே நேரில் வந்திருக்கிறார்.

அரசர் : அவரே வந்திருக்கிறாரா? என்ன மகிழ்ச்சி! நமது படையினர் இன்றைக்குத் தங்கள் கவசங்களைக் கழற்றி வைத்துவிட்டு மகிழ்ச்சியோடிருக்கட்டும். இனி அரசர்களுக்குப் பயமே இல்லை, வேவுகாரர்களுக்கு அவசியமே இல்லை. சுருக்கிச் சொல்லின், இன்றைக்கே நான் 'மகாசேனன்' ஆனேன்.

அரசி : அவரை மந்திரியார் இங்கே கொண்டு வந்திருக்கிறாரா?

பரபத்தி : ஆம்

அரசி : அங்ஙனமாயின், வாசவதத்தையை நாம் அவசரப்பட்டு எவருக்கும் வாக்குத்தத்தம் செய்யவேண்டாம்.

* பாற்கடலைக் கடைவதற்கு மத்தாக உபயோகித்த புராணப் பிரசித்தமான மந்தர பர்வதம்.

அரசர் : இவன் போரில் தோற்றுப்போன என் பகைவன் அது ஞாபக மிருக்கட்டும். பாதராயணா, சாலங்காயனர் எங்கே?

பரபத்தி : அவர் மங்கள முகத்துவாரத்தில் காத்துக்கொண்டிருக்கிறார்.

அரசர் : பரத ரோஹகருக்குப் போய்ச் சொல்லி, இளவரசருக்குரிய மரியாதையோடு அவரை வரவேற்று, வத்ஸராஜனுடன் அவரை உள்ளே அழைத்துக் கொண்டு வரச்செய்.

பரபத்தி : மகாராஜர் உத்தரவுப்படியே.

அரசர் : சற்றுப்பொறு.

பரபத்தி : இன்னும் இங்கேதான் இருக்கிறேன்.

அரசர் : வத்ஸராஜரைப் பார்ப்பதற்கு எவரையும் தடை செய்ய வேண்டாம்.

10. சிறையுண்டு பலியாக நிற்கின்ற செங்கட்
சீயத்தை ஒத்தானை, மாற்றானை, நன்றே
இறைமக்கள் அனைவோரும் எதிர்நின்று காண்க!
இதுகாறும் அவனுற்ற புகழ்மட்டும் அறிவார்.

பரபத்தி : உத்தரவு! (போகிறான்).

அரசி : இந்த அரச குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் எத்தனையோ நிகழ்ந்துள்ளன. ஆனால், இதற்கு முன்னால் மகா சேனர் இவ்வளவு களிப்புற்றிருந்தாக எனக்குத் தெரியவில்லை.

அரசர் : வத்ஸராஜன் பிடிபட்டானென்பது போன்ற நற்செய்தி இதற்குமுன் எப்பொழுதேனும் நான் கேட்டதாகத் தெரிய வில்லையே.

அரசி : அது உண்மையில் வத்ஸராஜன் தானா?

அரசர் : சந்தேகமென்ன, அவன்தான்.

அரசி : அநேக அரச குடும்பத்தவர்கள் நம்மோடு விவாக சம்பந்தம் செய்துகொள்ள விரும்பித் தூதர்களையனுப்பியிருப்பதாகக்

கேள்விப்படுகிறேன். இந்த அரசகுமாரன் மாத்திரம் இதுவரையில் ஒரு தூதனையும் அனுப்பவில்லை.

*அரசர் :* நம்மோடு விவாக சம்பந்தம்செய்து கொள்ளும் விருப்பம் ஒருபுறமிருக்கட்டும். 'மகாசேனன்' என்னும் பெயரையே அவன் பாராட்டுவதில்லையே, பிரியே!

*அரசி :* தங்கள் பெயரையே அவமதிக்கிறானா? அவன் விளையாட்டுப் பிள்ளையா, அல்லது படிக்காத முட்டாளா?

*அரசர் :* அவன் சிறு பிள்ளைத்தனமாயிருக்கலாம். ஆனால், கல்வி யில்லாக் கசடனல்லன் என்பது திண்ணம்.

*அரசி :* அங்ஙனமாயின், அவனுக்கு அவ்வளவு இறுமாப்பு ஏன் வந்தது?

*அரசர் :* வேத நூலறிவின் நிலைகண்டோரான ராஜிரிஷிகள் அநேகர் தோன்றிய பரதராஜ பரம்பரையில் உதித்ததனால் அவனுக்கு கருவம் உண்டாயிருக்கின்றது. இசைக்கலையில் பரம்பரையாக வந்துள்ள ஞானத்தினால் அந்தக் கர்வம் அதிகரித்திருக்கின்றது. யௌவன அழகினால் அவனுக்குத் தலை திரும்பிப் போயிற்று. குடிகளுக்கு அவன்மீதுள்ள அதிசய அன்பினால் அவன் தனக்கு மிஞ்சினவன் எவனுமில்லையென நினைக்கிறான்.

*அரசி :* பிராணநாதா! மருமகனுக்கு எத்தனை லக்ஷணம் இருக்க வேண்டுமென்று விரும்புவோமோ அத்தனை இலக்ஷணங்களும் அவனுக்கு அமைந்திருக்கின்றனவே. என்ன விபரீதத்தினால் அவனுக்கு செயல் குறைவு ஏற்பட்டிருக்கின்றது?

*அரசர் :* என் அன்பே, பொருத்தமற்றதொன்றை நீ மெச்சுதல் ஏற்குமோ? சொல்கிறேன், கேள்.

*11.* இடைவெளியின்றிச் சுடுபுகை போக்கி,
எரியும் காட்டுத்தீயென விரவி,
நாற்றிசை மேவும் நானிடும் ஆணை!
ஆயினும் என்னை அவமென எண்ணி
இகழ்பவர் உள்ளார்! என் கரமேந்தும்
கோல்முறைதனையும் தாழ்வுறப் பேசி
நகுவார் வற்ச நாட்டினர் அன்றே!

(பரபுத்தியக்காரன் வருகிறான்)

*பரபத்தி :* மகாசேனருக்கு ஜே! மகாராஜாவின் கட்டளைப் படி சாலங்காயணரைக் கௌரவமாக வரவேற்று உபசரித்தோம். ''வத்ஸராஜ குடும்பத்தில் பரதர்களால் வாசிக்கப்பெறும் கோஷவதி என்னும் வீணாவிசேஷரத்தினம் இதோ இருக்கின் றது. மகாசேனரே! பெருமனங்கொண்டு இதனையேற்றுக் கொள்வீராக!'' என்று அவர் சொல்லியனுப்பியிருக்கின்றார்.

(வீணையைக் காட்டுகிறான்).

*அரசர் :* மங்களகரமான வெற்றிக் குறியாக இதனை ஏற்றுக் கொள்கிறேன். (அதனை வாங்கிக் கொள்கிறான்) ஆகவே கோஷவதியெனும் புகழ்பெற்ற வீணை இதுவே.

12. தந்தியில் நயனம் செல்லத்
 தைவர விரல்கள், பொங்கும்
விந்தையினமுத இன்ப
 மெல்லிசை செவிகள் மாந்தி
சிந்தையிற் கொடுமை யாவும்
 தேய்ந்து வெங்களிறு, நீத்தோர்
மந்திர மொழியை ஏற்ற
 பான்மையில் மருங்கு சூழும்!

போர்க்களத்துப் பறிபொருள்களை நம்மனம் வந்தவாறு உப யோகிப்பதனால் உண்டாகும் மகிழ்ச்சி அதிகமே.

13. தகவுற அரசியல் உணருவான்
 தலைமகனான கோபாலகன்;
இகலுறு போர்வினை நாடுவான்
 இளையவனாகிய பாலகன்;
கவிதையை இசையினை இருவரும்
 கருதிய வாறிலை: ஆகையால்
எவரிடம் ஈகுவன் வெற்றியின்
 எய்திய இப்பெரு வீணையை?

ஆகையால், எவருக்கு அளித்தால் இந்த வீணை பயன்படும்? பிரியே! வாசவதத்தை வீணை வாசிக்கத் தலைப்பட்டிருக்கிறா ளென்று சொன்னாயல்லவா?

*அரசி :* ஆம்.

அரசர் : அங்ஙனமாயின், இதை அவளுக்குக் கொடு.

அரசி : இந்த வீணையை அவளுக்குக் கொடுத்தால் வீணையின்மீது அவளுக்குள்ள பித்து அதிகரிக்கும்.

அரசர் : அவள் வீணை வாசிக்கட்டும், வீணை வாசிக்கட்டும். மாமனார் வீட்டுக்குப் போனால் இவ்வளவு தாராளமாக வீணை வாசிக்க முடியாது. பாதராயணா, இளவரசி எங்கே?

பரபத்தி : அவள் மந்திரியாருடன் இருக்கிறாள்.

அரசர் : வத்ஸராஜன் எங்கே இருக்கிறான்?

பரபத்தி : அவர் மிக இணக்கப்பட்டுவிட்டார். நாம் சொல்கிறபடி கேட்கிறார். அவர் உடம்பெல்லாம் காயங்கள் நிறைந்திருக் கின்றன. அவரை டோலியிலேற்றி நடு அரண்மனைக்குக் கொண்டு போனார்கள்.

அரசர் : அவனுக்கு அத்தனை காயங்கள் பட்டிருக்கின்றனவென்று கேட்க விசனமாயிருக்கின்றது. அவன் அஞ்சாவீரங் காட்டியதற்குப் பிராயச்சித்தம் இதுவே. இந்த நிலைமையில் அவனைப் புறக் கணிக்கலாகாது. பாதராயணா, அவனுக்கு உண்டாயிருக்கிற காயங் களுக்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளைக் கவனிக்கும்படி பரத ரோஹகருக்குச் சொல்.

பரபத்தி : மகாராஜா உத்தரவுப்படியே.

அரசர் : வேண்டாம், சற்று இரு.

பரபத்தி : இங்கேயே காத்துக்கொண்டிருக்கிறேன்.

அரசர் : அவனுடைய முகக்குறிப்பு முதலியவற்றைக் கவனித்து நடக்கவேண்டும். குறிப்பறிந்து உபசாரம் செய்யவேண்டும். போரைப்பற்றியேனும் தோல்வியைப்பற்றியேனும் பேசவே

கூடாது. அவன் தும்மினாலும் அல்லது அதுபோன்ற ஏதேனும் செய்தாலும், 'நிறை ஆயுள் பெறுக' என்று அவனை வாழ்த்த வேண்டும். அவ்வாசி மொழியைச் சமயத்திற்கும் சந்தர்ப்பத் திற்கும் ஏற்றவாறு சாதுரியமாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

பரபத்தி : உத்தரவுப்படியே (போய்த்திரும்பிவருகிறான்). மகாசேனருக்கு ஜே! வத்ஸராஜனுடைய காயங்களுக்கு அவன் வரும்வழியிலேயே சிகிச்சை செய்து கட்டுகட்டியிருக்கிறார்கள். அந்தக் கட்டுக்களை இப்பொழுது அவிழ்க்கக்கூடாதாம். இது உச்சிவேளை; வெய்யில் மிகக்கடுமையாயிருக்கின்றது.

அரசர் : வீரமிக்க அப்போர்வீரன் இப்பொழுது எங்கே இருக்கிறான்?

பரபத்தி : மயில்மண்டபத்தினண்டை இருக்கிறான்.

அரசர் : சீ, சீ. அவனை வைத்திருப்பதற்கு அது இடமன்று. வெய்யில் தாக்காதபடி அவனைப் பின்னிறமாளிகைக்குக் கொண்டு போங்கள்.

பரபத்தி : அப்படியே (போய்த் திரும்பி வருகிறான்). மகாராஜா கட்டளை யிட்டபடியே எல்லாம் செய்தாய் விட்டது. மந்திரியாராகிய பரதரோஹகர் மகாராஜாவைப் பார்க்க விரும்புகிறார்.

அரசர் : வத்ஸராஜனை இவ்வளவு அன்புடன் பாராட்டுவது அவருக்குப் பிடிக்கவில்லையென்று தோன்றுகிறது. அது அவருடைய ராஜ்ய தந்திர முறைக்கு ஏற்றதன்று. அவரை என் வழிக்குக் கொண்டு வருவேன்.

அரசி : விவாகம் நிச்சயமாயிற்றா?

அரசர் : இல்லை, தீர்மானித்ததாக இன்னும் சொல்ல முடியாது.

அரசி : அதற்கு அவசரப்பட வேண்டாம். என் பெண்மணி இன்னும் சிறு குழந்தை.

*அரசர் :* உன் இஷ்டப்படியே செய்வோம். இனி உள்ளே போ.

*அரசி :* உத்திரவுப்படியே *(பரிவாரத்துடன் போகிறாள்)*

*அரசர் : (ஆலோசனையில் ஆழ்ந்து)*

14. முனைநாள் கொண்டான் கர்வம்;
மூண்டேன் நானும் பகைமை!
நினையேன் நெஞ்சில் நேயம்
நிருபம்சிறையாம் வேளை!
''நொந்தான் இதுநாள் இடரும்
நோவும் எய்திச் சமரில்
வெந்தான் உயிரும்'' எனவே
மெய்யே நானும் குலைவேன்.

*(எல்லோரும் போகிறார்கள்)*

*(இரண்டாம் அங்கம் முற்றிற்று)*

# அங்கம் - 3*

(உஜ்ஜைனியில் ஒரு கோவிலில் மாறுவேடம் பூண்ட விதூஷகனும் உதயணனுடைய மந்திரிகளிருவரும் மறைவாகக் கூடுகிறார்கள்.)

(பிச்சைக்கார வேஷம் மேற்கொண்ட விதூஷகன் வருகிறான்)

**விதூஷகன் :** (கைமெய்ச் சேஷ்டை பண்ணிக்கொண்டு) என்ன இக் கோவில் தாழ்வாரத்தில் தின்பண்டங்கள்** நிரம்பிய என் கப்பரையை வைத்தேன். அதனுடன் நான் தானமாகப்பெற்ற பொற்பணங்களை எண்ணிப்பார்த்து முடிந்து வைத்தேன். இப்பொழுது திரும்பிப் பார்க்கும்போது பக்ஷணக் கப்பரையைக் காணவில்லை. (ஆலோசித்துக் கொண்டு) அந்தப் பயல் என் பின்னே வந்துகொண்டிருந்தான். அவனுக்கு ஒரு மோதகம் கொடுத்தேன். அதோடு அவன் திருப்தியடைந்தான். அவன் என்னைப் பின் தொடரவில்லை. நாய்கள் உள்ளேவந்து என் வெல்லக்கொழுக்கட்டைகளைத் திருடித் தின்பதற்கில்லாதவாறு கோவில் மதில்கள் உயர்ந்திருக்கின்றன; பக்ஷணங்கள் உடைந் திருக்கவில்லை. சமைத்தெடுத்தவண்ணமே முழுமையாய் இருந் தன. வழிப்போக்கர்களின் கண்ணில் அவை பட்டிருக்க மாட்டா. அவற்றை நானே தின்றுவிட்டேனா? ஏப்பம்விட்டுப் பார்க் கிறேன். ஆ! ஆ! பழந்துருத்தியினின்று வருவதுபோல வெறும் வாயுவே என் வயிற்றிலிருந்து வருகின்றது. இவ்வாலயத்துத் தேவதையாகிய தன் தேவி காத்தியாயனிக்கு உரியதென்று

---

* இவ்வங்கத்தின் முதற்பாதியில் ஒருவிதமான குறிப்புச் சொற்கள் உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. அச் சொற்களுக்கு இரண்டு அர்த்தம் உண்டு. ஓர் அர்த்தத் தில் அவை இனிமையான தின்பண்டங்களைக் குறிக்கும். மற்றோர் அர்த்தம் ஆழ்ந்து கிடப்பது; அது கற்பனைக்குரியது. அச் சதியாலோசனையின் போக்கை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவ்வளவு அவசியம் இல்லை. ஏனெனில், இவ்வங்கத்தின் இரண்டாம் பாதியில் அது விளக்கப்பட்டிருக்கின்றது. அதன் முக்கியமான உத்தேசம் என்னவெனில், களியாட்டுக்கான வேடிக்கையும் வினோதமும் அமைப்பதேயாம்; அதுவன்றி, அது ஒருவகையான சொற்சித்திர தொடியாகும்; ஒரேவிதமான சொற்கள் வேறு வேறு அர்த்தத்தில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன.

** மோதகமல்லகம் - மோதகம் என்பது வெல்லம் தேங்காய் முதலியன சேர்த்துச் செய்த கொழுக்கட்டை; மல்லகம் - கப்பரை.

நினைத்துச் சிவபெருமான் ஒருவேளை என் பணியாரப் பாத்திரத் தைக் கொண்டுபோய்த் தன்னிடம் வைத்துக்கொணடனனோ என்னவோ? (மேலும் சேஷ்டைகள் காட்டுகிறான்) இங்குள்ள இளம் பிரம்மசாரி* பலபல உருவம் மேற்கொண்டு அநேகக் கோணங்கிக் கூத்துகள் ஆடுவனென்று சொல்வார்கள். இவன் என் பணியாரச் சருவத்தையெடுத்துக் கொண்டனனோ? நான் பார்க் கட்டும். என்ன ஆச்சரியம்! என் பக்ஷணக் கப்பரை இதோ சிவன் பாதத்தினண்டை இருக்கின்றதே. இதை நான் திரும்பக் கைக் கொள்வேன். ஆண்டவனே, என் மோதகக் கப்பரையைத்தாரும். இறைவனே, என் மோதகங்களைத் திருடினவர் நீரே. அடடா, மனக்கலக்கத்தினாலும் துக்கத்தினாலும் எனக்குக் கண் சரியாகத் தெரியவில்லை. இந்தச் சுவரிற் சித்திரிக்கப்பட்டுள்ள மோதகக் கலசமே என் னுடைய பணியாரக் கப்பரையென்று தவறாக நினைத்தேன். நல்லது, இந்தச் சித்திரத்தைத் துடைத்துவிடு வேன். (தன் கையி னால் துடைக்கிறான்) அடா, இவ்வோவியன் நன்றாகச் சித்திர மெழுதியிருக்கின்றான். வர்ணங்கள் நன்றாகப் பதிந்திருக்கின்றன. நான் தேய்க்கத் தேய்க்க இவ்வர்ணங்கள் நன்றாகப் பிரகாசிக்கின்றன. இரு, தண்ணீரினாற் கழுவி விடுவேன். சரி, தண்ணீருக்கு எங்கே போவேன்? ஆ, இதோ நேர்த்தியான குளம் ஒன்று இருக்கின்றது; சுத்தமான நல்ல நீர் நிரம்பியிருக்கின்றது. எனது மோதக மல்லகம் காணாமற் போயிற்றே; சிவனுக்கும் மல்லகம் இல்லாமற் போகட்டும்.

(திரைக்குப் பின்)

மோதகம், மோதகம்!

**விதூஷகன் :** (தனக்குத்தானே) இவன் நாசமாய்ப்போக! இந்தப் பைத் தியக்காரன் என் மோதகக் கப்பரையையெடுத்துக்கொண்டு போய்விட்டான். மழை பெய்தபின் சாலைவழியாகச் சேற்றுநீர் நுரைத்துப் புரண்டோடுவது போல இவன் பாபிச் சிரிப்பொன்று சிரித்துக்கொண்டு இங்கே ஓடிவருகிறான். நில், பைத்தியக்காரா, நிற்காவிட்டால் இந்தத் தடியினால் உன் மண்டையை உடைப் பேன்.

(பைத்தியக்காரன் வருகிறான்)

---

* சிவகுமாரனாகிய கணேசன்.

**பைத்தியக்காரன் :** மோதகம், மோதகம்.

**விதூஷகன் :** இந்தா, பைத்தியக்காரா, என் மோதகக் கப்பரையைத் திருப்பிக் கொடுத்துவிடு.

**பைத்திய :** மோதகமா? எங்கே இருக்கின்றது? யாருடையது? மோதகங் களை யாராவது எறிந்துவிட்டார்களா, அல்லது மூட்டைகட்டி வைத்திருக்கிறார்களா, அல்லது தின்றுவிட்டார்களா?

**விதூஷகன் :** தின்னவுமில்லை, எறியவுமில்லை.

**பைத்திய :** மோதகம் தின்ன என் வாயில் ஜலம் ஊறுகின்றது.

**விதூஷகன் :** இந்தாடா, பைத்தியக்காரா! என் மோதகக் கப்பரையைத் திருப்பிக் கொடுத்துவிடு. பிறருடைய பொருளைக் கொடாமல் பிடித்து வைத்துக்கொண்டு சிறைக்குப் போகாதே.

**பைத்தியக்காரன் :** என்னை யார் சிறைப்படுத்துவார்? மோதகங்களே என்னைக் காக்கும்.

1. புதுமை இந்த ஆடை - மெய்யிற்
   புனைய மகிழ்வு காணும்!
   நிதியளித்து வாங்கி - மன்னன்
   நேரில் அன்று தந்தான்!
   புதியதென்ற போதில் - பார்வை,
   பொலிவு, மேன்மை தோன்றும்
   அதிக காலமானால் - எல்லாம்
   அழிவு கொண்டுபோகும்!

**விதூஷகன் :** இந்தாடா பைத்தியக்காரா. என் கொழுக்கட்டைக் கப்பரையைக் கொடுத்து விடு. அதை வழியுணவாகக் கொண்டு நான் என் உபாத்தியாயர் வீட்டுக்குப் போகவேண்டும்.

**பைத்திய :** அதையே வழியுணவாகக் கொண்டு நான் நூறுகாதம் போகவேண்டும்.

**விதூஷகன் :** நீ என்ன தேவேந்திரனுடைய யானையா?*

---

* அத்தனை தூரம் நடப்பதற்கு.

**பைத்திய :** ஏய், நான் இந்திரனுடைய யானையே. ஆனால், அவ்வானவர் இறைவன் இப்போது என்மீது சவாரி செய்வதில்லை. இந்திரனுக்கு விலங்கு போட்டிருக்கிறார்களென்று கேள்விப்பட்டேன். பின்னர், மழைத் தாரையை வறட்டும் மின்னற் கொடிகள் போல் மின்னி, சுழற்காற்றிற் சுழன்று, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த மேகப்படலங்களைப் பிளந்தெறிந்தான்.

**விதூஷகன் :** ஏ, பைத்தியக்காரா! என் மோதகக் கப்பரையைத் திருப்பிக் கொடுக்கமாட்டாயா? ஓ, உதவி கோரிக் கூவுவேன்.

**பைத்திய :** உன்னாலானவரையிற் கூவு! வீறிட்டுக் கத்து! உரத்துக் கூவு!

**விதூஷகன் :** துணை செய்யுங்கள், துணைக்கு வாருங்கள். ஐயா, கெடு நடத்தை நடக்கிறது.

**பைத்திய :** நானும் துணை தேடிக் கூவுவேன். இந்திரன் சிறைப்பட்டிருக்கிறான், ஐயன்மீர்! இந்திரன் சிறைப்பட்டிக்கிறான்.

**விதூஷகன் :** துணை செய்யுங்கள், துணை செய்யுங்கள்; நிலைகுலைந்தது.

*(திரைக்குப் பின்னிருந்து ஒரு குரல்)*

*(பயப்படாதேயும், பிராமணோத்தமரே, பயப்படாதேயும்)*

**விதூஷகன் :** (குதிகொண்டு) சந்திரன் உதயமாகும்போது நக்ஷத்திரங்களும் தோன்றுகின்றன. பிராமணனாயிருப்பதெனின் இந்நாளில் தாழ்மையுற்றிருப்பதே. பிராமணர்களாகிய நம்மைக் காப்பதற்கு நன்னடக்கையோடு கூடிய பௌத்த பிக்ஷு ஒருவர் வரவேண்டியிருக்கின்றது.

*(பௌத்த பிக்ஷு வருகிறான்)*

**பிக்ஷு :** பயப்படாதேயும் சத்பிராமணரே, பயப்படாதேயும்! இங்கே யார் இருக்கிறார்? என்ன சங்கதி? துணை வேண்டுமென்று இங்ஙனம் கூச்சலிடுவானேன்?

**விதூஷகன் :** உண்மையாக இந்த பிக்ஷு துவாரபாலகனாகவும் போலீஸ் காரனாகவும் செயல்புரிகிறான். சாதுவான பிக்ஷுவே! இதோ இருக்கிற பைத்தியக்காரன் என் மோதகக் கப்பரையையெடுத்துக் கொண்டு, கொடுக்கமாட்டேன் என்கிறான்.

**பிக்ஷு :** மோதகங்களா! எங்கே நான் பார்க்கட்டும்.

**பைத்திய :** அவைகளைப் பாரும், சாமியாரே. அவைகளைப் பாரும் (அவைகளைக் காட்டுகிறான்)

**பிக்ஷு :** (அவைகளைப் பார்த்துத் துப்புகிறான்)

தூ! தூ!

**விதூஷகன் :** ஓ, என் துரதிருஷ்டத்தை என்னவென்று சொல்லுவேன். என் மோதகங்களை நான் இந்தப் பைத்தியக்காரன் கையில் திரும்பக் கண்டேன். ஆனால், அறச்செயல் வாய்ந்த இப்பிக்ஷு அவற்றின் மீது எச்சிலுமிழ்ந்து விட்டான்.

**பிக்ஷு :** ஓ, பைத்தியக்கார நல்லோனே, திரும்பிக் கொடுத்துவிடு. கொந்தளிக்கும் நீர்மீதுள்ள நுரையைப்போல் இம் மோதகங்கள் வெண்மையாயிருக்கின்றன. பருத்து மிருதுவாயிருக்கின்றன. இவற்றிற்குள் பலவகைப் பொடிகளாலாய பூர்ணம் வைக்கப் பட்டிருக்கின்றது. இவற்றினின்று கள்ளைப்போன்ற ரஸம் சொட்டுகின்றது. இவைகளைத் தின்னாதே. தின்றால் க்ஷய ரோகத்தால் நீ மாண்டு போவாய்.

**விதூஷகன் :** அந்தப் பையல்கள் பாழாய்ப்போக. மோதகங்கள் என்று சொல்லும் கள்ளுக்கடை லட்டுண்டைகளை எனக்குக் கொடுத் திருக்கின்றார்கள்.

**பிக்ஷு :** திருப்பிக் கொடுத்துவிடு, பைத்தியக்காரா, திருப்பிக் கொடுத்து விடு! என் வார்த்தையைக் கேள். கொடுக்காவிடில் உன்னைச் சபிப்பேன்.

**பைத்திய :** கோபங்கொள்ளாதே, சாதுவே! என்னைச் சபிக்காதே. (விதூஷகனை நோக்கி) இவைகளையெடுத்துக் கொள்.

**பிக்ஷு :** பூசிக்கத்தக்க பிராமணரே, என்சக்தியைப் பாரும்!

**விதூஷகன் :** பிக்ஷுகன் தன்னைச் சபிக்கப் போகிறானென்று தெரிந்து உடனே பயத்தினால் நடுங்கிக்கொண்டு நிற்கிறான். எனது மோதக மல்லகத்தை எனக்கு ஒப்பிப்பதற்காக நுனிவிரலால் தாங்கிக் கொண்டிருக்கிறான். பைத்தியக்கார நல்லானே, எனது வெல்லக் கொழுக்கட்டைக் கப்பரையைத் திருப்பிக் கொடுத்துவிடு.

**பிக்ஷு :** வாரும், ஐயா, வாரும். மோதகங்களை உமக்குக் கொடுத் ததற்காக எனக்கு வாழ்த்துக்கூறும்.

**விதூஷகன் :** ஆ! ஆ! என் சொந்த மோதகங்களுக்காக உம்மை வாழ்த்த வேண்டுமா! இல்லறத்தான் ஒருவன் அவைகளை எனக்குத் தானங் கொடுத்தான். அவற்றில் உமக்கும் கொடுக்கிறேன். உமக்கு வளமை வளர்க. இந்தப் பைத்தியக்காரன் அக்கினி குண்டத்திற்குப் போகிறான். இது நடுப்பகல். மத்தியானத்திற்கு முன்னரே இவ் விடத்தை விட்டு எல்லாரும் போய்விடுவார்கள். போகிற வழி யிலுள்ளதொரு வீட்டில் நான் தானம்பெற்ற இந்தப் பொற் பணத்தைக் கொண்டுபோய் வைக் கிறேன். ஒருவன் என் வேட்டியைக் கேட்கிறான். மற்றொருவன் பணத்தைக் கேட் கிறான்.

*(மூவரும் அக்கினி தேவாலயத்திற்குள் போகிறார்கள்)*

**யௌகந்த :** வசந்தகா, இவ்வாலயம் வெறுமையாயிருக்கின்றதா?

**விதூஷகன் :** ஆம், ஐயா, முற்றும் வெறுமையே.

**யௌகந்த :** அங்ஙனமாயின் நாம் கட்டித் தழுவிக் கொள்வோம்.

**இருவரும் :** நல்லது (ஆலிங்கனம் செய்து கொள்கிறார்கள்).

**யௌகந்த :** நீங்கள் இருவரும் நன்றாகப் பாடுபட்டிருக்கிறீர்கள். உட்காருங்கள், நீயும் உட்கார்.

**இருவரும் :** நல்லது.

*(மூவரும் உட்கார்கிறார்கள்)*

**யௌகந்த :** வசந்தகா, அரசரைப் பார்த்தாயா!

**விதூஷகன் :** ஆம், ஐயா, மகாராஜாவைப் பார்த்தேன்.

**யௌகந்த :** இரவில் பந்தோபஸ்து இல்லை. ஆகையினாலே, நாம் பகலில் ஒன்றுகூட வேண்டியிருக்கிறது.

2. கதிர் மறையும் - இருள்நிசியை
எதிர்நோக்கி நிற்போம்;
கனலிஎழ இரவழியும் -
பகல்நாடி நிற்போம்;
இதுமுறையிற் கால மழிந்
தேக மனம் ஏங்கி
இடர்தீர வாய்த்திடு நற்
பொழுதை விழைகின்றோம்;

**ருமண்வான் :** 'பொழுதை விழைகின்றோம்' என்று சொன்னீர். ஆனால் இரவும் பகலும் சமானமேயென்று வார்த்தைக்குச் சொல்லிய போதிலும் இரவு கஷ்டம் நிறைந்திருக்கின்றது.

3. இருளெனில் இதயம்
மருளுவர் மாற்றார்!
நாட்டினர் அன்பும் நலமுறு துணிவும்
தாட்டியும் இல்லார் சாம்புவர் இரவில்! (இரு)
ஒளிவர அன்னார் அறுபழியெல்லாம்
வெளியுறும்! இடரும் வெள்ளிடை மலையாம்! (இரு)

**யௌகந்த :** அரசருடன் பேசினாயா?

**விதூஷகன் :** ஆம், ஐயா! மகாராஜர் என்னை நெடுநேரம் நிறுத்தி வைத்துக்கொண்டிருந்தார். அவர் அங்கே போய் இன்றைக்குப் பதினான்காம் நாள். அவர் ஸ்நானம் செய்கையில் அருகில் இருந்தேன்.

**யௌகந்த :** அவர் ஸ்நானம் செய்துவிட்டாரா?

**விதூஷகன் :** ஆம், மகாராஜர் குளித்துவிட்டார்.

**யௌகந்த :** தேவர்களைத் தொழுதாரா?

**விதூஷகன் :** ஆம், ஆனால் வெறும் நமஸ்காரம் மாத்திரம் செய்தார்.

**யௌகந்த :** அரசர் சுவஸ்தப்படுவதற்கான நிலைமையில் இருப்பது நல்லதே.

4. வந்தனை நாடிய வேளையிலே - மன்னன்
 மஞ்சனம் ஆடிய காலையிலே
 முந்தி ஒலித்தது பேரிகையே - மீள
 மூண்டு முழங்கிட வேண்டுவமே!
 இன்புற மணிநீ ராடுகையில் - இந்நாள்
 எமதிறை ஆலய மெய்துகையில்
 புன்தனை ஒலிட நேர்ந்ததுவே - விதியின்
 போக்கிது! வேறிலை காரணமே!

ருமண்வான் : தங்கள் முயற்சியினால் நல்ல நாட்களில் அரசர் சீக்கிரத்தில் முன்போலத் தேவாராதனை செய்வதற்காகும்.

யௌகந்த : வசந்தகா, நீ போய் அரசரை மற்றொரு முறை பார்த்து, நான் சொல்லியதாக இந்தச் செய்தியைச் சொல் : - ''இவ்விடத்தை விட்டு நீங்கிப் போவதற்காக நாம் ஆலோசித்துச் செய்துள்ள சூழ்ச்சியை நாளை நிறைவேற்றிவிட வேண்டும். நளாகிரி என்னும் யானைக்குப் பழைய முறைப்படி மந்திரங்களினாலும் மூலிகைகளினாலும் மன எழுச்சியை எழுப்பிவிடவேண்டும். அதைக் கட்டியிருக்கும் இடத்தண்டையும் அது நீராடித் தீனி தின்று படுக்கும்இடத்தண்டையும் அம்மூலிகைகளைப் போட்டு வைப்பதற்குச் சந்தர்ப்பங்கள் அமைந்துள்ளோம். சரியான திக்கில் காற்றடிக்கும்போது தீ மூட்டி எரிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். அதன் கோபாவேசத்தை அதிகப்படுத்துவதற்காக, அதற்கு எதிரிலுள்ள யானைகளுக்கும் மதம் பிடிக்கச் செய்திருக்கிறோம். யானைத் தறிக்கு அருகிலுள்ள வீட்டில் சாமான் ஒன்றுமில்லை. அது தீயிட்டுக் கொளுத்தப்படும். ஏனெனில் நெருப்பைக் கண்டால் யானைகள் மிகப் பயப்படுமென்று உங்களுக்குத் தெரியுமே. தேவாலயங்களில் சங்குகளும் பேரிகைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் பேரொலியெழுப்பச் செய்து யானைகளின் மனக் குழப்பத்தைப் பெருக்குவோம். நம்முடைய சூழ்ச்சிகளால் நாளை எழுப்பப்படும் பேரம்பலையில் பிரத்யோதனன் உங்கள் துணையை நாடுவது நிச்சயம். இவ்வாறு பகைவனின் சம்மதத்தோடே நீங்கள் சிறைநீங்கி வெளியேறுவதற்காகும். உங்களோடு சிறைப்பட்டுத் துக்கத்திலும் பங்கு கொண்டிருக்கும் வீணையையெடுத்துக்கொண்டு வந்து நீங்கள் நளாகிரியை அடக்கலாம்; பின்பு அதன்மீது நன்றாக உட்கார்ந்து கொண்டு,

5. ஆற்றாத சிந்தையினில்
அல்லாமல் உன்னை
மாற்றார்கள் பின்தொடர
வகையின்றி நிற்க,

விரைக மத வேழத்தில்!
விரைக மணி வேந்தே!

விந்தை மலை வாரத்தில்
விறலாளி குமுறும்
அந்த ஒலி விழு முன்னர்
அவ்வனமும் அகல,

விரைக மத வேழத்தில்!
விரைக மணி வேந்தே!

ஆன்றவனம், ஆனசிறை
அணி நகர மூன்றில்
மூன்றுவினை ஒரு நாளில்
முடிவிக்க வேண்டும்!

விரைக மத வேழத்தில்!
விரைக மணி வேந்தே!

வெங்கரியை யுள்ளிட்ட
விரகொன்றினாலே
பங்கமுற நீயன்று
பட்டசிறை மீள்வாய்!

விரைக மத வேழத்தில்!
விரைக மணி வேந்தே!

*ருமண்வான் :* என்ன ஆலோசித்துக் கொண்டிருக்கிறாய், வசந்தகா?

*விதூஷகன் :* உங்களுடைய பெரும் முயற்சிகளெல்லாம் வீண் என்று நினைக்கிறேன்.

*யௌகந்தராயணனும் ருமண்வானும் :* நீ சொல்வது ஒன்றும் தெரியவில்லையே.

*விதூஷகன் :* ஐயன்மீர்! என் எண்ணங்கள் எனக்குத் தான் முதலில் தெரியும், பின்னரே நீங்கள் தெரிந்து கொள்ள முடியும்.

**யௌகந்த :** நமது சூழ்ச்சி பலிக்காமற் போவானேன்?

**விதூஷகன் :** ஏனெனில், நமது வத்ஸராஜருக்குள்ள பிடிவாதத் தன்மையினாலே.

**யௌகந்த :** நீ சொல்வதற்கு அர்த்தம் என்ன?

**விதூஷகன் :** சொல்லுகிறேன். நீங்கள் இருவரும் கேளுங்கள்.

**மந்திரிகள் இருவரும் :** நாங்கள் கவனமாகக் கேட்கிறோம்.

**விதூஷகன் :** சென்ற கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி கழிந்த பின் அரச குமாரியாகிய வாசவதத்தை சிறைச்சாலை வாயிலுக்கு எதிரிலுள்ள கோவிலில் யக்ஷிணி* யைத் தொழப்போனாள். அவளுடைய தாதி உடனிருந்தாள். அவள் திறந்த பல்லக்கிற் போனாள். விவாக மாகாத கன்னிகையாதலால் எவரும் அவளைத் தாராளமாகப் பார்க்கலாமே! அவர்கள் ஒரு பெருஞ்சாலை வழியாகப் போக வேண்டியிருந்தது. அடைபட்டிருந்த சாக்கடை கால்வாயின் நீர் பெருகி அந்தச் சாலையில் நிரம்பி நின்றது.

**யௌகந்த :** மேலே சொல்.

**விதூஷகன் :** அன்றைக்கே நமது அரசர் சிவகன் என்னும் சிறைக் காவலனது விடை பெற்று வாசலுக்கு வெளியே வந்திருந்தார்.

**யௌகந்த :** வந்திருந்தால்?

**விதூஷகன் :** தோள் மாற்றுவதற்காகப் பல்லக்கைச் சிறைச் சாலையின் வாயிலண்டை இறக்கினார்கள். இளவரசியை நம் அரசர் வேண்டிய மட்டும் நன்றாகப் பார்த்தார்.

**யௌகந்த :** பின்பு என்ன?

---

* யக்ஷிணி - ஒருவகை தேவதைப் பெண். இவ்வினத்தவர் பார்வதி, துர்க்கை முதலானவர்களுக்குப் பணிவிடை செய்வார்கள். நரர்களுடன் இவர்களுக்குச் சேர்க்கை உண்டு.

**விதூஷகன் :** பின்பு என்னவா? அவருக்கு அச்சிறைச் சாலை சொர்க்க மேயாயிற்று. அவளுக்கு அவர் உபசர்ப்பணை செய்யத் தலைப் பட்டார்.

**யௌகந்த :** ஆனால், அரசர் அவள்மீது மோகங்கொண்டிருக்க மாட்டாரே?

**விதூஷகன் :** ஐயா, அதுதான் அவர் செய்துள்ளது; மோகங்கொண்டே யிருக்கிறார். கஷ்டங்கள் திரள் திரளாக வருகின்றன.

**யௌகந்த :** மித்திரரே, ருமண்வான்! உம்மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளும். இம் மாறுவேஷத்தில் நாம் நெடுநாள் இருக்க வேண்டியதாகும்.

**விதூஷகன் :** ஐயா, நீங்கள் இப்பொழுது செய்துள்ள சூழ்ச்சி எனக்கு இஷ்டமில்லை. நான் இங்கிருந்து புறப்படும் தறுவாயில், ''பிரத்யோதன் மனத்தைக் குத்தும்படியான அவமானம் ஒன்று செய்யவேண்டுமென ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன். காமத் தினால் எனக்குக் கண் தெரியவில்லையென்று நினைக்காதே யுங்கள். என்னை மானபங்கப்படுத்தியதற்குச் சரியானபடி அவ னுடைய மானத்தைப் பங்கப்படுத்தவே வகைதேடிக் கொண் டிருக்கிறேன்'' என்று யௌகந்தராயணருக்குச் சொல்'' என்று அரசர் எனக்குச் சொன்னார்.

**யௌகந்த :** இது என்ன வார்த்தை. பகைவர்களும் இதைக்கேட்டு நகைப்பார்களே. என்ன ஆழ்ந்த துணிவு! நண்பர்களுக்கு இது எவ்வளவு துக்ககரமாயிருக்கின்றது. எவ்வளவு வருத்துகின்றது! தகுதியில்லாத காலத்தில், தகுதியில்லாத இடத்தில் அரசர் களிக்க வும் கொந்தளிக்கவும் விரும்புகிறார். உண்மையில்,

6. தன்கையில் நிருமித்த புல்லணையில், அந்தோ
   தரைமீது துயில்கின்ற விதி வந்ததெனினும்
   என் செய்யும்? இறைமன்னன் எதிரின்றி இன்னும்
   இறுமாந்து புகழ்கொள்ள இடமுண்டு கண்டீர்!

   பொற்பாத கமலத்தில் ஒளியற்ற தளைகள்
   புறமெய்தி இழிவுற்ற ஒலிசெய்தபோதும்,
   நற்காதல் விளைகின்ற மனமெய்தி நின்றான்
   நமதண்ணல் இதிலில்லை தவறென்பதறிவோம்!

சிறை காவலுற நின்ற பகை வீரர் எல்லாம்
சேவித்து, "முடிமன்னன்," என அன்பு பூண்பார்
இறையோனை! அவனுள்ளம் எழுகின்ற காதல்
இனிவெற்றிபெற என்ன தடைவுண்டு சொல்வீர்!

**விதூஷகன் :** நமக்குள்ள இராஜபக்தியை நன்றாகக் காட்டிவிட்டோம். நம்மால் இயன்ற மட்டும் பாடுபட்டோம். இனி, அவரை இங்கே விட்டுவிட்டு நாம் வீட்டிற்குத் திரும்பிப் போவோம்.

**யௌகந்த :** வசந்தகனா இப்படிச்சொல்கிறான்? ஓ வசந்தகா! நீ இப்படிப் பேசுதல் தகாது.

7. விட்டு நீங்கலாமோ? துன்பம்
மேவும் இந்த வேளை
தொட்டு நம்மை மன்னன் - உற்ற
தோழரென்று கொண்டான்.
நல்ல காலமெனவும் - இல்லை
நாசவேளை யெனவும்
சொல்லும் ஆற்றலில்லான் - நம்மைச்
சொந்தமென்ன நின்றான்.
அல்ல லுற்றபோதும் - பின்னே
அன்பு கொண்ட போதும்
மல்குகின்ற கண்ணீர் - மன்னன்
வழிய நின்று சோர்வான்
என்றும் ஏங்கி நிற்பான் - அரசன்
ஏழை நெஞ்சம் உள்ளான்,
நின்நாட்டி லிந்நாள் - கருமம்
நிகழ்வதேதும் அறியான்!

**விதூஷகன் :** நல்லது. இவ்விதமாக, கிழவர்களாகிறவரையில், நாம் இவ்விடத்திலே காலங் கழித்துக்கொண்டிருப்போம்.

**யௌகந்த :** அது மிகப் புகழத்தக்கதாகும்.

**விதூஷகன் :** நாம் ஏன் இப்படிச் செய்தோமென்று ஜனங்களுக்குத் தெரிந்தால் அது புகழத்தக்கதாகலாம்.

**யௌகந்த :** உலகோர் உவப்பதற்காக ஒன்றும் நாம் செய்வதில்லை. நமது அரசரின் பொருட்டே நாம் காரியம் செய்கிறோம்.

**விதூஷகன் :** அவரும் நாம் படும் வருத்தந்தரும் முயற்சிகளையும் கஷ்டங்களையும் தெரிந்துகொள்வதில்லையே.

**யௌகந்த :** நாளடைவில் தெரிந்துகொள்வார்.

**விதூஷகன் :** அந்த வேளை எப்பொழுது வரும்?

**யௌகந்த :** நமது சூழ்ச்சிகள் பலிக்கும்போது.

**விதூஷகன் :** அங்ஙனமாயின், அரசரைச் சிறையினின்று வெளியேற்ற வேண்டும். இளவரசியை அரண்மனையின் உள்ளறைகளினின்று பிரித்துக் கொண்டுவரவேண்டும்.

**ருமண்வான் :** நீ நன்றாகச் சொன்னாய். இவ்விரண்டு காரியங்களையும் நீ சாதிக்க வேண்டும்.

**யௌகந்த :** இரண்டு காரியங்களையும்! நல்லது. இதுவே எனது இரண்டாம் சபதம்.

8. கண்ணனுக் கிளைய மங்கை நல்லாளைக்
கருதிவில் விஜயன் கவர்ந்ததே போலும்,
தண்மணிச் சுனையிற் களிறுகை நீட்டித்
தாமரைத் தாளெல்லாம் பெறுவதே போலும்,

மண்ணினுக் கணியாம் வற்ச நாடாளும்
மன்னவன் வாசவதத்தையைத் தழுவி
எண்ணமும் முடிய நிற்கிலானாகில்,
யௌகந்த ராயணன் அல்ல என் பேரே!

9. மைகொண்ட நீள் விழிக் குமரியை,
மன்னனைக் கௌசாம்பி சேர்த்துவேன்!
நைகின்ற நிலைதீர்ப்பன் இல்லையேல்
நானல்ல யௌகந்த ராயணன்! *

(உற்றுக் கேட்கிறான்) ஏதோ சத்தம் கேட்கின்றது. அது என்னவென்று பார்.

---

* இது யௌகந்தராயணருடைய இரண்டாம் பிரதிஜ்ஞையாகும்.

**விதூஷகன் :** நல்லது, ஐயா. (வெளியே போய்த் திரும்பி வருகிறான்) மாலைக் காற்று வாங்கிக் கொண்டு ஜனங்கள் கும்பல் கும்பலாகத் திரியத் தலைப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது நாம் என்ன செய்வோம்?

**ருமண்வான் :** இந்த அக்கினி தேவாலயத்திற்கு நான்கு வாயில்கள் இருக்கின்றன. நமது சபையைக் குலைப்போம்.

**யௌகந்த :** ஓ, அன்று, நமது சபையை யன்று! நமது பகைவர்களின் சபையைக் குலைப்போம். நாமெல்லோரும் அவரவருக்குரிய காரியத்தைத் திருந்தச் செய்வோம்.

**இருவரும் :** அப்படியே (போகிறார்கள்)

**பைத்தியக்காரன் :** இராகு என்னும் அசுரன் சந்திரனை விழுங்குகிறானே. இந்தா, சந்திரனை விட்டு விடு. விடாவிட்டால் உன் வாயிலடித்து அதைப் பிளந்து சந்திரனை விடுவிப்பேன். இதோ வெறிக் குதிரையொன்று தெறித்தோடுகின்றது. இப்போது அது நாற் சந்திக்கு வந்துவிட்டது. அதன் மீதேறிக்கொண்டு நான் உணவு புசிப்பேன். இதோ குட்டி யஜமானர்கள் இருக்கின்றார்கள். என்னை அடியுங்கள். யஜமானர்களே, வேண்டாம், என்னை அடிக்காதேயுங்கள். என்ன சொல்கிறீர்கள்? உங்களுக்காகக் கொஞ்சம் நர்த்தனம்பண்ணச் சொல்கிறீர்களா? பாருங்கள், யஜமானக் குட்டிகளே, பாருங்கள். ஓ, குட்டி யஜமானர்களே, உங்கள் கைக்கோலினால் என்னை மறுபடி அடியுங்கள். வேண் டாம், அடிக்காதேயுங்கள். அடித்தால் நானும் உங்களையடிப் பேன். (போகிறான்).

(மூன்றாம் அங்கம் முற்றிற்று)

# அங்கம் - 4

(இடையங்கம்)

(உஜ்ஜைனி மகாசேனனுடைய படைவீரன் ஒருவன் வருகிறான்.)

**படைவீரன் :** (தனக்குத்தானே) இளவரசி வாசவதத்தை ஸ்நானம் செய்யப்போக வேண்டுமென்கிறாள். ஆனால், நமது யானை பத்திராவதியின் மாவுத்தன், காத்திரசேவகனை இன்னும் கண்டு பிடிக்க முடியவில்லை. அடே புஷ்பதந்தகா! காத்திரசேவகன் அகப்படவில்லை. என்ன சொல்லுகிறாய்? கள்ளுக்கடைக்குப் போய் கள்குடித்துக்கொண்டிருக்கிறானென்கிறாயா? சரி, நீ போகலாம் (சுற்றிச்சுற்றி நடக்கிறான்). கள்ளுக் கடை இதோ இருக்கின்றதே. அவனைக் கூப்பிடுகிறேன். (உரக்க) காத்திர சேவகா! காத்திரசேவகா!

(திரைக்குப் பின் ஒரு குரல்)

பாதையிலிருந்து 'காத்திரசேவகா; காத்திரசேவகா' என்று என்னை யார் கூப்பிடுகிறது?

**படைவீரன் :** இதோ காத்திரசேவகன் வருகிறான்; நிரம்பக் கள் குடித்திருக்கிறான்; பகபகவெனச் சிரிக்கிறான்; வெறிக்கக் குடித் திருக்கிறான்; கண்கள் கோவைப்பழம்போல் சிவந்திருக்கின்றன. அவனுக்கு இப்போது நான் எதிர்ப்படக்கூடாது. (ஒரு பக்கம் ஒதுங்குகிறான்).

**காத்திரசேவகன் :** இப்போது பாதையிலிருந்து 'காத்திரசேவகா, காத்திரசேவகா'' என்று என்னைக் கூப்பிடுகிறது யார்? கள்ளுக் கடையிலிருந்து நான் வெளி வரும்போது என் மாமனார் என்னைப் பார்த்து மிக்க கோபங்கொண்டார். ஓ! ஆனால், மசாலை சேர்த்து நன்றாக நெய்யிற் பொரித்த அந்த இறைச்சி உண்டையை வாயிலடைத்துக்கொண்டு, அதன்மீது ஒரு மொந்தை நேர்த்தி யான சாராயம் குடித்தேன். என் மருமகள் குடித்து வெறித் திருக்கும்போது என் மீது ஆசைப்படுகிறாள். ஆனால், அத் தருணத்தில் அவளுடைய மாமியார் தடியெடுத்துக்கொண்டு என்னை அடிக்க வருகிறாள்.

1. கள்ளுண்டவரும் கள்ளின் முடையிற்
களிகொண்டவரும் பெருவாழ்வுடையார்!
அள்ளிப் பருகிப் பெருமா மதுவில்
அழிவார் அவரே அறிவிற் பெரியோர்!

*மருமகளுடைய கஷ்டத்தைக் கண்ணுற்றுப் பார்த்தும் ஆறுதல் செய்யச் சாராயப் பீப்பாயைத் திரும்பிப் பாராத பணக்கார மூடர்கள் பாவிகளாவர். இதனால் யமலோகத்தில்* நரகம் ஒன்று இருப்பதும் இல்லாததும் எனக்குத் தெரிகிறது.*

**படைவீரன் :** (நெருங்கிவந்து) ஓ, காத்திரசேவகா, எத்தனை நேரமாக உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன். இளவரசி வாசவதத்தை ஸ்நானத்திற்குப் போக வேண்டுமென்கிறாள். அவளுடைய பத்திராவதி யானை காணப்படவில்லை. நீ குடித்து இங்கே திரிந்து கொண்டிருக்கிறாய்.

**காத்திரசேவகன் :** *அது சரியே. அவள் குடித்திருக்கிறாள்; அவளுடைய ஆளும் குடித்திருக்கிறான்; நான் குடித்திருக்கிறேன்; நீயும் குடித் திருக்கிறாய்: உலகத்தில் எல்லாமே கள் குடித்திருக்கின்றன.*

**படைவீரன் :** உலகத்தில் எல்லாம் கள் குடித்திருப்பது இருக்கட்டும். நீ ஏன் இங்கே சோம்பித்திரிகின்றாய்? பத்திராவதியை ஏன் கொண்டு வரவில்லை?

**காத்திர :** இங்கே நான் சோம்பித் திரிகிறேன்; இங்கே நான் சாராயம் குடிக்கிறேன்; இதில் குடிக்கிறேன்; கோபங் கொள்ளாதே. என்ன செய்கிறது?

**படைவீரன் :** இந்தப் பிதற்றலையெல்லாம் நிறுத்து. பத்திராவதியை உடனே கொண்டுவா.

**காத்திர :** அதுவே வரட்டும். ஓ, பத்திராவதி வா! ஐயோ, அவனுடைய அங்குசத்தை அடகு வைத்து விட்டேனே.

**படைவீரன் :** அங்குசம் எதற்காக? சாதுவான பத்திராவதிக்கு அங்குசம் வேண்டாம். நீ போய் அதை உடனே கொண்டுவா.

---

மறுமை, யமன் என்பவன் இறந்தார்க்கு இறைவன்.

**காத்திர :** அதுவே வரட்டும், ஓ பத்திராவதி வா! ஐயோ, அதன் அர்த்த சந்திரகண்டியை அடகு வைத்திருக்கிறேனே.

**படைவீரன் :** அதனாற் குற்றமில்லை. அதற்குப் பூமாலையைப் போடலாம். உடனே பத்திராவதியைக் கொண்டுவா.

**காத்திர :** அதுவே வரட்டும். ஓ பத்திராவதி! வா. ஐயோ, அதன் மணியை அடகுவைத்திருக்கிறேனே.

**படைவீரன் :** யானை நீரில் இறங்கப் போகின்றது. மணி அனாவசியம். பத்திராவதியை உடனே கொண்டுவா.

**காத்திர :** அதுவே வரட்டும். ஓ, பத்திராவதி! வா, ஐயோ, அதனுடைய சவுக்கை அடகு வைத்து விட்டேனே.

**படைவீரன் :** பத்திராவதிக்குச் சவுக்கு வேண்டாம். அதை உடனே கொண்டுவா, அப்பா!

**காத்திர :** ஆ, ஆ, கெண்டுவருகிறேன். ஏ பத்திராவதி, வா! அந்தோ!

**படைவீரன் :** ஏய், இப்பொழுது என்ன நேர்ந்தது?

**காத்திர :** ஐயோ, நான்....

**படைவீரன் :** என்ன செய்துவிட்டாய்?

**காத்திர :** ஐயோ, பத்திரா....

**படைவீரன் :** பத்திராவைப்பற்றி என்ன?

**காத்திர :** ஐயோ, பத்திராவதி!

**படைவீரன் :** பத்திராவதிக்கு என்ன?

**காத்திர :** பத்திராவதியையும் குதுவை வைத்துவிட்டேன்.

**படைவீரன் :** அது உன் குற்றமன்று. தான் கொடுத்த சாராயத்திற்கு அடைமானமாக அரசரது யானையைக் குதுவை வைத்துக்கொள்ளும் துணிவு கொண்ட சாராயக் கடைக்காரன்மீதே குற்றம்.

காத்திர : ஐயோ, 'உன் முதலுக்கு வரவேண்டிய வட்டியை யிழக்காதே' என்று அவனுக்குச் சொன்னேன்.

படைவீரன் : அடே, அந்தச் சத்தத்தைக் கேட்டாயா?

காத்திர : ஐயோ, அது என்னவென்று எனக்குத் தெரியும். சாராயக் கடைக்காரனுடைய வீட்டிலிருந்து தெறித்து பத்திராவதி ஓடுகின்றது.

படைவீரன் : நீ என்ன சொல்லுகிறாய்?

(ஆகாசவாணி)

இளவரசி வாசவதத்தையுடன் வத்ஸராஜன் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டான்.

காத்திர : (களிப்புற்று) எனது யஜமானருக்கு இடையூறு ஒன்றும் நேராதிருக்குமாக!

படைவீரன் : இனி நீ வேண்டியமட்டும் மயக்கமேறக் குடித்துச் சோம்பித் திரிந்துகொண்டிருக்கலாம்.

காத்திர : ஏ, யார் குடித்திருக்கிறார்? என்ன வெறிகொண்டிருக்கிறார், களி வெறியா, கள்வெறியா? யாருக்கு மத்து ஏறியிருக்கின்றது, அப்பா? நாங்களெல்லோரும் ஒற்றர்களென்று தெரிந்துகொள். ஒவ்வொரு வரையும் யௌகந்தராயணர் ஒவ்வொரு ஸ்தானத்தில் வைத்திருக் கிறார். இப்போது என் நண்பர்களுக்கு ஒரு சைகை காட்டுகிறேன். அதோ, பார், அவர்களெல்லாரும் சட்டையுரித்த பாம்பு போல இங்குமங்கும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஓ, நண்பர்களே! என் வார்த்தையைக் கேளுங்கள்:

2. உப்பிட்டவர் உறுவெந்துயர் ஒழிய
உதவிச் சமர் புரியாதவன் அழிவான்!
தப்பித்தவன் எள் நீரற வீடும்
தவறிப் பெருநரகே கதிபெறுவான்!

ஆனால், கனம் மிக்க யௌகந்தராயணர் எங்கே இருக்கிறார்? ஆ, அதோ இருக்கிறாரே!

3. வெண்மதி தோற்றும் மின்ன லொடிக்கும்
தண்முகி லென்னத் தன்னுரு வெய்தி,
அழகிய பாகை ஆடையும் ஒளிரக்
கூரிய வாளொடு கோதறு கையிற்
சீரிய செம்பொற் கேடய மேந்தி,
ஏழுபடை காண்பான் ஏந்தலு மினிதே!

*ஆ, பெரும்போர் நடந்துகொண்டிருக்கின்றது,*

4. அண்ணலும் உருவிய வாளுடனே
அடிப்படை பிளவுற மோதுகிறான்!
எண்ணில மதகரி வீழ்ந்தனவே,
ஏறிய பாகரும் பாய்ந்தனரே!

மாவுறு வீரர் சிதைந்தனரே,
மன்னிய காலாட் படையினரும்
சாவுற ஆயிரர் தீர்ந்தனரே!
சாடுகிறான் விறல் மூண்டெழவே!

ஆனை மருப் பொடு தாக்கியதால்,
ஆண்டகை வாளு மொடிந்திடினும்,
தாளை நடுக்குற நாள் முழுதும்
சமரிடை முனைவான், வெந்நிடையான்!

*ஐயோ, அவர் பிடிபட்டுப் போனார், பெருமகானான யௌகந்த ராயணர். நான் இந்தச் சமயம் போய் அவர் பக்கத்தில் இருக்க வேண்டும். (போகிறான்)*

**படைவீரன் :** *இதெல்லாம் என்ன? கௌசாம்பி முழுதும் இங்கேயே இருப்பதுபோல் காண்கிறதே. நகர மதிலும் அலங்காரவாசலும் தவிர மற்றதெல்லாம் இங்கே இருக்கின்றனவே. நல்லது, இதைப் பற்றி மந்திரிகளிடம் போய்ச் சொல்வேன். (போகிறான்)*

*(இடையங்கம் முற்றிற்று.)*

*(இரண்டு தைநாத்திச் சேவகர்கள் வருகிறார்கள்)*

**இருவரும் :** *வழிவிடுங்கள், ஐயா, வழிவிடுங்கள்,*

*முதலாவான் : சட்! என் தொண்டை கிழியும் போலிருக்கிறது. அவ்வளவு கத்தினபோதிலும் இந்தக் கூட்டத்திற்குக் கேட்கவில்லையே.*

*இரண்டாவான் : ஐயோ, வாசவதத்தையை அபகரித்துக் கொண்டுபோன தைக் குறித்து மனவெழுச்சிகொண்டு ஜனங்கள் வெறிபிடித்தாற் போலச் சந்தடி செய்வதனால், நான் எவ்வளவு உரக்கக் கூவினா லும் அவர்கள் காதிற் படவில்லை. நீ என்ன சொல்லுகிறாய்? வழி விடும்படி ஜனங்களுக்கு நாம் ஏன் சொல்லுகிறோம்? யௌகந்த ராயணரைச் சிறைப் பிடித்திருக்கிறார்கள். அவர் எப்படிப் பிடிபட்டாரென்று நீ கேட்கிறாயா? சொல்லுகிறேன், கேள். சிறிது நேரம் வரையில் அவர் கையிற் கத்தியைத் தவிர வேறு ஆயுதம் இல்லாமலே நமது படையினர் வேகமாக வீழ்ந்து அடிக்காதபடி தடுத்துத் தூரத்தில் நிற்கவைத்தார். ஆனால், விஜயசுந்தரம் என்னும் யானை தன் கொம்பு நுனியால் அவருடைய வாளைத் தாக்கி முறித்துவிட்டது. ஆனதனால் அவர் பிடிபட்டார். இது கத்தியின் குற்றமேயல்லாமல் அவருடைய குற்றமன்று.*

*முதலாவான் : அடே, ஜாக்கிரதையாயிரு. மதிலையும் அலங்கார வாசலை யும் தவிரக் கௌசாம்பி முழுதும் இருக்கின்றது.*

**இருவரும் சேர்ந்து :** இறங்கும் ஐயா, இறங்கும். *(யௌகந்தராயணரின் கைகளைக்கட்டி ஒரு பலகையின் மீது படுக்கவைத்துக் கொண்டு வருகிறார்கள்.)*

**யௌகந்த :** இதோ இருக்கிறேன்.

5. ஏந்திய வாள் பொடியாகவும் அன்றோ
 என்னையும் இவர் சிறையாக்கினர் இன்றே!
 வேந்தனை இடர்கெட வெம்பகை நீக்கி
 விடுதலை செய்தேன் ஆகையினாலே
 சிறைவாயுறினும் சேருவன் இன்பம்!
 பெறுவேன் நானே பீடுறுவாகை!

ஓ! மனையாள் இல்லாதவர் வனம்போய் வசிப்பது எளிது. மன விருப்பம் நிறைவேறியவர்கள் துன்பம் பொறுத்தல் எளிது. புண்ணியம் மிக்கவர்களுக்கு மரணபயம் இல்லை. ஏனெனில்,

6. இன்று வெற்றியும் என்னதே!
நன்று நற்புகழ் நாட்டினேன்!

அஞ்சி நின்றிலன் இழிவையும்
அணுகிவந்த வெம்பகையையும்
வஞ்சமெண்ணிய செறுநரின்
மாண்பு தேய்ந்திட நாடினேன்!

வாழி நுண்மதி ஆற்றலின்
வாய்ந்த வெற்றியை எய்தினேன்!
தோழன் என்திரு மன்னனைச்
சூழ்ந்த நிந்தையும் ஓட்டினேன்! (இன்)

தேர்ந்து நான் கட னாற்றவும்
சிறை யகன்றனன் இறையவன்!
நேர்ந்த புன் பழி தீரவும்
நிலைய நின்றது வாகையே! (இன்)

*இருவரும் : வழி விடுங்கள், ஐயன்மீர், வழி விடுங்கள்.*

*யௌகந்த : என்னைப் பார்க்க விரும்புகிறவர்களை ஒதுங்கிப் போகச் சொல்லாதே.*

7. வருக, உங்கள் அரசனுக்கு வாய்ந்த தொண்டர் அனைவரும்!
வருக, நல்லமைச்சராகி வரிசைகொள்ள நாடுவார்!
என்னையீன்ற நாட்டினுக்கும் இறைமை பூண்ட நிகரிலா
மன்னனுக்கும் அன்புசெய்த வகையிலின்று நானுறும்
கதியைவந்து காண்க தம்மை அருகராக்க இல்லையேல்
இதயமெண்ணும் அரசபோகம் இனிமறந்து விடுகவே!

*இருவரும் : வழிவிடுங்கள், ஐயா, வழிவிடுங்கள். இதற்கு முன்னால் யௌகந்தராயணரை நீ பார்த்ததில்லையா?*

*யௌகந்த : அவர்கள் இதற்கு முன்னால் என்னைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால், இந்த நிலைமையிற் பார்த்ததில்லை.*

8. பித்தனாக உருவமாறிப் பிறர் நகைக்க வீதியிற்
பெரிது நானலைந்த வேளை யன்றிஎன்னை அறிகிலார்
நத்தியின்று நானிழைத்த செய்கைகேட்டு வந்துளார்,
நண்ணிநின்று தடையிலாமல் என்னையிங்கு
காண்கவே!

*(படைவீரன் வருகிறான்)*

***படைவீரன் :*** உங்களுக்கு ஒரு நல்ல செய்தி, ஐயா! வத்சராஜனைச் சிறைப்படுத்தி விட்டார்கள்.

***யௌகந்த :*** ஓ, இல்லை, அது முடியாத காரியம்.

9. பகையோர் நகரின் நீங்கிப் புகழ் சேர்
பத்ராவதி மேல் வனமே சேர்ந்தான்!
உகைவான் அரசன் நொடியிற் காதம்!
உன்வாய் மொழியில் உளதே மாயம்!

நண்ப! அவர் எங்ஙனம் பிடிப்பட்டாரென்று கேள்விப் பட்டாயோ?

***படைவீரன் :*** நளாகிரியின் மீதேறிப் பின் தொடர்ந்து அவரைப் பிடித் தார்கள்.

***யௌகந்த :*** அந்த யானை அப்படிச் செய்திருக்கும். ஆனால் தெய்வம் துணைசெய்க. அதற்குச் சரியான மாவுத்தன் இல்லை.

10. பழகிய பாகர் ஏறிய போதே யன்றோ,
பாயும் மதகரி பூரண வேகம் கொள்ளும்?
விழுமிய வற்சத்திறையவன் ஓச்சிய வேழம்?
வேறெவர் இதனை ஏறுவர் உய்த்திடவல்லார்!

***படைவீரன் :*** ஐயா, உங்களைப் படைவீட்டில் வைத்திருக்க வேண்டு மென்று மந்திரியார் சொல்லுகிறார். அங்கே எங்கள் ஆட்காவல் பலமாயிருக்கின்றது.

***யௌகந்த :*** என்ன பைத்தியக்கார உத்தரவு!

11. எத்துணை நாட்டம்
என் மிசை கொள்வார்,
ஒத்தன செய்யார்,
உங்களமைச்சர்
சிறையிடை வைத்தார்
தீயினை, எங்கள்

இறைவனை, அந்நாள்,
இவர் துயில் கொண்டார்
நிரைமணி களவில்
நீங்கிய பின்னர்
மருவினர் பேழை,
வைத்தனர் காவல்!

*(அவர்கள் சுற்றி நடக்கிறார்கள்)*

**படைவீரன் :** படைவீடு இதோ இருக்கின்றது, ஐயா; தயவுசெய்து உள்ளே போங்கள், ஐயா.

**இரண்டாம் படைவீரன் :** (தைநாத்திகனை நோக்கி) மந்திரியாரின் கட்டளை. இவரது விலங்கை நீக்குங்கள்.

**யௌகந்த :** ஆம், எனக்கு அவ்வகையில் சகாயம் செய்யுங்கள். பரதாரோஹகன் என்னைப் பார்க்க விரும்புகிறானெனத் தோன்றுகிறது. நானும் அவனைப் பார்க்க வேண்டும்.

12. நவிலுகின்ற வார்த்தையும் நானடைந்த விஜயமும்
இவனுணர்ந்து நெஞ்சிலே இகவழிந்து வாடினான்!

உரிய சூழ்ச்சி செய்து நான் உரனுயர்ந்த நிமிஷமே
பெரிது தோல்வி எய்தினான்! பீடிழந்து குறுகினான்!

ஆர்ந்த கல்விகேள்வியும் அவமடைந்து போகவே
தேர்ந்து வேறு சூழ்ச்சிதான் செய்யுமாற்றல் கொண்டிலான்!

எனது நுட்பமதியினை இவனெதிர்க்க வகையிலான்!
நினைவு குன்றி மானமும் நீங்க வெந்து நாணினான்!

வீறிழந்து களரியில் வீழ்ந்த மல்லன் அனையவன்
சீறி என்னை, என்புகழ்ச் செம்மை காய்ந்து வருகிறான்!

*(பரதாரோஹகன் வருகிறான்)*

**பரதாரோஹகன் :** அவர் எங்கே, யௌகந்தராயணர் எங்கே?

*(தனக்குத்தானே)*

13. தந்திரம் செய்தான் சதியிழைத்திந் நாள்
ஆற்றினான் கடமை ஆயினும் நொந்திவன்

அணுகிய நிலையினை அறியவும் என்மனம்
நோவுறும்! தனது காவலற் கன்பு

பூண்டதாலன்றோ ஆண்டகை இன்னல்
எய்தினான்? இவனை இகழவும் போமோ?

திறனுற அமைத்தான் செயலும் சூழ்ச்சியும்!
நீள்தடைவரினும் ஆள்வினை தவறான்!

பேழையிற் பாம்பெனப் பெருஞ்சின மெய்தி
நிமிர்ந்தனன், கருமம் துணிந்தனன் நெடிதே!

**படைவீரன் :** *யௌகந்தராயணர் தங்களுக்காகப் படை வீட்டிற் காத்துக் கொண்டிருக்கிறார், ஐயா.*

**பரதாரோஹகன் :** *சரி.*

14. காத்திருப்பான், எதிர்பார்த்திருப்பான் - என்னைக்
காய்ந்திடுவான் பகை சூழ்ந்ததனால்
மாய்த்துவிட்டேன் அவன் சூழ்ச்சியெலாம் - நீல
வாரணத்தால் அவன் சீரழித்தேன்!

**படைவீரன் :** (யௌகந்தராயணரை நோக்கி) ஐயா, இதோ மந்திரியார் வந்திருக்கிறார்.

**பரதாரோஹகன் :** (அணுகி) நன்மையுண்டாகட்டும், யௌகந்த ராயணரே!

**யௌகந்த :** நன்மையுண்டாகட்டும்!

**படைவீரன் :** ஓ, என்ன கம்பீரமான குரல்! அவ்வொரு வார்த்தை இவ்விடம் முழுதும் தொனிக்கின்றதே.

**பரதாரோஹகன் :** (உட்கார்ந்து) 'யௌகந்தராயணர்' என்னும் பெயரைக் கேட்டிருந்தேன். ஐயா, இது வரையில் அப்புருஷரைப் பார்த்த தில்லை. இப்போது தங்களைக் கண்ணுக்கு நேராகப்பார்த்து இன்புறுகின்றேன்.

*யௌகந்த : என்னைப் பார்த்து இன்புறுகிறேன் என்கிறீரா? அப்படியா? என்னை உற்றுப்பாரும்.*

15. காண்பாய், வழியும் குருதிக்
கறைதோய்ந் திடுமென் உடலம் !போரில்
மூண்டே மீளும்வீரன்
முறையே கொள்ளும் கோலம் வாய்ந்தேன்!

குருவைக் கொல்வான் உயிரைக்
கொண்டான் அசுவத்தாமன் எனவே
மருவப் பெற்றேன் நெஞ்சில்
வளரும் சாந்திச் சுடரே பூண்டேன்.

*பரதாரோஹகன் : ஒரு யானையைக் கொண்டு தந்திரம் பண்ணி நீர் வெற்றி யடைந்தீர். இத் தற்புகழ்ச்சியும் வேண்டுமோ?*

*யௌகந்த : தந்திரப்பிரயோகத்தைப்பற்றி நீர் பேசுவது விசித்திர மாயிருக்கின்றது.*

16. யாமோ பழிசெய்தோம்? எங்கள்
இறையோ சதிகாரர்?

கானிடை மல்லிகை நிழலிலே
கவினுறு சால மரத்தடியே
ஆனையி னெம்மை இடத்திடவே
ஆக்கிய வெவ்வினை சதியன்றோ? (யாமோ)

மன்னவன் ஆதரவில்லாமல்
மண்மிசை கையே துணையாகப்
பின்னிய கொடியின் தளையிறுகிப்
பேதுறவைத்தீர், வஞ்சனையால்! (யாமோ)

தைவரு வீணையின் இன்னிசையால்
தழுவினன், உமது பெருங்கரியைக்
கைவச மாக்கினன் எமதிறைவன்!
காவலை நீங்கினன்! இது சதியோ? (யாமோ)

ஓங்கிய வாகை எனக்குறவும்
ஊமையனாகி மலைத்திடுவாய்
பாங்குற நீயிடும் சூதினையே
பற்றினன் வெற்றி யிடைந்திடவே (யாமோ)

*பரதாரோஹகன் :* ஆனால், நிச்சயமாக, யௌகந்தராயணரே, மகாசேன ருடைய மகளை மாணவியாகக் கொண்டு, பின்பு, அக்கினி சாட்சி யாய் விவாகம் செய்துகொள்ளாமலே அவளை எடுத்துக்கொண்டு போவது திருட்டுத்தனமன்று போலும். அது உங்கள் அரசர் செய்யத் தக்க யோக்கியமான காரியமே போலும்.

*யௌகந்த :* ஓ, இல்லை, அப்படிச் சொல்லாதேயும். எங்கள் யஜமானர் அவளை முன்னரே மணம் செய்து கொண்டுவிட்டார்.

17. மன்னிய பெரும்புகழ்ப் பரதவமிசத்தில்
 வந்தவன், வற்ச நாட்டதிபனோ, பிறழ்வான்?
 கன்னியைக் கடிமணம் கொள்வதன் முன்னர்
 கண்ணினும் நோக்குறான்; பயில்வியான் இசையும்!

*பரதாரோஹகன் :* அன்றியும், மகாசேனர் உங்கள் யஜமானருக்குக் காட் டிய அன்புக்கும் ஆதரவுக்கும் அவர் ஏன் நன்றி பாராட்டாராயினர்?

*யௌகந்த :* அந்த முறையிற் பேசாதேயும்.

18. உதயணன் அன்றி வேறே
 ஒருவரும் ஆற்றார்; நீல
 மதகரி தன்னை ஏவும்
 வலியிலார்: துணிவும் இல்லார்!

 உண்மை யீதுங்கள் மன்னன்
 உணர்ந்தனன்; வெறியின் வேழம்
 பண்ணிய அமுளி காணப்
 பதைத்தனன்: அறிவோம் நெஞ்சம்

 தன்னுயிர் தனக்கும், தன்னைச்
 சார்ந்தவர் உயிர்க்கும் வந்த
 இன்னலை நீக்கும் பாதை
 எண்ணினான்: உள்ளம் தேர்ந்தான்

 விடுதலை செய்தான், எங்கள்
 வேந்தனைச் சிறையின் விட்டான்
 அடைவுற இதற்கோ நாங்கள்
 ஆற்றுவம் நன்றி! சொல்வாய்

பரதாரோஹகன் : நீர் சொல்வதுபோல, நளாகிரியையடக்கிப் பிடிப்பதற் காகவே அவரைச்சிறையினின்றும் விடுவித்தாரெனின், அதற்குப் பின் ஏன் அவரைத் திரும்பச் சிறைப்படுத்தவில்லை?

யௌகந்த : ஏனெனில், தமக்கு நன்றியில்லை என்னும் குற்றம் சாரு மென்று அஞ்சி உங்கள் யஜமானர் அவரைத் திரும்பச் சிறைப் படுத்தவில்லை.

பரதாரோஹகன் : ஐயா, அரசியல் விவகார சாஸ்திரத்தில் நீங்கள் தேர்ந்தவரென்று சொல்லுகிறார்களே. போரில் தோற்றுப் பிடி பட்ட பகைவருக்கு அந்தச் சாஸ்திரம் என்ன தண்டனை விதிக் கின்றது?

யௌகந்த : மரணம்.

பரதாரோஹகன் : அங்ஙனம் வத்ஸராஜருக்கு மரண தண்டனையே உரியதாயின், நாங்கள் ஏன் அவரைக் கொல்லவில்லை? நாங்கள் ஏன் அவரை அன்புடன் ஆதரித்துப் பாராட்டினோம்?

யௌகந்த : நீங்கள் அவரை ஏன் நன்றாகப் பாராட்டினீர்களெனின், அவரும் உங்கள் அரசரை மிகவும் நன்றாக மதித்துக் கௌரவித்து அவரைப் பிடித்துக் கொண்டு போகாமல் விட்டார்.

பரதாரோஹகன் : இதுவும் சாத்தியமான காரியமென்று உங்கள் யஜமானர் நினைத்தார்போலும்?

யௌகந்த : அதற்குச் சந்தேகம் என்ன?

19. உள்ளங் கையில் உமதிறையைக்
கொள்ளும் திறமை கொண்டிடினும்,
உம்மை யழித்திலன் உதயணன்! என்றும்
செம்மை திறம்பிலன்: அறவழி நிற்பான்!
மதகரி தம்மிடை மாமணியை
உதயணன் இன்புற ஊர்ந்திடுவான்!
எண்ணிய அளவினில் எழுபடைவீழப்
பண்ணுவன்! அழிவுறும் பற்பல அரசும்!

பரதாரோஹகன் : நல்லது, மகாசேனருக்கு விரோதமாக இந்தச் சூழ்ச்சிகளெல்லாம் நீர் செய்தபோது, கௌசாம்பிக்கு என்னவாகு மென்று சிறிதேனும் நினைத்தீரா?

**யௌகந்த :** *ஓ, என்ன பைத்தியக்கார கேள்வி!*

20. வேருடன் அடிமரம் வீழ்ந்ததன் பின்னர்,
வேறெவர் எண்ணுவார், இலையொடு கிளையை?
நேரினில் எமதிறை நீள்சிறை மீண்டான்!
நிகழ்வன இனியெவை, எனஉளம் அயரேன்!

*(பரபத்தியக்காரன் வருகிறான்)*

**பரபத்தி :** *(பரதாரோஹகனுக்குக் காதோடு சொல்கிறான்) அது அப்படித்தான்.*

**பரதாரோஹகன் :** *அதை உரக்கச் சொல்.*

**பரபத்தி :**

21. மேயினை வஞ்சகம் வேட்டனை யேனும்
நீயொருதீமையும் நேர்ந்திலை மெய்யே!
வீசிய வலையிடை வீழ்ந்தனமேனும்
மாசிலை ஏத்துவம் நின்குணமாண்பை!
சென்றது செல்லுக! சிந்தனை வேண்டாம்!
இன்றினி இன்னலும் இல்லை யுனக்கே!
ஏற்றருள்; ஈந்தனம் அதிதியின் பரிசில் -
போற்றிய மாமணிப் புகழுறு கலசம்!

*இது மகாசேனர் அனுப்பிய செய்தி.*

**யௌகந்த :** *ஆ, எனக்கா,*

22. நானிட்ட தீயின்னும் எரியும் - இந்த
நகருற்ற மனைமாடம் அழிவுண்டு சரியும் (நா)

ஒருமிக்க வேகின்ற மனைபோல் - உள்ளம்
உஜ்ஜயினி மந்திரிகள் அனைவர்க்கும் வேகும்!
திருமிக்க வெகுமானம் ஈவாய் - தக்க
தெண்டனையை வாய்க்கின்ற வகைகூடி நின்றேன்!
(நா)

படநின்ற தண்டனையும் இன்றி - கொள்க
பரிசென்று நீவந்து மொழிகின்ற மாற்றம்
விடமிட்ட கோல்கொண்டுகுத்தி - என்னை
மெலிவித்து மெதுவாக உயிர்கொல்வ தொக்கும்!
(நா)

(திரைக்குப் பின்னிருந்து அழுகைக் குரல்கள் கேட்கின்றன)

**பரதாரோஹகன் :** ஆ!

23. அழுகுரல் எழுவதென்னே,
அரண்மனை மாடத்தும்பர்
கழுகு வல்லுகிரிற் புள்ளின்
கதறலை நிகர்த்த தம்மா!

அது என்னவென்று போய்ப்பார்த்து வா.

**பரபத்தியக்காரன் :** உத்தரவுப்படியே, ஐயா, (போய்த் திரும்பி வருகிறான்) அரசி அங்காரவதி துக்கம் மேலூர்ந்து, அரண்மனையின் உப்பரிகையினின்று கீழே விழுந்து தற்கொலை புரிந்துகொள்ள வெண்ணினாள். அப்போது, அவளை நோக்கி மகாசேனர், ''உன் மக்களுக்கு க்ஷத்திரிய முறைப்படி விவாகம் நடந்தேறியது மகிழ்வுற வேண்டிய இச்சமயத்தில் நீ ஏன் துக்கிக்கிறாய்? வாசவதத்தைக்கும் வத்ஸராஜனுக்கும் நடந்த விவாகத்தை அவர்கள் இருவருடைய படங்களையும் வைத்து நாம் கொண்டாடுவோம்' என்று சொன்னார். ஆகையால் இப்போது,

24. வந்து மங்கையர் கூடினார்:
வாய்ந்த மணவினை நாடினார்!
சிந்தை பொங்கிய களியிலே
செய்க திரிகுவ துணர்கிலார்!

நவையிலா விழி நீரினில்
நனையு மங்கள நற்பொருள்!
உவகை மண்டிய நயன நீர்
உச்ச மெய்திய தின்றரோ!

**யௌகந்த :** இங்ஙனம், அதை மகாசேனரும் விவாக சம்பந்தமென்று ஒப்புக்கொண்டுவிட்டார். வா, இப்போது அந்தக் கிண்ணத்தைக் கொடு.

**பரபத்தி :** இதோ, தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

(கொடுக்கிறான்).

**பரதாரோஹகன் :** இதைக் காட்டிலும் மகாசேனர் உங்களுக்கு என்ன செய்யவேண்டும், ஐயா?

**யௌகந்த :** என் விஷயத்தில் மகாசேனர் எப்போதும் திருப்தி காட்ட வேண்டும். அதைத் தவிர வேறொன்றும் எனக்கு வேண்டாம்.

## முடிவுரை

25. வாழிய இன்புற ஆவினம் எங்கும்!
மாபுலி அன்னவன் எமதிறை வேல்க:
ஆழியினுலகினை ஆளுக! மாற்றார்
அரசொடும் அழிவுற, வீழ்க துயரம்!

*(நான்காம் அங்கம் முற்றிற்று)*

''யௌகந்தராயண சபதங்கள்'' முற்றும்.

# பாஸனின் இரட்டை நாடகங்கள்

## 2. வாசவதத்தையின் கனவு

### நாடக பாத்திரங்கள்

### ஆடவர்

**உதயணன்** - வத்ஸ தேசத்து அரசன்.

**யௌகந்தராயணர்** - அவர்தம் முதன் மந்திரி, பைத்தியக்கார வேஷதாரி யாகவும் வருகிறார்.

**விதூஷகன்** - வசந்தகன், உதயணனது அந்தரங்க அன்பன்

**பாதராயணன்** - ரைப்ய குலத்தவன், பிரத்யோத மகாசேனனது பரபத்தியக் காரன்.
மகதநாட்டுக் கஞ்சுகி. (பரபத்தியக்காரன்)
வத்ஸராஜனது கஞ்சுகி. (பரபத்தியக்காரன்)

**இரண்டு காவலர்** - சம்பாஷகன் ஒருவன்

### மகளிர்

**வாசவதத்தை** - உஜ்ஜைனி இளவரசி பிரத்யோத மகாசேனராஜனின் புதல்வி; இலாவாணகம் என்னுமிடத்தில் உயிரோடு கொளுத்தப் பட்டதாக நினைக்கப்பட்டவள்; ராஜகிருகத்திற்குக் கொண்டு வரப்பெற்று மகதத்து அரண்மனையில் 'ஆவந்திகை' என்னும் பெயர்சூடியிருப்பவள்.

**பத்மாவதி** - மகதத்து அரசனான தர்சகனது சகோதரி, உதயணனது இரண்டாம் மனைவி.

ஒரு சந்நியாசினி (தவத்தினள்)

**பத்மினிகை**
**மதுகரிகை** } பத்மாவதியின் தோழியர்.

**விஜயை** - கௌசாம்பி அரண்மனையின் வாயிற் காவலாளி.

**வசுந்தரை** - வாசவதத்தையின் தாதி.
பத்மாவதியின் தாதி.
**பணிப்பெண்கள், பரிசாரகிகள்** முதலானவர்கள்.

# வாசவதத்தையின் கனவு

## அங்கம் 1

### பிரஸ்தாவனை

(நாந்தி பாடியபின் சூத்திரதாரன் வருகிறான்)

**சூத்திரதாரன் :**

1. காணரிய எழிலுடையான், முழுமதியின் வெண்மைக்
கவினமரும் அபயமணிக் கரமுடையான் காக்க!
மாணினிய இளவேனிற் புதுமகிழ்வும் மதுவும்
மாந்தி, நரபதி, நின்னை அருள்க பலராமன்!

இங்கே கூடியிருக்கும் கனவான்களுக்கு ஓர் அறிக்கை செய்து கொள்வேனாக: ஏ, என்ன இப்போது? நான் அறிக்கை செய்வதற்கு இருக்கையில் ஏதோ ஒரு சத்தம் கேட்பதாகத் தோன்றுகின்றது. நல்லது, அது என்ன சத்தம் என்று பார்க்கிறேன்.

(திரைக்குப் பின்னால்)

வழி விடுங்கள் ஐயா, வழிவிடுங்கள் ஐயா; வழி விடுங்கள்.

---

1. பலராமர் - ஸ்ரீ கிருஷ்ணனுடைய தமயனார். முன்னொரு காலத்தில் பலவிடங்களிற் பூசிக்கப்பெற்றவர். இப்போது அவருக்கு ஆலயங்கள் அரிது. தென்திருவாங்கூரில் ஓர் ஆலயம் இருக்கின்றது.

2. நாடக அரங்கத்தில் பிரசன்னமாயிருக்கிற அரசனைக் குறித்தே சொல்லியதெனத் தோன்றும்.

3. அவ்வரசன் வெண் சிவப்பு நிறம் வாய்ந்தவன்; கிருஷ்ணனோ கருநிறமுள்ளவன்.

4. அவன் மதுபானப் பிரியன்.

5. சமத்காரமான சிலேடைப்பிரயோகத்தினால் நாடகாசிரியன் தேவதைகளுக்கும் நாடக பாத்திரங்களுக்கும் ஒருங்கே பொருந்துமாறு உதயணன், வாசவதத்தை, பத்மாவதி, வசந்தகன் என்னும் பெயர்களை உபயோகிக்கின்றான்.

6. மகதம் : இன்றை நாளில் பீஹார் எனப்படும்.

**சூத்திரதாரன் :** ஆ, இப்போது செய்தி தெரிகிறது:

2. மகத மன்னன் ஏவலாளர்
   புடை நெருங்கி விரைவிலே
   வழியொதுக்க எதிரிலாமல்
   அரசியிங்கு வருகிறாள்!

   தகவிலாது தாதர் ஆர்க்க,
   விலகி மாந்தர் மருளவே
   தனிமை சான்ற தவவனத்தும்
   அமைதிகுன்ற மேவினார்!

*(போகிறான்)*

*(பிரஸ்தாவனை முற்றிற்று)*

*(தவச்சாலைக்கு அருகில் ஒரு காட்டுப்பாதை)*

*(இரண்டு காவலர்கள் வருகிறார்கள்)*

**காவலர்கள் :** வழிவிடுங்கள், ஐயன்மீர், வழிவிடுங்கள்! *(ஆண்டிவேஷம் பூண்ட யௌகந்தராயணரும், அவந்திகை*யென மாறுவேஷம் கொண்ட வாசவதத்தையும் வருகிறார்கள்).*

**யௌகந்த :** *(உற்றுக் கேட்கிறார்)* என்ன, இவ்விடத்திலும் ஜனங்களை வழியினின்று விலக்குகிறார்களே!

3. யாரிவன் இவ்வழி ஏதிழைத்தான்?
   சீரிய அல்லன செய்ய நினைத்தான்!
   மாவுரி பூண்டார், காய்கனி தின்றார்
   மன்னிய மாதவம் தொழிலென நின்றார்
   விரவிய கானிடை வெவ்வினை செய்வான்;
   வெறுநிதி சேரவும் வீண்திமிர் கொண்டான் (யா)

   புண்ணிய ஞானியர் துன்புற, யாகப்
   பூம்பொழில் மேவிய சாந்தியும் நோக,
   மண்ணுறு மானிடன் புன்குரலாலே
   மாதவ பூமியும் ஊர்த்தெருவாக. (யாரி)

---

* அவந்தி நகரத்து மாது இவ்விடத்தில் நடுத்தர பிராம்மண குலத்துப் பெண்ணாகக் காட்டப்படுகிறாள்.

வாசவதத்தை : ஐயா, நம்மை வழியைவிட்டு ஓட்டுகிற இவன் யார்?

யௌகந்த : மாதே, இவன் அங்ஙனம் செய்வதனால் நன்னெறியினின்று திறம்புகிறவன்.

வாசவதத்தை : ஐயா, நான் அதைச் சொல்ல வரவில்லை. வழிவிடும்படி என்னைச் சொல்லலாமா?

யௌகந்த : அம்மா, இன்னாரென்று தெரிந்துகொள்ளாத போது தேவர் களையும் இங்ஙனம் அவமதிக்கிறார்கள்.

வாசவதத்தை : வழிநடந்ததனாலுண்டான களைப்பைக் காட்டிலும் இங்ஙனம் அகௌரவப்படுத்தியதனாலுண்டான வருத்தம் அதிக மாயிருக்கின்றது.

யௌகந்த : அம்மணீ, இந்தக் கௌரவங்களெல்லாம் நீ அனுபவித்துத் துறந்தவை. இவைகளைப்பற்றி நீ சிந்திக்கக்கூடாது. ஏனெனில்,

4. புதிதன்று சுகபோகம்!
இவையாவும் அறிவாய்!
பொறு, வெற்றி உனதன்ப
ணுற மீண்டும் அடைவாய்!
கதிகொண்டு சுழல்கின்ற
சகடத்தை ஒக்கும்
காலத் தொடிசைவுற்று,
விரைகின்ற செல்வம்!

இரண்டுகாவலர்களும் : வழி விடுங்கள், ஐயா, வழி விடுங்கள்!

(பரபத்தியக்காரன் வருகிறான்)

பரபத்தி : (காவலர்களுள் ஒருவனை நோக்கி) இந்தா, இந்தா ஸம்பாஷகா, இவ்விடத்தில் நீ ஜனங்களை விலகச் சொல்லக்கூடாது, இதோ பார்.

5. அருந்தவ முனிவரை அமதித்தீரே!
அய்யோ மன்னன் புகழ் கெடுத்தீரே!
திருந்திய தெய்விகப் பெரியவர் கானம்
சேர்வதும் சாந்தியைச் சேர்ந்திடவன்றோ?

**இரண்டு காவலர்களும் :** நல்லது, ஐயா (போகிறார்கள்)

**யௌகந்த :** ஆ பெண்ணே, அவன் விவேகியாயிருக்கிறான். நாம் அவனை அணுகுவோம்.

**வாசவதத்தை :** தங்கள் இஷ்டம் போல, ஐயோ.

**யௌகந்த :** (பரபத்தியக்காரனை யணுகி) ஐயா ஜனங்களை ஏன் அகற்றுகிறார்கள்?

**பரபத்தி :** ஓ, சாதுத் துறவியே!

**யௌகந்த :** (தமக்குத்தானே) துறவி என்பது கௌரவமான நல்ல வாசகமே. ஆனால், வழக்கமில்லாததனால் அது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

**பரபத்தி :** கேளும், ஐயா! இதோ இருக்கிற மாதராள் தர்சகர் என்னும் எங்கள் பேரரசரின் சகோதரி. தவச்சாலையையே இருக்கையாகக் கொண்டுள்ள மகாதேவி என்னும் தாயரசியாரைப் பார்க்கப் போயிருந்தாள். அவரிடம் விடைபெற்று ராஜகிருகத்திற்குத் * திரும்பிப் போய்க்கொண்டிருக்கிறாள். இன்றைக்கு இவள் இவ்வாச்சிரமத்தில் தங்கியிருக்க மனங்கொண்டுள்ளாள். ஆனால்,

6. பூசைக்குரியன கொணர்வீர்!
புகுவீர், பொழிலில் விரைவீர்!
வாசத்தேமலர் சமிதை தருப்பை
மருவிய தீம்புனல் ஆதியயாவும் (பூசை)

நீத்தோர் பணியே இன்பம்
நிருபன் மகளுக் கறிவீர்!
மூத்தோர் நாடிய பக்தித் துறையில்
முறையே புகுவாள், சிறிதும் தவறாள். (பூசை)

**யௌகந்த :** (தமக்குத்தாமே) ஆகவே, இவள்தான் மகத அரசகுமாரியாகிய பத்மாவதி. எனது யஜமானராகிய பேரரசரை மணப்பாளென்று புஷ்பகன், பத்ரகன் முதலான சோதிட சாஸ்திரிகள் கூறியது இவளைப்பற்றியேயாம். இதோ பார்,

---

* **ராஜக்கிருகம்** - மகதராச்சியத்துப் புராதனத் தலைநகரம். இந்நாளில் ராஜ்கிர் என வழங்குகின்றது.

7. இந்த மின்னெழில் மங்கையை
எனது மன்னவனடையவும்,
வந்தபோரிடர் வஞ்சகம்
மறைய வற்சமும் உயர்கவே!
ஆசையீதுற அரிவையை
அன்பின் ஏத்துவன் அவனியோர்
மாசுகொள்ளவும் புகழவும்
மனது காரணம் அல்லவோ?

**வாசவதத்தை :** *(தனக்குத்தானே)* இவள் அரசகுமாரியெனக் கேட்டபின் இவள்மீது எனக்குச் சகோதரவாஞ்சையுண்டாகின்றது.

*(பத்மாவதி பரிவாரங்களுடனும் ஒரு பணிப்பெண்ணுடனும் வருகிறாள்)*

**பணிப்பெண் -** இப்படி, இளவரசி, இவ்வழி. ஆச்சிரமம் இதுதான். உள்ளே போவீராக.

*(தவத்தியொருத்தி வாசலில் உட்கார்ந்திருக்கிறாள்)*

**தவத்தி -** அரசகுமாரி, நன்மையுண்டாகட்டும்.

**வாசவதத்தை -** *(தனக்குத்தானே)* ஆகவே, இவள்தான் அந்த அரசகுமாரி. இவளைப் பார்த்தாலே உயர் குலப் பிறப்பினளெனத் தெரிகிறது.

**பத்மவதி :** *(தவத்தியை நோக்கி)* போற்றற்குரிய பெரியோய், வணக்கம்.

**தவத்தி :** நிறை ஆயுள் பெறுவாய். வா, அம்மா உள்ளே வா. வழிப் போக்கர்களுக்கு ஆச்சிரமம் என்பது உண்மையில் சொந்த வீடு போன்றதேயாம்.

**பத்மாவதி :** பூசிக்கத்தக்கோரே, அங்ஙனமே இருக்கின்றது. என் வீட்டில் இருப்பதுபோலவே இங்கே எனக்குத் தோன்றுகின்றது. நீர் என்னை இங்ஙனம் அன்புடன் ஆதரித்ததற்கு நன்றி பாராட்டு கிறேன்.

**வாசவதத்தை :** *(தனக்குத்தானே)* இவள் பார்வைக்கு மனங்கவரத் தக்கவளாயிருப்பதேயல்லாமல் இவளுடைய வாக்கும் அவ்வளவு இனிமையாயிருக்கின்றது.

**தவத்தி :** (பணிப்பெண்ணை நோக்கி) அன்புக்குரியாளே, நமது கருணை மிக்க பேரரசன். சகோதரியை மணங்கேட்க அரசர் எவரும் இதுவரையில் வந்ததில்லையோ?

**பணிப்பெண் :** உஜ்ஜைனி அரசராகிய பிரத்யோதர் தம் குமாரருக்காக மணங் கேட்கத் தூது அனுப்பியிருக்கிறார்.

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) நன்று, நன்று இப்போது இவள் எனக்குச் சொந்தக்காரியே* யாயினள்.

**தவத்தி :** இவளுடைய அழகினால் இவளுக்கு இந்தப் பெருமை நன்கு ஏற்கும். அவை இரண்டும் பெரிய அரச குடும்பங்களென்று கேள்விப்பட்டிருக்கிறோம்.

**பத்மாவதி :** (பரபத்தியக்காரனை நோக்கி) நமது கொடைகளையேற்கும் பெருமனமுள்ள துறவிகள் எவரையேனும் பார்த்தீரா? இங்குள்ள தாபதர்களையெல்லாம் வரவழையுங்கள். அவர்கள் மனங்குளிரு மாறு வேண்டுவன வேண்டியவாறு அளிப்போம். அவர்களில் எவருக்கு என்ன வேண்டுமென்று கேட்டுத் தெரிந்து கொள்ளும்.

**பரபத்தி :** மாதரசி, நும் இஷ்டப்படியே செய்வேன் (விளிக்கின்றான்) ஓ, 'இவ்வாச்சிரமச் சோலையிலுள்ள தவத்தோர்களே! அருள் கூர்ந்து என் வார்த்தைக்குச் செவிசாயுங்கள். மகதராஜ்யத்து இளவரசியார் நீங்கள் அன்புடன் வரவேற்றதையெண்ணி மகிழ்கின்றார். அவர் தம் வைதிகக் கடமையை நிறைவேற்றிப் புண்ணியம் பெறும் பொருட்டு, நீங்கள் எல்லாரும் இங்கே வந்து அவர் அளிக்கும் கொடைகளையேற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்.

8\. ஆடையும் கரகமும் தேடுவாருண்டோ
அன்றியும் குருவினுக்குரிய காணிக்கை
நாடுவீர்! அனைவரும் வருக, மெய்த்துறவீர்!
நண்ணினாள் தொண்டருக் குரிமையே பூண்டாள்.

யாரெவை வேண்டினும் ஈவதேகடனாய்
எண்ணினாள் எங்கள் இறைமகள் வந்தாள்!
சீருறும் மாதவம்பூண்ட நற்பெரியீர்,
சேருவீர், விழைந்த பொருளெலாம் கொள்வீர்!

---

* தன் தமையனை மணக்கப் போவதனால்.

புகலுவீர், தேவையைப் பூர்த்தி செய்விப்பாள்!
பொருளெலாம் அரசியின் ஆணையில் தருவேன்
மகிழுவாள், புனிதமிப்பணியெனக் கொண்டாள்!
வருக, உம்குறை மொழிந்தருளுவீர், பெரிவீர்!

யௌகந்த : *(தமக்குத்தாமே)* ஆ, எனக்குச்சமயம் வாய்த்தது. *(உரக்க)* ஐயா, எனக்கு ஒரு உபகாரம் செய்யவேண்டும்.

பத்மாவதி : இவ்வாச்சிரமத்துக்கு நான் வந்ததனால் நற்பயன் கிடைத் ததேயென்று மகிழ்வுறுகின்றேன்.

தவத்தி : இவ்வாச்சிரமத்திலுள்ள துறவிகளெல்லாரும் திருப்தியா யிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையொன்றுமில்லை. இப் போது வந்திருப்பவர் அன்னியராயிருக்கவேண்டும்.

பரபத்தி : தங்களுக்கு நாங்கள் என்ன செய்யக்கூடும். ஐயா?

யௌகந்த : *(வாசவதத்தையைச்சுட்டிக்காட்டி)* இவள் என் சகோதரி. இவ ளுடைய கணவன் வேறு தேசம் போயிருக்கிறான். அரசியார் இவளைச் சிறிதுகாலம் வைத்துக் காப்பாற்றக் கூடுமானல் எனக் குப் பேருபகாரமா யிருக்கும். ஏனெனில்,

9. பெருகு மின்பமும் அரிசெல்வமும்
பெறநினைத்திலன்; கருதி நல்லுடை
மருவ வந்திலன்: துறவு பூண்டதும்
வயிறு காரணம் அல்ல அல்லவே!
தேர்ந்த ஞானமும் தருமமீதெனும்
தெளிவு எய்தினாள், வாழ்க, கோமகள்!
ஆர்ந்த பொற்பினாள் எனது தங்கையும்
அடைக மெய்ப்புகல் இவள் கரத்திலே

வாசவதத்தை : *(தனக்குத்தானே)* இம்! கனம்மிக்க யௌகந்தராயணர் என்னை இங்கு விட்டிருக்க விரும்புகிறார். அது இருக்கட்டும். நன்றாக ஆலோசனை செய்யாமல் அவர் ஒன்றும் பண்ண மாட்டார்.

பரபத்தி : அம்மணி, இவருடைய விருப்பம் விண்ணளாவுகின்றது. நாம் எங்ஙனம் இசைவதற்காகும்? ஏனெனில்,

10. கனகமும் கருது நல்லுயிரையும் விடலாம்:
கதிதரும் பெரிய மாதவமெலாம் தரலாம்:
இனி நிலத்துளதெனும் வினையெலாம் எளிதாம்:
எய்தினார்க் குறுபுகல் ஈதலிங்கரிதே!

**பத்மாவதி :** எவருக்கேனும் ஏதேனும் வேண்டுமாவென்று நாமே கேட்டு விட்டு இப்போது தயங்குவது தகாது. தயவுபண்ணி ஐயா, அவர் வேண்டியவாறு செய்யும்.

**பரபத்தி :** இம்மொழிகள் அரசியாருக்கு ஏற்றவை.

**பணிப்பெண் :** இங்ஙனம் சொற்காக்கும் அரசியார் நீடூழி வாழ்க.

**தவத்தி :** குழந்தாய். நீ தீர்க்காயுஸாயிருப்பாயாக!

**பரபத்தி :** சரி, அரசியாரே. (யௌகந்தராயணரைக் கிட்டி) ஐயா, தங்கள் சகோதரியை வைத்துக் காக்க அரசியார் இசைந்துள்ளார்.

**யௌகந்த :** அரசியாருக்கு நான் மிக்க நன்றி பாராட்டுகின்றேன். (வாசவதத்தையை நோக்கி) குழந்தாய், அரசியாரண்டை போ.

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) என்ன செய்கிறது? நான் போகிறேன். என் பாக்கியக் குறைவு இப்படியிருக்கின்றது.

**பத்மாவதி :** நல்லது, இப்போது இவள் நம்மவளாய் விட்டனள்.

**தவத்தி :** இவளுடைய முகத்தைப் பார்த்தால் இவளும் ஒரு அரசகுமாரி யென்றே தோன்றுகிறது.

**பணிப்பெண் :** தவத்தாயே, தாங்கள் சொல்வது சரியே. இவள் ஒருகால் சீரும் சிறப்பும் செழுமையும் வாய்ந்து வாழ்ந்தவளென எனக்கும் தோன்றுகின்றது.

**யௌகந்த :** (தமக்குத்தாமே) ஆ, நான் உத்தேசித்த காரியத்திற் பாதி நிறைவேறியது. மற்ற மந்திரிமாருடன் நான் ஆலோசித்த வண்ணமே காரியம் நிகழ்ந்திருக்கின்றது. இனி என் யஜமானர் திரும்பச் சிம்மாதனமேறி, அவரிடம் வாசவதத்தையை நான் ஒப்பிக்கும் போது, இவளுடைய நன்னடக்கைக்கு மகதத்து இளவரசி சாட்சி யாய் நின்று, என் உறுதி மொழிக்கும் பிணைப்படுவாள். ஏனெனில்,

11. இந்நாள் அரசன் எய்திய துயரம்
முன்னாள் கூட்டி மொழிந்த மெய்ஞ்ஞானப்
பொலிவுறு சான்றோர் புகன்றனர் இதுவும்
''பத்மாவதியின் பனிமலர்க்கரமும்
பாங்குற மன்னவன் பற்றுவான்,'' என்றார்!
பொய்யா மொழியார் புகன்றதை ஒட்டி
நடந்தே விதியும் நலம்தரும் எமக்கே!

*(சாஸ்திரம் பயிலும் பிரம்மசாரி ஒருவன் வருகிறான்)*

***பிரம்மசாரி :*** (மேல் நோக்கிக்கொண்டு) நடுப்பகலாய் விட்டது. எனக்குக் களைப்பு மேலிட்டிருக்கின்றது. எங்கே இளைப்பாறுவேன்? *(சுற்றி நடக்கிறான்).* ஆ, இது ஒரு தவச்சாலையாயிருக்க வேண்டும்; ஏன் எனில்,

12. மருளற, இனிவரும் துயரமு மின்றி,
மானினம் அழகிய வாழ்வுற நின்ற!
அருமலர், தீங்கனிக் கிளைபல தூங்க
ஆசையி னோம்பிய தருவினம் உயரும்!
மாதவ மெய்திய துறவினர் வாழும்
தீதறு தெய்விக வனமிது தேர்ந்தேன்!

மாண்புறு கபிலையின் ஈட்டமும் இனிதே
மல்கின! விழியிணை யொட்டிய வரையும்
காண்கிலன் உழுபடை! வெண்புகை பெருகக்
கண்டனன்: இடையிடை வானுற ஓங்கும்!
மாதவ மெய்திய துறவியர் வாழும்
தீதறு தெய்விக வனமிது தேர்ந்தேன்!

நான் உள்ளே போகிறேன். *(உள்ளே போய்ப் பரபத்தியக்காரனைப் பார்க்கிறான்).* இங்கே இருக்கிற இந்த ஆள் முனிவராச்சிரமத்திற்கு ஏற்றவனாக இருக்கவில்லையே. *(மற்றொரு திக்கில் பார்க்கிறான்).* ஆனால், துறவிகளும் இருக்கிறார்கள். ஆதலால் உள்ளே போவதிற் குற்றமில்லை. ஓ, பெண்களும் இருக்கிறார்களே!

***பரபத்தி :*** *தாராளமாக உள்ளேவாரும், ஐயா. ஆச்சிரமம் அனைவருக்கும் பொதுவே.*

***வாசவதத்தை :*** இம்! *(அசம்மதக் குறியாக)*

பத்மாவதி : (தனக்குத்தானே) இப்பெண்மணி அன்னியரைக்கண்டு அகலுகின்றார்கள். நல்லது, என்னிடம் ஒப்பிக்கப்பட்டவளை வைத்துக் காப்பது கஷ்டமாயிராது.

பரபத்தி : ஐயா, உமக்கு முன்னால் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். விருந்தினர்க்குரிய உபசாரங்கள் நாங்கள் செய்வதைத் தயைசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள். (நீர் கொடுக்கிறான்)

பிரம்மசாரி : (ஆசமனம் செய்துவிட்டு) போதும் போதும். என் இளைப்பு ஆறியது.

யௌகந்த : ஐயா, எங்கிருந்து வருகின்றீர்? எங்குப் போகின்றீர்? உமது பிறப்பிடம் யாது?

பிரம்மசாரி : சொல்லுகிறேன் கேளும், ஐயா நான் ராஜக்கிருகத்தினின்று வருகிறேன். வேதசாஸ்திரங்களைக் கற்கும் பொருட்டு, வத்ஸ ராஜ்யத்தில் இலாவாணகம் என்னும் கிராமத்தில் நான் தங்கி யிருந்தேன்.

வாசவதத்தை : (தனக்குத்தானே) இலாவாணகம்! அந்தப் பெயரைக் கேட்டமாத்திரத்திலே எனக்குப் பழைய துன்ப நினைவு திரும்ப உண்டாகின்றது.

யௌகந்த : உமது சாஸ்திராத்தியயனம் பூர்த்தியாய் விட்டதா?

பிரம்மசாரி : இன்னும் பூர்த்தியாகவில்லை.

யௌகந்த : சாஸ்திர பாடம் பூர்த்தியாகவில்லை யெனின், ஏன் திரும்பி வந்துவிட்டீர்?

பிரம்மசாரி : அங்கொரு கோரமான விபத்து நேர்ந்தது.

யௌகந்த : அது என்ன?

பிரம்மசாரி : அங்கே உதயணன் என்னுமோர் அரசன் இருந்தான்.

யௌகந்த : அவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அவனுக்கு என்னவாயிற்று?

பிரம்மசாரி : அவந்தியரசனது குமாரியான தன் அரசியின்மீது அவன் மிக்க அன்பு வைத்திருந்தான்.

யௌகந்த : இருக்கக்கூடும், மேலே சொல்.

பிரம்மசாரி : அவன் வேட்டையாடப் போயிருக்கையில், ஊர் தீப் பற்றிக்கொண்டது. அந்த அரசி தீயினுக்கு இரையாயினள்.

வாசவதத்தை : (தனக்குத்தானே) அது பொய். அது பொய். ஐயோ, நான் இன்னும் உயிரோடிருக்கிறேனே. கெட்ட பாக்யம் பிடித்த நான்!

யௌகந்த : மேலே சொல்.

பிரம்மசாரி : அப்போது அவளை மீட்கும் பொருட்டு யௌகந்தராயணன் என்னும் மந்திரி அந்தத் தீயிற் குதித்தான். அவனும் அத்தீயில் மாண்டான்.

யௌகந்த : உண்மையில் அவனும் எரிந்து போயினனோ? அதற்குப் பிறகு?

பிரம்மசாரி : அரசன் திரும்பிவந்து, அவர்கள் இருவரும் இறந்து போனதைக்கேட்டு ஆராத்துயரம் மூண்டு, தானும் அத்தீயிலேயே வீழ்ந்து இறக்கப்பார்த்தான். அவனைத் தடுத்துப் பிடித்துக்கொள்வது அவனுடைய மந்திரிகளுக்குப் பெருங்கஷ்டமாயிற்று?

வாசவதத்தை : (தனக்குத்தானே) ஆம், என் நாதனுக்கு என்மீது மிக்க ஆசையுண்டென்று எனக்குத் தெரியும்.

யௌகந்த : அதற்குப்பின்?

பிரம்மசாரி : அவள் அணிந்திருந்த ஆபரணங்கள் தீப்பட்டுக் கருகிப் போயிருந்தன. அவைகளை அரசன் தன் மார்போடு இறுக அணைத்துக்கொண்டு மூர்ச்சையாகிக் கீழே விழுந்தான்.

எல்லோரும் : ஐயோ!

வாசவதத்தை : (தனக்குத்தானே) பெருந்தன்மைவாய்ந்த யௌகந்தராயணருக்கு இப்போது திருப்தியாயிற்றென்று நினைக்கிறேன். (அழுகிறாள்)

**பணிப்பெண் :** (பத்மாவதியை நோக்கி) அரசி! இம்மாது கண்ணீர் விட்டு அழுகிறாள்.

**பத்மாவதி :** அவள் மனம் மிக்க இளகலாயிருக்க வேண்டும்.

**யௌகந்த :** அங்ஙனமே, அங்ஙனமே. என் சகோதரி இயற்கையிலேயே இளகிய மனமுடையவள். அதற்கு மேலே?

**பிரம்மசாரி :** பின்பு, கொஞ்சங் கொஞ்சமாக அவனுக்கு நினைவு வந்தது.

**பத்மாவதி :** (தனக்குத்தானே) தெய்வாதீனம். அவர் உயிரோடிருக்கிறார். அவர் சோகித்து நினைவு தப்பிவிழுந்தா ரென்றவுடனே என் மனம் ஆழ்ந்து போயிற்று.

**யௌகந்த :** பிறகு?

**பிரம்மசாரி :** பின்பு அரசன் திடீரென்று எழுந்தான். துக்கத்தினால் தரையிற்புரண்டு அவன் உடம்பெல்லாம் புழுதிபடிந்து சிவந் திருந்தது. மனவேதனை பொறுக்கமாட்டாமல் அவன், ''ஓ, வாசவதத்தா, ஓ அவந்தி அரசகுமாரி, ஓ, என் ஆருயிரே, ஓ என் அருமைக் கண்மணியே!'' என்று மேலும் மேலும் புலம்பிப் புலம்பிப் பலவாறழுதான். சுருக்கிச் சொல்லின்,

13. பேடகன்ற சகோரமும்,
    பெண்ணிருந்துணை நீங்கிட
வாடி நின்றவர் ஒருவரும்,
    மனமுளைந்திலர் இவ்விதம்!
இன்ன மெய்ப்பெருமன்நினை
    எய்தினாள் வெகு புண்ணியை!
மன்னனன்பிடை வாழுவாள்,
    மங்கை வெந்துயிர் நீங்கினும்!

**யௌகந்த :** ஆனால், ஐயா, அவனை ஆற்றித் தேற்றுவதற்குச் சில மந்திரிகள் முயலவில்லையா, சொல்லும்?

**பிரம்மசாரி :** ஆம், ருமண்வான் என்னுமொரு மந்திரி இருந்தான். அவன் தன்னாலியன்ற மட்டும் அரசனுக்கு ஆறுதல் சொல்லிப்பார்த் தான். ஓ,

14. உணவின்றி உடல்தேய மெலிவான் - அவனும்
உலைகின்ற வேந்தென்ன நலிவான்.
இணைநின்ற கன்னங்கள் குழியும் - கண்ணில்
இடர்தோய்ந்த நீர்மல்கி வழியும்!

அரசுற்ற நிலைகண்டு தேர்வான் - பின்னர்
அதையொட்டி இறையேவல் தேர்வான்!
ஒருமிக்க இடர்கொண்டு குலைவான் - நெஞ்சில்
ஒழிவின்றி இருபோதும் அலைவான்!

பிறர் மெச்சும் அணியாடை நினையான் - அழகின்
பீடற்ற காகத்தை அனையான்!
தறைமன்னன் அழிவெய்த நேர்ந்தால் - அவனும்
தடையின்றி மரணத்தை அணைவான்!

**வாசவதத்தை :** *(தனக்குத்தானே)* நல்ல வேளை, என் நாயகனை நல்லா னொருவன் காக்கின்றான்.

**யௌகந்த :** *(தடக்குத்தாமே)* ஓ, ருமண்வான் எவ்வளவு பெருஞ்சுமை சுமக்கின்றான்! ஏனெனில்,

15. என் பணியிற் சிறிதேனும் ஒய்வு காண்பேன்:
இடையின்றி அவன் பெரிய சுமையே தாங்கித்
துன்புறுவான்! உறுதுணையாய் அரசன் சார்ந்தான்;
சூழ்ந்திட்ட பொறுப்பெல்லாம் அவனதாகும்!

*(உரக்க)* ஐயா, இப்பொழுது அரசன் ஆறுதலுற்றானா?

**பிரம்மசாரி :** அது எனக்குத் தெரியாது. அரசனை மிகக் கஷ்டப்பட்டு அழைத்துக் கொண்டு மந்திரிமார்கள் ஊரைவிட்டுப் போய்விட்டார்கள். அரசன் மீளாத்துக்கமூண்டு, "இவ்விடத்தில் அவளோடு நான் சிரித்தேன். இங்கே அவளுடன் பேசிக்கொண்டிருந்தேன்; இவ்விடத்தில் அவளுடன் உட்கார்ந்திருந்தேன்; இங்கு அவளுக்கும் எனக்கும் ஊடல் உண்டாயிற்று. இவ்விடத்தில் அவளுடன் இரவு கழித்தேன். இங்கே அவளுடன் உறங்கினேன்" என்று பிதற்றிக்கொண்டேயிருந்தான். அரசன் புறப்பட்டுப் போனதனால் ஊர் பாழடைந்தது. சந்திரனும் நக்ஷத்திரங்களும் அஸ்தமித்த பின்னுள்ள வானம் போலாயிற்று. நானும் அங்கிருந்து வந்து விட்டேன்.

தவத்தி : இவ்வன்னியனும் புகழ்ந்து பேசுவதனால் உண்மையில் அவ் வரசன் மிக மேன்மையானவனாயிருக்கவேண்டும்; நீதிமானா யிருக்கவேண்டும்; தர்மவானாயிருக்கவேண்டும்.

பணிப்பெண் : அரசி, அவ்வரசன் மறுமணம் புரிவரோவெனச் சந்தே கிக்கின்றேன்.

பத்மாவதி : (தனக்குத்தானே) அந்தக் கேள்விதான் என் மனத்திலும் எழுகின்றது.

பிரம்மசாரி : (பரபத்தியக்காரனையும் யௌகந்தராயணரையும் நோக்கி) இனி நான் போகலாமே, விடையருளுங்கள்.

இருவரும் : அப்படியானால், போய்வாரும், ஐயா. க்ஷேமமாய்ப் போய்வாரும்.

பிரம்மசாரி : வந்தனம். (போகிறான்)

யௌகந்த : நல்லது, அரசி! விடைகொடுத்தால் நானும் போய்வருவேன்.

பரபத்தி : இவர் போவதற்கு அரசியாரின் அனுமதி வேண்டுகின்றார்.

பத்மாவதி : உங்கள் பிரிவாற்றாமல் உங்கள் சகோதரி துக்கிப்பாள்.

யௌகந்த : நல்லவர்களின் வசத்தில் ஒப்படைக்கப்பெற்றிருப்பதனால் அவள் துக்கங் கொள்ளாள் (பரபத்தியக்காரனைப் பார்க்கிறார்) இனி நான் போய் வருகிறேன்.

பரபத்தி : அங்ஙனமாயின், போய் வாரும், ஐயா! திரும்பச் சந்திப் பதற்காகுமென்று நினைக்கிறேன்.

யௌகந்த : நானும் அப்படியே நினைக்கிறேன். (யௌகந்தராயணர் போகின்றார்.)

பரபத்தி : மாதே! இனி நான் பிரிந்து போகலாமே.

பத்மாவதி : (தவத்தியை நோக்கி) தாயே, நமஸ்காரம் செய்கின்றேன்.

தவத்தி : மகளே! சீக்கிரத்தில் உனக்கேற்ற கணவன் வாய்ப்பானாக!

**வாசவதத்தை :** அம்மா, நானும் நமஸ்கரிக்கின்றேன்.

**தவத்தி :** சீக்கிரத்தில் நீ உன் கணவனைக் கூடுவாயாக!

**வாசவதத்தை :** வந்தனம்.

**பரபத்தி :** இனி வாரும், இப்படி இந்த வழியே, அரசியாரே! ஏனெனில் இப்போது,

16. கூடு சேர்ந்தன புள்ளினம்;
    கோதில் மாதவர், தீம்புனல்
    ஆடி, மெய்யுறு சோர் வெலாம்
    அகல நின்றனர் கனையிலே!

    கன லெழுந்தன! கூடரொடும்
    காவெலாம் புகை சூழ்ந்ததே!
    தினகரன் சுடு கதிரினம்
    தேய விண்ணி லிறங்கினான்!

    பாரிருண்டது: வாய்வடம்
    பற்ற, ஏழ்பரி நிற்கவும்,
    தேரிழந்தனன் ஆதவன்
    சென்று மேல்வரை உச்சியில்!

*(எல்லோரும் போகிறார்கள்)*

*(முதல் அங்கம் முற்றிற்று).*

# அங்கம் 2

## இடையங்கம்

(ஒரு பணிப்பெண் வருகிறாள்)

**பணிப்பெண் :** குஞ்சரிகா[1], குஞ்சரிகா! எங்கே ஓ, இளவரசி பத்மாவதி எங்கே? என்ன சொல்லுகிறாய்? 'இளவரசி மல்லிகைக்கொடி வீட்டுக்கருகில் பந்தாடிக்கொண்டிருக்கிறாள். [2]சரி, அப்படி யானால் நான் அவளிடம் போகிறேன். (அங்குமிங்கும் நடந்து சுற்றும் முற்றும் பார்க்கிறாள்) ஆ, இதோ பந்தாடிக்கொண்டு இளவரசியே வருகின்றாளே. அவளுடைய காதணிகள் காற்றிலாடி அசைகின்றன. அவளுடைய முகத்தில் இவ்விளையாட்டினால் வேர்வைத் துளிகள் காணப்படுகின்றன. இந்தக் களைப்பினால் முகத்தின் அழகு இரட்டித்திருக்கின்றது. அவளிடம் போகிறேன். (போகிறாள்).

(இடையங்கம் முற்றிற்று)

(பந்தாடிக்கொண்டு பத்மாவதி பரிவாரங்களுடனும் வாசவதத்தை யுடனும் வருகிறாள்).

**வாசவதத்தை :** (பந்தைப் பொறுக்கியெடுத்துப் பத்மாவதியிடம் கொடுத்து) அன்பே இதோ உன் பந்து.

**பத்மாவதி :** அம்மே, இதுவரையில் ஆடியது போதும்.

**வாசவதத்தை :** நெடுநேரம் பந்தாடி விட்டாய். கண்ணே உன் கரங்கள் மிகச்சிவந்திருக்கின்றன. அவை வேறொருவருடை[3]யன போலத் தோன்றுகின்றன.

---

1. மற்றோர் பணிப்பெண்.

2. அரங்கமேடைக் கப்ப

3. ஏனெனில், கரங்களின் நிறம் பத்மாவதியின் மற்ற அங்கங்களின் நிறத்தைக் காட்டிலும் வேறுபட்டிருந்தது. தொனிக்கும் குறிப்புரை என்னவெனின், விவாகப் பெண்ணின் கையில் மருதாணிச்சாறு பூசிச் சிவந்ததுபோலிருந்தது என்பதாகும்.

**பணிப்பெண் :** விளையாடும், அம்மா, விளையாடும். மிகவும் மனக் கிளர்ச்சியுள்ள இக் கன்னியா பருவத்து இன்பங்களை எவ்வளவு அனுபவிக்கலாமோ அவ்வளவும் அனுபவியும்.

**பத்மாவதி :** (வாசவதத்தையை நோக்கி) அன்பின் அடைவே, என்ன ஆலோசித்துக்கொண்டிருக்கிறாய்? என்னைப்பார்த்துச் சிரிக்கிறா யெனத் தோன்றுகின்றது. என்னைப் பார்த்தால் பரிகாசத்திற் கிடமாயிருக்கின்றதா?

**வாசவதத்தை :** இல்லை, இல்லை, என் கண்ணே. இன்றைக்கு நீ மற்றெப் பொழுதைக் காட்டிலும் மிக அழகாயிருக்கின்றாய். உன் அழகிய முகத்தை ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் பார்க்கின்றேன்.

**பத்மாவதி :** போ போ! என்னைப் பரிகாசம் பண்ணாதே?

**வாசவதத்தை :** நான் வாயை மூடிக்கொள்கிறேன். ஓ, மகாசேனருடைய மருமகளாகப் போகிறவளே!

**பத்மாவதி :** இந்த மகாசேனர் என்பவர் யாராயிருக்கலாம்?

**வாசவதத்தை :** உஜ்ஜைனியில் பிரத்யோதன் என்னுமோர் அரசன் இருக் கிறான். படைப்பெருக்கத்தால் அவனை 'மகாசேனன்' என் பார்கள்.

**பணிப்பெண் :** அவ்வரச குடும்பத்தோடு விவாக சம்பந்தம் செய்து கொள்ள இளவரசிக்கு இஷ்டம் இல்லை.

**வாசவதத்தை :** அங்ஙனமாயின், யாரோடு விவாக சம்பந்தம் விரும்பு கிறாள்?

**பணிப்பெண் :** உதயணன் என்றொரு வத்ஸதேசத்து அரசன் இருக்கின் றான். அவனது குணப் பெருமைகளைப் பெரிதும் மகிழ்கின் றார்கள்.

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) என் கணவனை மணக்க விரும்புகிறாள்! (உரக்க) ஏன்?

**பணிப்பெண் :** ஏனெனில், அவன் பெரிய விவேகியாகவும் மென்மன முடையவனாகவும் இருக்கிறான். அதனாலேதான்.

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) எனக்குத் தெரியும். எனக்குத் தெரியும். அவருக்குள்ள அந்த நற்குணத்தைக்கண்டே நானும் மோகித்தேன்.

**பணிப்பெண் :** (இளவரசியை நோக்கி) ஆனால், அரசியாரே, அவ்வரசன் அழகற்றவனானால் என் செய்வது?

**வாசவதத்தை :** இல்லை, இல்லை, அவர் அழகு மிக்கவர்..

**பத்மாவதி :** அம்மே, அது உனக்கு எப்படித் தெரியும்?

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) என் கணவன்மீதுள்ள பக்ஷபாதத்தினால் நான் நேர்மை வரம்பைக் கடக்கலானேன். இப்பொழுது என்ன செய்யட்டும்? ஆ, தெரிந்தது (உரக்க) என் பெண்ணே, உஜ்ஜைனியில் எல்லாரும் அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள்.

**பத்மாவதி :** அது அப்படித்தான். உஜ்ஜைனிக்காரர் அவரைப் பார்ப்பது கஷ்டமில்லை. வனப்பு எவர் மனத்தையும் கவரத்தக்கதேயன்றோ.

(பத்மாவதியின் தாதி வருகின்றாள்)

**தாதி :** இளவரசிக்கு ஜே! அரசி உமக்கு விவாக வாக்தானம் செய்தாய் விட்டது.

**வாசவதத்தை :** யாருக்கு, அம்மா!

**தாதி :** வத்ஸராஜனாகிய உதயணனுக்கு.

**வாசவதத்தை :** அவ்வரசர் ஆரோக்கியமாயிருக்கிறாரா?

**தாதி :** ஆமாம், அவர் நல்ல ஆரோக்கியமாகவே இவ்விடம் வந்தார். நமது இளவரசியாரை மணக்க இசைந்துள்ளார்.

**வாசவதத்தை :** என்ன தகாத காரியம்!

**பத்மாவதி :** என், நேர்மை வழுவு என்ன?

**வாசவதத்தை :** அதிகமொன்றும் இல்லை. அவர் தம் அரசியின் பிரிவாற்றாமல் அப்போது அவ்வளவு துக்கித்ததையும், இப்போது காட்டும் அலட்சியத்தையும் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தேன்.

**தாதி** : அம்மா, இவரைப்போன்ற பெருமனத்தவர்கள் சாஸ்திர விதிகளுக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். ஆதலால், எளிதில் ஆறுதலடைகிறார்கள்.

**வாசவதத்தை** : நன்மாதே! அவரே நம் இளவரசியை மணக்க விரும்பி வந்தாரா?

**தாதி** : இல்லை, இல்லை; அவர் இங்கே வேறு காரியமாக வந்திருக்கையில், அவரிடம் பெருங்குடிப் பிறப்பு, கல்வி, யௌவனம், அழகு ஆகிய இவையெல்லாம் ஒருங்கே அமைந்திருக்கக் கண்டு, நம் அரசரே நம் இளவரசியை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டார்.

**வாசவதத்தை** : (தனக்குத் தானே) ஆ, அப்படியானால் என் கணவர்மீது குற்றம் இல்லை.

(மற்றொரு பணிப்பெண் வருகிறாள்)

**பணிப்பெண்** : இளவரசி, தீவிரப்படும், தீவிரப்படும். ''இன்றைக்கு வேளை நன்றாயிருக்கிறதாம். இன்றைய தினமே தாலிகட்ட வேண்டும்'' என்று பேரரசியார் கூறுகின்றார்.

**வாசவதத்தை** : (தனக்குத்தானே) அவர்கள் அவசரப்படுத்த அவசரப்படுத்த என் மனதில் இருள் அதிகமாக மூடுகின்றது.

**தாதி** : வாரும் இளவரசியே, வாரும்.

(எல்லோரும் போகிறார்கள்)

(இரண்டாம் அங்கம் முற்றிற்று)

# அங்கம் 3

(ராஜக்கிருகத்து அரண்மனை நந்தவனம்)

(ஆலோசனையில் ஆழ்ந்து வாசவதத்தை வருகிறாள்)

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) பத்மாவதியை அரசியின் மாளிகையில் விட்டுவிட்டேன். அங்கே விவாகத்தின் பொருட்டு மாதர்கள் கூடியிருக்கிறார்கள். என் தலைவிதியினால் எனக்கு நேர்ந்துள்ள துக்கத்தையாற்றிக் கொள்ளும் பொருட்டு, நந்தவனத்திற்குத் தனியே வரலானேன். (அங்கும் இங்கும் நடக்கிறாள்) ஓ, என்ன கெடு நடத்தை! பெருமை வாய்ந்த என் கணவரும் இப்போது வேறொருத்திக்கு உரியவராயினர். உட்காருகிறேன் (உட்காரு கிறாள்). கணவனை விட்டுப் பிரிந்ததனால் உயிர் துறக்கிற சக்ர வாகப்புள்ளே புண்ணியசாலி. ஆனால், நான் சாவாதிருக்கின் றேனே. என் பாக்கியக் குறையை என்னவென்று சொல்வேன். இவ்வளவு வேதனையான நிலைமையிலிருந்தும், திரும்ப என் கணவரைக் காண்பேன் என்னும் ஆசையினால் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

(மலர்கள் எடுத்துக்கொண்டு ஒரு பணிப்பெண் வருகிறாள்)

**பணிப்பெண் :** ஆவந்திகை என்னும் மாது எங்கே போயிருக்கக்கூடும்? (அங்குமிங்கும் நடந்து சுற்றிப் பார்க்கிறாள்). ஆ. அதோ பிரியங்குக் கொடியின் அடியிலுள்ள கல் திண்ணையின்மீது உட்கார்ந்திருக்கிறாளே. சாதாரணமாயினும் சிறியதான ஆடை யுடுத்து அவள் ஆலோசனையில் ஆழ்ந்து உட்கார்ந்து கொண் டிருக்கிறாள். பனிப் படலத்தால் மூடப்பெற்ற பிறைச்சந்திர னைப்போல இருக்கிறாள். அவளண்டை போகிறேன். (அவளை அணுகிறாள்) மாது ஆவந்திகா, உன்னை நெடுநேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

**வாசவதத்தை :** எதற்காக?

**பணிப்பெண் :** ''அவள் பெருங்குடிப் பிறந்தவள். அவள் கைத்திறம் வாய்ந்தவளாயும் அன்புடையவளாயும் இருக்கிறாள். ஆகையால் அவளே மணமாலையைத் தொடுக்கட்டும்'' என்று பேரரசியார் சொல்கிறார்கள்.

**வாசவதத்தை :** யாருக்காக நான் மணமாலை செய்ய வேண்டும்?

**பணிப்பெண் :** நம் இளவரசியாருக்கு.

**வாசவதத்தை :** (தனக்குத் தானே) ஐயோ, இந்தக் காரியமும் என் தலையில் வந்து விடிந்தது. உண்மையாகக் கடவுளுக்குக் கருணை இல்லை.

**பணிப்பெண் :** அம்மே, இப்பொழுது மனத்தில் வேறு நினைவு எதுவும் வைத்துக்கொள்ளாதே. மணவாளர் சித்திராலங்கார மண்டபத்தில் ஸ்நானம் செய்து கொண்டிருக்கிறார். ஆகையால், மணமாலையைச் சீக்கிரம் செய்து முடி.

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) நான் எதைப்பற்றியும் நினைக்க முடியாது. (உரக்க) மணவாளரைப் பார்த்திருக்கிறாயா, பெண்ணே?

**பணிப்பெண் :** ஆமாம். இளவரசியின்மீது எனக்குள்ள அன்பினாலும், தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் எனக்குள்ள ஆசையினாலும் நான் பார்க்கலானேன்.

**வாசவதத்தை :** அவர் எப்படி இருக்கிறார்?

**பணிப்பெண் :** அம்மா, அவரைப் போன்றவர் எவரையும் நான் இதுவரையிற் பார்த்ததில்லை.

**வாசவதத்தை :** சொல்லு அம்மா, சொல்லு, அவர் அழகாயிருக்கிறாரா?

**பணிப்பெண் :** கரும்பு வில்லும் மலர்ப் பாணமும் இல்லையேயொழிய, அவரை மன்மதன் என்றே சொல்ல வேண்டும்.

**வாசவதத்தை :** நல்லது, போதும்

**பணிப்பெண் :** என்னை ஏன் தடுக்கிறாய்?

**வாசவதத்தை :** மற்றொருத்தியின் கணவனைப் புகழ்ந்து பேசுவதைக் கேட்கலாகாது.

**பணிப்பெண் :** அப்படியானால், மாலையை விரைவாகக் கட்டிமுடி. அம்மா.

**வாசவதத்தை :** இதோ செய்துவிடுகிறேன். அம் மலர்களையும் தழைகளையும் கொடு.

**பணிப்பெண் :** இதோ இருக்கின்றன, வாங்கிக் கொள் (கொடுக்கிறாள்).

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) இங்கே நான் மணமாலை தொடுத்துக் கொண்டிருக்கிறேன். துரதிருஷ்டம் வாய்ந்த நான்! (கூடையைக் கவிழ்த்துக் கொட்டி, மலர்களையும் தழைகளையும் ஆய்ந்து பார்க்கிறாள். பின்பு ஒரு தழையைக் குறித்துக் கேட்கிறாள்.) இது என்ன தழை?

**பணிப்பெண் :** இதற்கு 'வைதவ்ய வாரிணி' ('அவிதவாகரணம்') என்று பெயர்.

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) இதை மிகுதியாக இம்மாலையில் வைத்துக் கட்டுவேன். என் பொருட்டும் பத்மாவதியின் பொருட்டும் இதை அதிகமாக வழங்குவேன். (உரக்க) இந்தத் தழையோ?

**மணிப்பெண் :** இதற்கு, 'சகக்களத்திர நாசனி' ('ஸபத்னீ மர்த்தனம்') என்று பெயர்.

**வாசவதத்தை :** இதை உபயோகப்படுத்தக்கூடாது.

**பணிப்பெண் :** ஏன்?

**வாசவதத்தை :** அவருடைய மனைவி இறந்து போய்விட்டாள். ஆதலால், ஒழிக்கவேண்டிய போட்டிக்காரி இல்லை. ஆகையால், இது வேண்டாம்.

**மற்றொரு பணிப்பெண் (வந்து):** சீக்கிரம் ஆகட்டும் அம்மா, சீக்கிரம் ஆகட்டும். மாப்பிள்ளையைச் சுமங்கலிகள் மாதர் மாளிகைக்கு அழைத்துக் கொண்டு போகிறார்கள்.

**வாசவதத்தை :** சித்தமாயிருக்கின்றது. எடுத்துக்கொள்.

(மாலையைக் கொடுக்கிறாள்).

**முதற் பணிப்பெண் :** வந்தனம். இனி நான் போகவேண்டும் அம்மா! (பணிப்பெண்கள் இருவரும் போகிறார்கள்).

**வாசவதத்தை :** அவள் போய்விட்டாள். ஓ, என்ன கொடுமை! பெருந் தன்மையுள்ள என் கணவரும் வேறொருத்திக்கு உரியவராயினர். ஆ, நான் போய்ப் படுத்துக் கொள்ளுகிறேன். தூக்கம் வருமாயின் அது என் வேதனையைத் தணிக்கும். (போகிறாள்).

(மூன்றாம் அங்கம் முற்றிற்று)

# அங்கம் 4

## இடையங்கம்

*(ராஜக்கிருகத்தில் அரண்மனை)*

*(விதூஷகன் வருகிறான்)*

**விதூஷகன் :** (குதூகலமாக) ஆ! ஆ! எனது யஜமானராகிய வத்ஸராஜரது விவாக மகோற்சவ சமயத்தில் நான் இருக்கக் கிடைத்தது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கின்றது! அவக்கேடு என்னும் சுழியில் ஆழ்ந்து போனபின் இவ்வாறு மேற்கிளம்பி வந்து விளங்குவர் என்று கனவிலேனும் எவராவது நினைத்திருப்பரா? இப்போது திரும்பவும் மாடமாளிகைகளில் வசிக்கின்றோம். உள் முற்றத் திலுள்ள குளங்களிற் குளிக்கின்றோம். சுவைமிக்க உயர்தரமான உணவு அருந்துகின்றோம். இப்போது நான் சொர்க்க லோகத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால், பழகுவதற்குத் தேவதா மங்கையர் இல்லையென்பது ஒன்றே குறை. ஒரேயொரு பெரிய அனுகூலம் மாத்திரம் இருக்கின்றது. எனக்கு அன்னம் ஜீரண மாகிறதே இல்லை. மிகவும் மிருதுவான படுக்கையிற் படுத்தாலும் தூக்கம் வருகிறதில்லை. உடம்பெல்லாம் வாதநோய் பற்றியது போல் இருக்கின்றது. நல்ல ஆரோக்கியமும் நேர்த்தியான உண வும் இல்லையெனின் வாழ்க்கையில் இன்பம் இன்றாம்.

*(பணிப்பெண் வருகிறாள்)*

**பணிப்பெண் :** நமது வசந்தன் எங்கே போயிருக்கக்கூடும்? (சுற்றுமுற்றும் பார்க்கிறாள்) ஆ, இதோ இருக்கிறானே! (அவனண்டையில் போகி றாள்). மேன்மை வாய்ந்த வசந்தகா, உன்னை நெடுநேரமாகத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

**விதூஷகன் :** (அவளைப் பார்த்து) என்னை ஏன் தேடிக்கொண்டிருந்தாய், அம்மணி?

**பணிப்பெண் :** மாப்பிள்ளை ஸ்நானம் செய்தாய்விட்டதாவென்று அரசி யார் தெரிய விரும்புகிறார்.

**விதூஷகன் :** எதற்காக அது தெரியவேண்டுமென்கிறார்?

**பணிப்பெண் :** அவருக்கு மலர்களும் தைலாதிகளும் நான் கொண்டு போவதற்காக.

**விதூஷகன் :** மகாராஜர் ஸ்நானம் செய்தாய்விட்டது. உணவுப் பொருள்கள் தவிர மற்றெதுவாயினும் நீ கொண்டுவரலாம்?

**பணிப்பெண் :** உணவுப் பொருள் ஏன் வேண்டாமென்கிறாய்?

**விதூஷகன் :** ஏனெனில், எனக்கு நல்லதிர்ஷ்டமில்லாததனாலே, என் வயிறு குயிற்கண்போலப் புரண்டுகொண்டிருக்கின்றது.

**பணிப்பெண் :** உனக்கு எப்போதும் அப்படியே இருக்குமாக!

**விதூஷகன் :** நீ போகலாம். நான் மகராஜரண்டை போய்ச்சேருவேன்.

*(போகிறார்கள்)*

*(இடையங்கம் முற்றிற்று)*

*(அரண்மனை நந்தவனம்)*

*(பத்மாவதி தன் பரிவார்ங்களுடனும், ஆவந்திகையென மாறு வேடம் பூண்ட வாசவதத்தையுடனும் வருகிறாள்).*

**பணிப்பெண் :** இளவரசியார் நந்தவனத்திற்கு வந்தது என்னோ?

**பத்மாவதி :** அன்புக்குரியாளே! ஸெபாலிகச் செடிகள் பூத்திருக்கின் றனவோ வெனப் பார்க்க வந்தேன்.

**பணிப்பெண் :** அரசியாரே! அவையெல்லாம் பூத்திருக்கின்றன. செடி முழுவதும் பூக்கள் நிரம்பியிருக்கின்றன. அம்மலர்கள் பவழம் பொதிந்த முத்துத் தொங்கணிகள் போலிருக்கின்றன.

**பத்மாவதி :** அப்படியானால், நீ ஏன் தமாதிக்கின்றாய்?

**பணிப்பெண் :** நான் போய் மலர்களைக் கொய்து வருமளவும் அரசியார் இந்தக் கருங்கல் திண்ணையின்மீது உட்கார்ந்திருக்கலாமே.

**பத்மாவதி** : (வாசவதத்தையை நோக்கி) நாம் இங்கே உட்கார்ந்திருக்கலாமா, அம்மா?

**வாசவதத்தை** : இருக்கலாம். (இருவரும் கருங்கல் திண்ணையின்மீது உட்காருகிறார்கள்).

**பணிப்பெண்** : (கொஞ்சம் மலர்களைக் கொய்துகொண்டு) பாரும் அரசியாரே, பாரும். என் கை நிரம்ப ஸெபாலிக மலர்கள் இருக்கின்றன. அவைகளுக்குக் காலுறைபோல மனோசிலை நிறமான செம்மடல்கள் இருக்கின்றன.

**பத்மாவதி** : (அவைகளை உற்றுநோக்கி) பார், அம்மா, இம்மலர்கள் என்ன ஒளிபொருந்திய நிறங்கள் வாய்ந்திருக்கின்றன!

**வாசவதத்தை** : ஆம். எவ்வளவு அழகான மலர்கள்!

**பணிப்பெண்** : அரசியாரே, இன்னும் கொஞ்சம் இம்மலர்கள் கொய்து வரட்டுமா?

**இளவரசி** : வேண்டாம், அம்மே, இவை போதும்.

**வாசவதத்தை** : அவளை ஏன் தடுக்கிறாய் அம்மா?

**பத்மாவதி** : ஏனெனில், என் பிராணநாதர் இங்கே வரும்போது இம்மலர்ச் செறிவைப் பார்த்துக் களித்தால் எனக்குப் பெருமையாயிருக்கும்.

**வாசவதத்தை** : அவர்மீது உனக்கு, அன்பே, அவ்வளவு ஆசை இருக்கின்றதா?

**பத்மாவதி** : அது எனக்குத் தெரியாது. ஆனால், அவர் என்பக்கத்தில் இல்லாதபோது என்னைத் தனித்துப் பிடித்துவிட்டால் போல, வருத்தமாய் இருக்கின்றது.

**வாசவதத்தை** : (தனக்குத் தானே) இவளும் இப்படிச் சொல்வதைக் கேட்கும் போது என் கஷ்டத்தை என்ன சொல்வேன்.

**பணிப்பெண்** : 'என் கணவன் மீது எனக்கு ஆசையாயிருக்கின்றது' என்று இளவரசியார் எவ்வளவு நேர்த்தியாகச் சொன்னார்!

**பத்மாவதி :** எனக்கு ஒரு சந்தேகம்.

**வாசவதத்தை :** அது என்ன?

**பத்மாவதி :** என் பிராணநாதர்மீது எனக்கு எவ்வளவு ஆசை இருக்கின்றதோ அவ்வளவு ஆசை வாசவதத்தைக்கு இருந்ததோ!

**வாசவதத்தை :** இருந்தது, இன்னும் அதிகம்!

**பத்மாவதி :** உனக்கு எப்படித் தெரியும்?

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) ஆ, என் பிராணநாதர் மீது எனக்குள்ள ஆசை மிகுதியால் திரும்பவும் ஒழுக்க முறை தவறிப்போனேன். என்ன சொல்கிறதென்று எனக்குத் தெரியும். (உரக்க) அவர்மீது அவளுக்கு ஆசை குறைவாயிருந்தால், அவள் உற்றார் உறவினரை விட்டு அவருடன் கள்ளத்தனமாக ஓடிப்போயிருக்கமாட்டாள்.

**பத்மாவதி :** நீ சொல்வது சரியே.

**பணிப்பெண் :** இளவரசியே! நீரும் வீணை[1] வாசிக்கக் கற்றுக் கொள்ள விரும்புவதாக உமது கணவருக்கு மெல்லச் சொல்லுமே.

**பத்மாவதி :** அதைப்பற்றி நான் அவருக்குச் சொல்லியே இருக்கிறேன்.

**வாசவதத்தை :** அதற்கு அவர் என்ன சொன்னார்?

**பத்மாவதி :** ஒன்றும் சொல்லவில்லை. அவர் ஒரு தடவை பெருமூச்சு விட்டுச் சும்மா இருந்தார்.

**வாசவதத்தை :** அதனால் உனக்கு என்ன தெரிகிறது!

**பத்மாவதி :** பெருந்தன்மை வாய்ந்த வாசவதத்தையும் அவளுடைய நற்குணங்களும் அவருக்கு ஞாபகம் வந்ததெனத் தெரிந்து கொண்டேன். எனக்கு உபசாரமாக, என்னெதிரில் கண்ணீர் உதிர்க்காதிருந்தார்.

---

1. முன்னர் அவனிடத்து வீணை பயின்ற வாசவதத்தையின் ஞாபகம் அவனுக்கு வருமாறு செய்யும் பொருட்டு.

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) அது உண்மையாயின் நான் மேன்மை பெற்றேன்.

(அரசனும் விதூஷகனும் வருகிறார்கள்)

**விதூஷகன் :** ஆ! ஆ! கொய்யுமளவில் கீழே அங்கங்கே பந்து ஜீவ மலர்கள் உதிர்ந்திருக்க, இந்நந்தவனம் எவ்வளவு மனங்கவர் வனப்பு வாய்ந்து இருக்கின்றது! இவ்வழி, பிரபுவே.

**அரசன் :** இதோ, வருகிறேன், என் அருமை வசந்தகா, இதோ வருகிறேன்.

1. அவந்தி மணிமுடி பூண்டான் செல்விதன்னை
அன்றொரு நாள் உஜ்ஜயினி நகரிற் கண்டேன்.
உவந்து விழியிணையாரப் பருகிப் போந்தேன்,
உருவிலியும் ஐங்கணையை எய்தான் அன்றே!

ஐங்கணையும் ஊடுருவ இன்பக் காதல்
அலைபரவி உள்ளத்தில் விரகவாதை
பொங்கியெழ நோகின்றேன்: மற்றோர் அம்பும்
புண்பெருகப் புறப்பட்ட வகைதான் என்னே!

**விதூஷகன் :** அரசி பத்மாவதி எங்கே போனாள்? கொடி வீட்டுக்குப் போயிருக்கிறாளா; 'மலைச்சிகரம்' என்னும் கருங்கல் திண்ணைக் குப் போயிருக்கிறாளா? அது முழுதும் அஸன மலர்கள் விழுந்து நிரம்பியிருப்பதனால் புலித்தோல் ஆசனம்போலத் தோன்றுகின் றது. ஏழிலை மரக்காட்டுக்குள் போயிருக்கக்கூடுமா? அம் மரங்களின் வாசனை வீறிட்டுத் தோன்றுமே. ஒரு வேளை பறவை களும் மிருகங்களும் சித்திரிக்கப்பெற்ற சுவர்களுள்ள மர மண்டபத்திற்குப் போயிருக்கக்கூடுமா? (அவன் அண்ணாந்து உற்றுப்பார்க்கிறான்) ஆ! ஆ! மகாராஜா! மாசற்ற சரத்காலத்து வானத்தில் கொக்குகள் ஒரு வரிசையாக வேகமாய்ப் பறப்பதைப் பார்த்தீர்களா? பலதேவருடைய[2] இருகரங்களைப் போல நீண்டு வெண்மையாயிருக்கின்றன.

2. வந்தன வானிற் குருகுகள் கூடிப்
பந்தியிலிங்கே பரவின பாராய்!
அன்மையி லிழியும், மேலெழும், அகலும்:
அப்புற மொன்றாய் வரிசையின் அமையும்!

---

2. பல தேவர் - பலராமர்.

விண்மிசைவெளியை இருபிரி வாக்க
வெண்மையி னெல்லை கீறுவ தொக்கும் (வந்)

மருவிய சட்டை நீக்கிய பாம்பின்
வயிறென வானம் மாசற ஒளிரும்;
குருகினம் உயரத் திரிதரு காலை
கோதறு துருவத் தாரகை யொக்கும் (வந்)

**பணிப்பெண் :** *பார், அம்மா அரசி, பார்! இந்தக் கொக்குக் கூட்டத்தைப் பார்! ஒரு வரிசையாக நிதானமாய்ப் பறக்கின்றன. வெண்மை யாயும் மனங்கவரும் காட்சி வாய்ந்தும் இருக்கின்றன. ஓ, அரசர் வருகிறார்!*

**பத்மாவதி :** *ஆ, என் பிராணநாதரே வருகிறார்! (வாசவதத்தையை நோக்கி) அம்மா, உன் பொருட்டு என் கணவரை எதிர்கொள்ளத் தவிர்க்கிறேன். ஆகையால், நாம் மல்லிகைக் கொடி வீட்டிற்குள் போய் விடுவோம்.*

**வாசவதத்தை :** *சரி, (அம்மூவரும் கருங்கல் திண்ணையை விட்டு நீங்கி மல்லிகைக் கொடி வீட்டிற்குள் போகிறார்கள்.)*

**விதூஷகன் :** பத்மாவதி அரசி இங்கே வந்து போயிருக்க வேண்டும்.

**அரசன் :** அது உனக்கு எப்படித் தெரியும்?

**விதூஷகன் :** இந்தச் செபாலிகச் செடிகளைப் பாருங்கள். இவைகளிலுள்ள மலர்களெல்லாம் பறிக்கப்பட்டிருக்கின்றன.

**அரசன் :** *(கருங்கல் திண்ணையைத் தொட்டுப் பார்க்கிறான்) ஆம், நீ சொல்வது சரியே.*

2.a. இங்கு சிலர் இருந்துள்ளார்
இதில் ஐயம் இல்லை!
என்வரவைக் கண்டுமிக
நாணியகன்றிட்டார்!

தங்கி, அவர் வீற்றஇடம்
வெம்மை யுளதின்னும்!
தரைமீது தேமலரும்
கால்மிதியைக் காட்டும்!

ஓ, வசந்தகா, இம்மலர்களுக்கு எவ்வளவு ஒளி பொருந்திய நிறங்கள் இருக்கின்றன!

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) 'வசந்தகன்' என்னும் பெயரைக் கேட்டவுடனே நான் திரும்பவும் உஜ்ஜைனியில் இருக்கிறேனென்று எனக்குத் தோன்றுகின்றது.

**அரசன் :** பத்மாவதி வருகிறவரையில் நாம் இந்தக் கருங்கல் திண்ணை மீது உட்கார்ந்திருப்போம்.

**விதூஷகன் :** சரி (திண்ணைமீது உட்கார்ந்து மறுபடி எழுந்திருக்கிறான்) ஓ, ஓ! சரத்காலத்து வெய்யிலின் வெப்பம் தாங்க முடியவில்லை. நாம் அந்த மல்லிகைக்கொடி வீட்டிற்குள் போவோம்.

**அரசன் :** நல்லது, முன் நட.

**விதூஷகன் :** அப்படியே. (இருவரும் சுற்றி நடக்கிறார்கள்).

**பத்மாவதி :** நல்லவனான நமது வசந்தகன் எல்லாவற்றையும் கெடுத்து விடுவான்போலிருக்கிறதே. இப்போது என்ன செய்யலாம்?

**பணிப்பெண் :** அம்மா, தொங்குகிற கொடியையசக்கி, அதன்மீதுள்ள தேனீக்கள் மேலெழுந்து மொய்க்குமாறு செய்து, அரசர் இங்கே வரவொட்டாமற் செய்யட்டுமா?

**பத்மாவதி :** நல்லது, அப்படியே செய். (பணிப்பெண் அவ்வாறே செய்கிறாள். தேனீக்கள்கூட்டமாக எழுந்து விதூஷகனை நோக்கிப் போகின்றன).

**விதூஷகன் :** துணை செய்யுங்கள்! துணை செய்யுங்கள்! பின்னாலே இருங்கள், அரசே, நீங்கள் பின்னாலே இருங்கள்!

**அரசன் :** என்ன செய்தி?

**விதூஷகன் :** இந்த முறைகெட்ட தேனீக்கள் என்னைக் கொட்டுகின்றன.

**அரசன் :** ஆகாது, அப்படிச் சொல்லாதே. தேனீக்களை எவரும் அச்சுறுத்திக் கலைக்கக்கூடாது.

3. இன்னிசை முரலும் தும்பி
இடர்கொள மிதிபட நடவோம்!
மெலிவுற விரகத்தீயில்
வேகும் இன்பப் பெடையின்
நலிவுற அணையும், மகிழும்;
நறுமது வுண்ணும், திரியும்! (இன்)

மருவிய பெடையைப் பிரியின்
மதுகரம் அலையும்! உள்ளம்
பெருகிய துயரிற் கசியும்!
பிரியேல், ஆருயிர் இணையை! (இன்)

ஆகையால், நாம் இந்தக் கருங்கல் திண்ணையின் மீதே உட்காருவோம்.

விதூஷகன் : சரி. அப்படியே செய்வோம். (இருவரும் அந்தத் திண்ணையின் மீது உட்காருகிறார்கள்.)

பணிப்பெண் : அரசி, நாம் இப்போது இங்கே அடைபட்டவர்களாவோம்.

பத்மாவதி : அனுகூலமாக, அங்கே என் ஆசை நாயகரே உட்கார்ந்திருக்கிறார்.

வாசவதத்தை : (தனக்குத் தானே) என் உயிர்நாயகன் நல்லாரோக்கியம் வாய்ந்திருக்கக் கண்டு சந்தோஷப்படுகிறேன்.

பணிப்பெண் : அரசியாரே, இதோ பாரும்! இவ் வம்மையின் கண்ணில் நீர் தளும்புகின்றது.

வாசவதத்தை : காச புஷ்பங்களின் பூந்தாது, இந்தத் தேனீக்கள் ஓடியாடுவதனால், பறந்து என் கண்ணில் விழுந்தது. அதனால் கண்ணீர் சுரந்தது.

பத்மாவதி : அப்படித்தான்.

★ ★ ★

**விதூஷகன் :** நந்தவனத்தில் இப்போது எவரும் இல்லை. அரசே நான் ஒரு செய்தி கேட்க விரும்புகிறேன். கேட்கலாமா?

**அரசன் :** வேண்டியதைக் கேள்.

**விதூஷகன் :** எவர்மீது உங்களுக்கு ஆசை அதிகம்? பழைய வாசவதத்தையின்மீதா, புதிய பத்மாவதியின் மீதா?

**அரசன் :** இப்பொழுது, என்னை மிகவும் மாறுபாடான நிலைமையில் வைக்கப்பார்க்கிறாயா?

★ ★ ★

**பத்மாவதி :** என் அன்பே, என் இறைவர்க்கு என்ன மாறுபாடான நிலைமை ஏற்பட்டது?

**வாசவதத்தை :** (தனக்குத் தானே) எனக்குந்தான். என்ன அதிருஷ்டக் குறைவு!

★ ★ ★

**விதூஷகன் :** கூச்சம் இல்லாமற் சொல்லும். ஒருத்தி இறந்து போய்விட்டாள்; மற்றொருத்தி இங்கே சமீபத்தில் இல்லை.

**அரசன் :** மாட்டேன். நண்ப, மாட்டேன். உனக்குச் சொல்லமாட்டேன். நீ அலப்புவாயன்.

★ ★ ★

**பத்மாவதி :** அவ்வளவு சொன்னதனாலேயே என் பிராணபதி போதியவளவு சொல்லிவிட்டார்.

★ ★ ★

**விதூஷகன் :** நான் உமக்குப் பிரமாணமாகச் சொல்லுகிறேன். ஒரு பிராணிக்கும் வெளியிடமாட்டேன். பாரும், என் வாயையடைத்து முத்திரை வைத்து விடுகிறேன்.

**அரசன் :** அப்படியன்று, நண்பனே, சொல்லத் துணியேன்.

★ ★ ★

**பத்மாவதி** : எவ்வளவு முட்டாள்தனமாக அவன் பிடிவாதம் பண்ணுகிறான்! அவர் அவ்வளவு சொல்லிய பின்னும் அவருடைய உள்ளத்தை அவன் அறியவில்லை.

★ ★ ★

**விதூஷகன்** : என்ன, எனக்குச் சொல்லமாட்டீரா? நல்லது, சொல்லாவிட்டால் இந்தக் கருங்கல் திண்ணையை விட்டு நீங்கள் நகரவே கூடாது. அரசரை இங்கேயே பிடித்து வைத்திருப்பேன்.

**அரசன்** : என்ன! பலவந்தப்படுத்துகிறாயா?

**விதூஷகன்** : ஆம், பலவந்தமாகத்தான்.

**அரசன்** : நல்லது, அப்படியானால் பார்ப்போம்.

**விதூஷகன்** : என்னுடைய துடுக்குத்தனத்திற்கு என்னை மன்னியும். நமது நட்பின்மீது ஆணைவைத்துக் கேட்கிறேன். உள்ளதை உரையும்.

**அரசன்** : இப்பொழுது என்ன செய்வேன்? வேறு வழி இல்லை. சொல்லுகிறேன், கேள்:

4. அழகும், குணமும்,
 பதுமாவதியின்
அன்பும் நாடிப்
 புகழ்வேன்: எனினும்
முழுதும் கொண்டாள்
 என்னிதயத்தின்
முதலும் முடிவும்
 வாசவதத்தை!

★★★

4. a) இன்னல் நானுற்ற போதில்
 ஏங்கினாள் துயர் கொண்டாள்!
பின்னர் நான் மகிழும் வேளை
 பெரிது நல்லுவகை பூத்தாள்!

பிறரெனைப் புகழும் காலை
 பெருமிதம் வாய்ந்தாள்! என்மேற்
குறைபடப் புவியோர் நிந்தை
 கூறவும் தேய்ந்தாள் சிந்தை!

பேரிடர் நெஞ்சிற் பாய்ந்து
பெருகி நானுழல் வேனாயின்,
காரணம் இதுதானென்னக்
கண்டிலாள் எனினும் நொந்தாள்!

போற்றினாள் இனிய கூறிப்
பொங்கிய எனது சீற்றம்
ஆற்றினாள்! வேலைக்கேற்ற
அரும்பணி புரியத் தேர்ந்தாள்!

இன்ப நன் மனைவி, தாதி,
இணையறாத் தோழியாகி,
அன்பெழு தகைமை சான்ற
அமைச்சுமாய் எனக்கு நின்றாள்!

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) நன்று, நன்று. நான் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் போதுமான பிரதிபலன் கிடைத்தது. இம் மாறு வேஷத்திற்கும் பல பெருமைகள் இருக்கின்றன.

**பணிப்பெண் :** இளவரசியே, நமது இறைவர்க்கு மரியாதையே தெரியவில்லை.

**பத்மாவதி :** இல்லை, இல்லை, என் கண்ணே! பெருந்தன்மை வாய்ந்த வாசவதத்தையின் நற்குணங்களையெல்லாம் இன்னும் நினைத்துக்கொண்டிருப்பதனால், அவர் மிக்க மரியாதை செய்தவரே யாவர்.

**வாசவதத்தை :** என் அன்பே, உன் வார்த்தைகள் உனது உயர்குடிப் பிறப்புக்கு ஏற்றவைகளாயிருக்கின்றன.

★ ★ ★

**அரசன் :** நான் சொல்லிவிட்டேன். இனி நீதான் சொல்ல வேண்டும். உனக்குப் பழைய வாசவதத்தையின் மீது ஆசை அதிகமா, புதிய பத்மாவதியின் மீது ஆசை அதிகமா சொல்.

★ ★ ★

**பத்மாவதி :** இப்போது வசந்தகன் செய்ததுபோல என் ஆருயிர் இறைவரும் செய்கின்றார்.

★ ★ ★

**விதூஷகன் :** உபயோகமற்ற என்னுடைய அபிப்பிராயத்தினால் என்ன பிரயோஜனம்? இரண்டு அரசியார்களையும் நான் மிக உயர் வாகவே மதித்திருக்கிறேன்.

**அரசன் :** மடையா, என் எண்ணத்தைச் சொல்ல வேண்டுமென்று என்னை வற்புறுத்தினாய்! இப்போது உன் எண்ணத்தைச் சொல்லமாட்டே னென்கிறாயே?

**விதூஷகன் :** என்ன, நீரும் என்னைக் கட்டாயப்படுத்துவீரா?

**அரசன் :** ஆம். தடையென்ன?

**விதூஷகன் :** சரி, அப்படியானால் அதை நீர் தெரிந்து கொள்ளப்போகிறதே இல்லை.

**அரசன் :** என்னை மன்னிப்பாய். பெருமையுற்ற பிராமணா! உன் விருப்பப் படியே சொல்.

**விதூஷகன் :** அப்படியானால், சொல்லுகிறேன் கேளும். அரசி வாசவதத்தையை நான் மிக உயர்வாகவே மதித்திருந்தேன். அரசி பத்மாவதியோ இளமை வாய்ந்துள்ளாள்; அழகாயிருக்கிறாள். அவளுக்கு அக்ந்தையும் இல்லை; கோபமும் இல்லை. மிக்க பணிவு வாய்ந்துள்ளாள். ஆனால், இன்னுமொரு பெரிய நற்குணம் உண்டு. இனிமையான தின்பண்டங்களைக் கொண்டு வரும்போது வாசவதத்தை, "இப்போது, வசந்தகப் பெரியார் எங்கே போயி ருக்கக்கூடும்?" என்று கேட்டுக்கொண்டே வருவாள்.

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) நல்லது வசந்தகா! நீ இதை ஞாபகம் வைத்திருக்கவேண்டியதே.

**அரசன் :** நல்லது, வசந்தகா, இதையெல்லாம் அரசி வாசவதத்தைக்குச் சொல்கிறேன்.

**விதூஷகன் :** ஐயோ! வாசவதத்தையா! வாசவதத்தை எங்கே இருக் கிறாள்? அவள் நெடுநாளைக்கு முன்னரே இறந்து போயினளே!

**அரசன் :** (விசனமாக) அது அப்படித்தான். வாசவதத்தை இறந்து போயினளே!

5. நகையூட்டும் உன்மொழியால் அன்றுசென்ற
நல்லின்பப் பெருவாழ்வை நினைவிற் சேர்த்தாய்
மகிழூட்டி அவளருகே இருந்த கால
வழக்கத்தின் வசமானேன்: வாயும் விட்டேன்!

★ ★ ★

*பத்மாவதி :* அது இனிமையான ஸம்வாதமாயிருந்தது. அதை இந்தப் பாவி நடுவில் கெடுத்துவிட்டான்.

*வாசவதத்தை :* (தனக்குத்தானே) நல்லது, நல்லது. என் மனம் இப் பொழுது ஆறுதலுற்றது. ஆ, ஒளிந்திருந்து கேட்கும்போது இம் மொழிகள் எவ்வளவு இனிமையாயிருக்கின்றன?

★ ★ ★

*விதூஷகன் :* தைரியங் கொள்ளுங்கள். என் அரசே, மனத்தைத் தேற்றிக் கொள்ளுங்கள். விதியையாவரே வெல்லவல்லார்? அது அங்ஙனம் நேர்ந்து விட்டது. அதைப்பற்றி அவ்வளவுதான் சொல்லலாம்.

*அரசன் :* நண்பனே, என் மனநிலையை நீ அறிந்தாயில்லை. எனெனில்,

6. அலைபட உள்ளம் அதிர்வித்த
அன்பு மறக்கும் தரமாமோ?
நிலைதடு மாறும்படி, ஆசை
நினைவதை மீண்டும் கொணராதோ?

அடிமை யினிறுகிப் படுதுயரில்
அயர்வுற நிற்கும் நமதுள்ளம்
விடுதலை எய்தத் துணைபுரியும்
விழியி னைச்சிந்தும் நீரொன்றே!

*விதூஷகன் :* (தனக்குத்தானே) அரசரது முகம் கண்ணீரினால் கறைபட் டிருக்கின்றது. அதைத் துடைப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருவேன்.

(போகிறான்)

★★★

**பத்மாவதி :** (வாசவதத்தையை நோக்கி) அம்மா, என் பிராணநாதரது முகம் கண்ணீர்ப் பெருக்கத்தால் மறைந்து மங்கியிருக்கின்றது. இப்பொழுது நாம் நழுவிப் போய்விடுவோம்.

**வாசவதத்தை :** ஆம், போய்விடுவோம்.... அப்படியன்று, நீ இங்கேயே இரு. கணவர் இவ்வளவு துக்கப்பட்டிருக்கும்பொழுது நீ அவரை விட்டுப் போவது தகுதியன்று. நான் மாத்திரம் போகிறேன்.

**பணிப்பெண் :** அவ்வம்மை சொல்வது சரியே. நீ அவரண்டை போக வேண்டும், அரசியாரே.

**பத்மாவதி :** என்ன சொல்லுகிறாய்? நான் போகட்டுமா?

**வாசவதத்தை :** ஆம், அன்பே, நீ போ. (வாசவதத்தை அரண்மனையை நோக்கிச் செல்கிறாள். பத்மாவதி அரசனிடம் போகின்றாள்).

**விதூஷகன் :** (தாமரையிலையில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வரு கிறான்): இதோ பத்மாவதி அரசியார் வந்திருக்கிறாரே!

**பத்மாவதி :** வசந்தகா, இது என்ன?

**விதூஷகன் :** இதுதான் அது, அதுதான் இது.

**பத்மாவதி :** வெளியிட்டுச் சொல்லும், ஐயா, வெளியிட்டுச் சொல்லும்.

**விதூஷகன் :** அம்மா, காஸ மலர்களின் பூந்தாது காற்றிலடித்துவந்து அரசரது கண்ணில் விழுந்தமையால் கண்ணீர் சொரிந்து முகத்தை யெல்லாம் நனைத்திருக்கின்றது. இந்தத் தண்ணீரைக் கொண்டு போய் அவருடைய முகத்தைத் துடையும்.

**பத்மாவதி :** (தனக்குத்தானே) ஆ, தயாவீரமுள்ள யஜமானருக்கு ஏற்றபடி தயாவீரமுள்ள வேலைக்காரனும் அமைந்திருக்கிறான்? (அவனிடமிருந்து தண்ணீரை வாங்கிக்கொண்டு அரசரண்டை போகிறாள்). என் ஆருயிர்த் தலைவர்க்கு வெற்றியுண்டாவதாக! தங்கள் முகத்தைத் துடைப்பதற்கு இதோ தண்ணீர்!

**அரசன் :** ஏ, என்ன, பத்மாவதியா? (ஒருபுறமாக) வசந்தகா, இது என்ன?

**விதூஷகன் :** இது இப்படியாகும் (காதோடு மெதுவாகச் சொல்கிறான்).

*அரசன் :* நல்லது, வசந்தகா, நல்லது, (தண்ணீரைக் கொஞ்சம் உறிஞ்சுகிறான்) பத்மாவதி, உட்கார்.

*பத்மாவதி :* என் நாதரின் உத்தரவின் படியே (உட்காருகிறாள்).

*அரசன் :* (பத்மாவதியை நோக்கி)

7. கலைமதி வெண்மைக் காசாமலரின்
கமழ்பூந் தாது காற்றினிற் பரவி
விழியிடை வீழ்ந்தது; வியனெழிற் பாவாய்!
வதனம் நனைய வழிந்த கண்ணீரின்
காரணம் இதுவாம், கண்டனை நீயே!

(தனக்குத் தானே)

8. நெஞ்சு விரும்பிய பொருளை இழக்க
நேர்ந்திடுமோவென அஞ்சுவர், என்றும்
வஞ்சியர் ஏங்குவர்! இச்சிறு நங்கை
மன்னிய மனவலி வாய்ந்தனளேனும்,

திருமண மாலையி னெழுமண மின்னும்
தேய்ந்திலள்; உண்மை யுணர்ந்திடில் அந்தோ,
பெருகிய செம்புனல் இருவிழி பொங்கிப்
பீறிட நெக்குறும் அரிவையினுள்ளம்!

*விதூஷகன் :* மகதத்துப் பேரரசர், உமது பெருமையின் பொருட்டுத் தம் நண்பர்களெல்லாருக்கும் இன்று மாலை ஒரு விருந்தளிக்கிறார். உபசாரஞ் செய்தவர்க்குத் திருப்பி யுபசாரஞ் செய்வதனால் அன்பு தோன்றும். ஆகையால், அரசர் இனி எழுந்திருக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

*அரசன் :* ஆம், உண்மைதான். இப்பொழுது உனக்கு ஞாபகம் வந்தது நல்லதாயிற்று. (எழுந்திருக்கிறான்)

9. கனிவும் குணமும் பூண்டாரைக்
காண்போம் எளிதாய் உலகத்தில்!
மனமொத்தின்ன குணமாண்பை
மதிப்பார் இங்கே அரிதம்மா!

(எல்லோரும் போகிறார்கள்)

(நான்காவது அங்கம் முற்றிற்று)

★★★

# அங்கம் 5

(ராஜக்கிருகத்தில் தர்சக மகாராஜனுடைய அரண்மனை)

## இடையங்கம்

(பத்மினிகை வருகிறாள்)

**பத்மினிகை :** மதுகரிகா, மதுகரிகா, இங்கே உடனே வா!

**மதுகரிகை :** (வந்துகொண்டு) இதோ இருக்கிறேன் தோழி, என்ன செய்யச் சொல்கிறாய்?

**பத்மினிகை :** பத்மாவதி அரசிக்குக் கடுமையான தலைநோய் வந்திருக்கிறதென்று உனக்குத் தெரியாதா, அன்பே?

**மதுகரிகை :** அடடா!

**பத்மினிகை :** உடனேபோய் ஆவந்திகை அம்மையைக் கூப்பிடு. இளவரசிக்குத் தலைவலியாயிருக்கிறதென்று மட்டும் சொல். அவள் தானே வந்துவிடுவாள்.

**மதுகரிகை :** ஆனால், அவள் என்ன செய்யக்கூடும்?

**பத்மினிகை :** அவள், இளவரசிக்கு வேடிக்கையான கதைகளைச் சொல்லித் தலைவலியைப் போக்குவாள்.

**மதுகரிகை :** அது சாத்தியமே. இளவரசியின் படுக்கையை எங்கே அமைத்திருக்கிறார்கள்?

**பத்மினிகை :** நீராழி மண்டபத்தில், நீ போ. நான் வசந்தகரைத் தேடிப் பார்த்து யஜமானருக்குச் சொல்லும்படி செய்கிறேன்.

**மதுகரிகை :** சரி. (போகிறாள்)

**பத்மினிகை :** இப்போது பெரியாரான வசந்தகரை எங்கே பார்த்துப் பிடிக்கலாம்?

*(விதூஷகன் வருகிறான்)*

**விதூஷகன் :** *(தனக்குத்தானே)* வத்ஸராஜனது மனம், அரசியைவிட்டுப் பிரிந்தபின் குன்றிப்போயிருந்தது. ஆனால், இப்போது மகிழ்ச்சி தரத்தக்க நிஷேக சுபமுகூர்த்த சமயத்தில் பத்மாவதியின் விவாகத் தால் காம எழுச்சி உண்டாகி அவர் உற்சாகமாயிருக்கின்றார். *(பத்மினிகையைப் பார்க்கிறான்)* அடா, இதோ பத்மினிகையிருக் கின்றாளே. என்ன செய்தி, பத்மினிகா?

**பத்மினிகை :** ஏன், வசந்தகரே! அரசி பத்மாவதிக்குக் கடுமையான தலைநோய் உண்டாயிருக்கின்றது. உமக்குத் தெரியாதா?

**விதூஷகன் :** உண்மையா, அம்மா, எனக்குத் தெரியாதே.

**பத்மினிகை :** நல்லது, அப்படியானால், என் யஜமானருக்குப் போய்ச் சொல்லும். அதற்குள்ளாக நான் தலைவலிக்குத் தைலம் விரைந்து கொண்டுவருகிறேன்.

**விதூஷகன் :** பத்மாவதியின் படுக்கையை எங்கே அமைத்திருக்கிறார்கள்?

**பத்மினிகை :** நீராழி மண்டபத்தில் போடப்பட்டிருக்கின்றது.

**விதூஷகன் :** நல்லது, நீ போ. நான் மகாராஜருக்கு அறிவிக்கிறேன்.

*(போகிறார்கள்)*

*(மத்தியாங்கம் முற்றிற்று)*

*(அரசன் வருகிறான்)*

1. மற்றுமோர் முறை மணவாழ் வென்னும்
    மல்கு நீர்க்கடல் யாத்திரைக் கொள்ளப்
பெற்ற வேளையில், என்மனம் அந்தப்
    பிரிய வாஸவதத்தையை எண்ணும்
இன்ப நாயகி, அவந்தியின் மன்னன்
    ஈன்ற கோமகள், சாவுறை பனியிற்
பொன்று தாமரைப் போதென் அந்தோ
    போயினாள் கொடுந்தீயிடை வெந்தாள்!

**விதூஷகன் :** (வந்து கொண்டே) சீக்கிரம் வாருங்கள் அரசே, சீக்கிரம் வாருங்கள்.

**அரசன் :** என்ன செய்தி?

**விதூஷகன் :** அரசி பத்மாவதிக்குக் கொடிய தலைநோய் உண்டாயிருக்கின்றது.

**அரசன் :** உனக்கு யார் சொன்னார்?

**விதூஷகன் :** பத்மினிகை.

**அரசன் :** ஐயோ!

2. ஆழ்ந்து நோக்குவார் எனது சிந்தையில்
அறிவர் இன்னமும் துயரம்! ஆயினும்
சூழ்ந்த சஞ்சலம் சிறிது நீங்கினேன்
சுந்தராங்கனை இவளை எய்தவே?

பெரிது வேதனை முன்னர் மாந்தினேன்:
பின்னும் அத்துயர்பெற நடுங்குவேன்.
அரிது தன்கடன் தேர்ந்த செல்வி இவ்
அரிவை தானுமக் கதியை வாய்க்குமோ?

நல்லது, பத்மாவதி எங்கே இருக்கிறாள்?

**விதூஷகன் :** நீராழி மண்டபத்தில் அவளுக்குப் படுக்கை போட்டிருக்கிறார்கள்.

**அரசன் :** அப்படியானால், என்னை அங்கே கொண்டுபோய் விடு.

**விதூஷகன் :** இவ்வழி வாருங்கள், மகாராஜா. (இருவரும் நடந்து போகிறார்கள்) இதுதான் நீராழி மண்டபம், உள்ளே போங்கள்.

**அரசன் :** முதலில் நீ போ.

**விதூஷகன் :** சரி, (உள்ளே போகிறான்) துணை செய்யுங்கள்! யாராவது துணைக்கு வாருங்கள். பின் செல்லுங்கள், மகாராஜா, பின்னே இருங்கள்.

***அரசன் :*** *என்ன செய்தி?*

**விதூஷகன் :** இங்கே ஒரு பாம்பு தரையில் நெளிந்து கொண்டிருக்கிறது. விளக்கு வெளிச்சத்தில் அதன் உடல் நன்றாகத் தெரிகிறது.

***அரசன் :*** *(உள்ளே போய் அவன் காட்டிய பொருளைப் பார்த்துச் சிரிக்கிறான்.)* இந்த மடையன் இதைப் பாம்பென்று நினைத்துக் கொண்டான்.

3. அறிவிலாய், அணுகிப் பாராய்?
அதுவெறும் மலரின் மாலை:
மறுவிலா தெழுந்து நீண்ட
வாயலின் வீழ்ந்ததாகும்.

கடுப்பற வீசும் மாலைக்
காற்றினில் அலைந்து, சற்றே
அடிப்புறம் திரும்பி நின்ற
அலங்கலும் பாம்பை யொக்கும்!

**விதூஷகன் :** *(அதை நெருங்கி உற்றுப்பார்த்து* அரசர் சொல்வது சரியே. உண்மையில் இது பாம்பன்று. *(அறைக்குட் போய்ச்சுற்றுமுற்றும் கவனித்துப் பார்க்கிறான்)* அரசி பத்மாவதி இங்கே வந்து புறப் பட்டுப் போயிருக்க வேண்டும்.

***அரசன் :*** நண்பனே, அவள் இங்கே வந்திருக்கமாட்டாள்.

**விதூஷகன் :** அரசருக்கு எப்படித் தெரியும்?

***அரசன் :*** என்ன தெரியவேண்டியிருக்கிறது?

4. விரித்த ஒருசயனம் தான்
விரித்தவாறே
வீழ்ந்திருப்ப, மெல்லணையும்
கலையக் காணோம்!

திருத்திய நற்றலையணையோ
குழியவில்லை!
தேர்ந்து சிர நோய்க்கென்று
விதிக்கப் பெற்ற

மருத்துவரின் தயிலத்தால்
நீலம் பச்சை
மஞ்சள் சிவப்பென நின்ற
கறையும் இல்லை!

வருந்திய நோய் நினை வகற்றும்
பொருளீங்கில்லை!
வந்தவுடன் நோயுள்ளார்
எழவும் ஆமோ!

**விதூஷகன் :** அங்ஙனமாயின் தாங்கள் சிறிது நேரம் இந்தப் படுக்கையின் மீது உட்கார்ந்திருங்கள். அரசியார் வரட்டும்.

**அரசன் :** நல்லது (உட்காருகிறான்) நண்பனே, எனக்குத் தூக்கம் அதிகமாக வருகின்றது. எனக்கு ஒரு கதை சொல்.

**விதூஷகன் :** நான் கதை சொல்லுகிறேன். ஆனால், தாங்கள் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களென்று காட்டுவதற்கு அடையாள மாக 'இம்' 'இம்' என்று சொல்லிக்கொண்டேயிருக்கவேண்டும்.

**அரசன் :** அப்படியே செய்கிறேன்!, இம்' கொட்டிக் கொண்டேயிருக் கிறேன்.

**விதூஷகன் :** உஜ்ஜைனி என்னும் ஒரு நகரம். அந்நகரத்தில் ஸ்நானத் திற்கேற்ற அழகான குளங்கள் சில இருக்கின்றன.

**அரசன் :** என்ன, உஜ்ஜைனி என்று சொன்னாயா?

**விதூஷகன் :** இந்தக் கதை உங்களுக்குப் பிடிக்காவிட்டால், வேறொன்று சொல்லுகிறேன்.

**அரசன் :** அப்படியன்று, எனக்கு அந்தக் கதை பிடிக்கவில்லையென்று அர்த்தமன்று. ஆனால்,

5. மன்னன் அவந்தியிறைவன் ஈன்ற புதல்வியை உந்தன்
வார்த்தையினால் நினைவூட்டினை? அன்று பிரிகையில்
தன்னிறைமக்களை அன்புறஎண்ணி என்மார்பிலேதலை
சாயஇரங்கிப் புறாவெனவெம்பி நடுங்கினாள்!

அதுவல்லாமல்,

6. நல்லிசை அன்று பயின்றிடுவேளையிற் பன்முறை-விழி
நாட்டமென் மீதுற என்மனம் ஆய்பவள்போல,அம்
மெல்லியல் நோக்குவாள்! என்னுயிராகிய வீணையை-நனி
மீட்டுவாளெனத் தைவரும் அன்னவள் செங்கரம்!

**விதூஷகன் :** நல்லது, வேறொரு கதை சொல்கிறேன். பிரம்மதத்தம் என்றொரு நகரம். அங்கே கம்பில்லியன் என்னுமொரு அரசன் ஆட்சி புரிந்துகொண்டிருந்தான்.

**அரசன் :** அது என்ன? என்ன சொன்னாய்? (தான் சொல்லியதை விதூஷகன் திரும்பச் சொல்லுகிறான்)

**அரசன் :** பித்தா! பிரமதத்தன் என்னும் அரசன், கம்பில்யம் என்னும் நகரத்தில் இருந்தானென்று சொல்ல வேண்டும்.

**விதூஷகன் :** என்ன? பிரமதத்தன் அரசனா, கம்பில்லியமா நகரம்?

**அரசன் :** ஆம்.

**விதூஷகன் :** அப்படியானால், கொஞ்சம் பொறும், இதை நான் மனப் பாடம் பண்ணிக்கொள்கிறேன். 'பிரம்மதத்தன் என்னும் அரசன்; கம்பில்லியம் என்னும் நகரம்,' 'பிரம்மதத்தன் என்னும் அரசன்; கம்பில்லியம் என்னும் நகரம்' (என்று பல்முறை திரும்பத் திரும்பச் சொல்லுகிறான்). இனிச் சொல்லுகிறேன், கேளும் (தனக்குத்தானே( அரசர் நல்ல உறக்கம் கொண்டாரே! இந்த நேரத்தில் குளிர் அதிகமாயிருக்கின்றது. நான்போய் என் சால் வையையெடுத்துக்கொண்டு வருகிறேன். (போகிறான்)

(ஆவந்திகை என்னும் மாறுவேஷம் பூண்ட வாசவதத்தையும் ஒரு பணிப்பெண்ணும் வருகிறார்கள்)

**பணிப்பெண் :** வாரும், அம்மா, வாரும். அரசியாரைப் பெரிய தலைவலி வாட்டுகின்றது.

**வாசவதத்தை :** கேட்க வருத்தமாயிருக்கிறதே. பத்மாவதியின் படுக் கையை எங்கே அமைத்திருக்கிறார்கள்?

**பணிப்பெண் :** நீராழி மண்டபத்தில்.

**வாசவதத்தை :** அப்படியானால், எனக்கு வழி காட்டு, (இருவரும் போகிறார்கள்).

**பணிப்பெண் :** இதுதான் நீராழி மண்டபம். உள்ளே போம் அம்மா. அதற்குள்ளாக நான் போய் நெற்றியில்தடவுவதற்குத் தைலம் எடுத்து வருகிறேன். (பணிப்பெண் போகிறாள்).

**வாசவதத்தை :** (தனக்குத்தானே) உண்மையாக, கடவுளுக்கு என்மீது கருணை இல்லை. மனைவியையிழந்து பெருந்துயருற்று வேதனையுறும் என் அருமை இறைவர்க்குப் பேராறுதலாயிருந்த பத்மாவதியும் இப்போது நோய்ப்பட்டிருக்கிறாள். நான் உள்ளே போகிறேன் (அவள் உள்ளே போய்ச் சுற்றிப் பார்க்கிறாள்) ஓ, வேலைக்காரர்கள் எவ்வளவு அஜாக்கிரதை! பத்மாவதிக்கு உடம்பு சரியாயில்லை. அப்படியிருந்தும் இவளுக்குத் துணை யாகத் தீபத்தை மாத்திரம் வைத்துவிட்டு அவர்களெல்லாரும் போய்விட்டார்களே. இவ்வாறு இவள் தூங்கிக்கொண்டிருக் கிறாள். நான் உட்காருகிறேன். ஆனால், இவளுக்குச் சிறிது தூரத் தில் உட்கார்ந்தால், இவள்மீது எனக்கு அன்பு இல்லையெனத் தோன்றும். ஆகையால், இவளுடைய படுக்கையின்மீதே உட் காருவேன். (படுக்கையின் ஓரத்தில் உட்கார்ந்தவுடனே மகிழ்ச்சி யாலும் உற்சாகத்தாலும் என் மனம் ஏன் படபடக்கின்றதோ? நல்ல வேளையாக இவள் மூச்சுவிடுகிறது இயற்கையாயிருக்கின்றது. தடங்காமல் சரியாக மூச்சு விடுகின்றாள். தலைவலி நின்று போயிருக்க வேண்டும். படுக்கையில் ஓர் ஓரமாகப் படுத்திருப்ப தனாலே, தன்னை என் கையாற்கட்டியணைத்துக் கொள்ளும்படி என்னை அழைக்கின்றாள்போலும். நான் இவள் பக்கத்தில் படுத்துக் கொள்கிறேன். (படுக்கப் போகிறாள்).

**அரசன் :** (தூக்கத்தில் பேசுகிறான்) ஓ வாசவதத்தா!

**வாசவதத்தை :** (படுக்கையை விட்டுச் சரேலென எழுந்து அட! இவள் பத்மாவதியல்லள்; என் ஆசைநாயகன், அவர் என்னைப் பார்த்து விட்டாரா! அங்ஙனமாயின் யௌகந்தராயணரது சபதம்[1] வீண் போகுமே.

---

1. சபதம் :- வத்ஸராஜன், மகதத்தரசன் உதவியினால், தன்னுடைய ராஜ்யத்தைத் திரும்பிக் கைப்பற்றிக் கொள்கிறவரையில், வாசவதத்தை உயிரோடிருக்கும் விஷயத்தை மறைத்து வைப்பதேயாம். தன் உதவியினால் உறும் பயனெல்லாம் தன் மகள் பத்மாவதிக்கே உரித்தாகுமென்னும் எண்ணம் இல்லாவிட்டால் மகதராஜன் உதவிசெய்ய முன்வரமாட்டான்.

**அரசன் :** ஓ, அவந்தி அரசகுமாரி!

**வாசவதத்தை :** நல்ல வேளையாக, என் நாதன் கனவு தான் காண்கின்றார். இங்கே வேறெவரும் இல்லை, ஆகையால், சிறிது நேரம் இருந்து நான் கண்ணையும் மனத்தையும் குளிர்வித்துக் கொள்வேன்.

**அரசன் :** ஓ, பிரியே ! ஓ, என் அன்புக்குரிய மாணவி! நான் கூப்பிடுவதற்கு எதிர் மொழிவாயாக.

**வாசவதத்தை :** எதிர்மொழிகின்றேன், நாதா, எதிர்மொழிகின்றேன்.

**அரசன் :** கோபமாயிருக்கிறாயா?

**வாசவதத்தை :** இல்லை, இல்லை, துக்கமாகவும் இனிமையற்றுமே இருக்கிறேன்.

**அரசன் :** என்மீது கோபம் இல்லாவிட்டால் உன் ஆபரணங்களை ஏன் களைந்துவைத்திருக்கிறாய்?

**வாசவதத்தை :** இதனினும் வேறு எது நன்றாயிருக்கும்?

**அரசன் :** விரசிகை[2] யைக் குறித்து நினைத்துக்கொண்டிருக்கிறாயா, என்ன?

**வாசவதத்தை :** (கோபமாக) வெட்கக்கேடு. இவ்விடத்திலும் விரசிகையா!

**அரசன் :** அப்படியானால், விரசிகையின் பெயரை ஞாபகப்படுத்தியதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். (தன் கரங்களை நீட்டுகின்றான்)

**வாசவதத்தை :** நான் இங்கே வந்து நெடுநேரமாயிற்று. எவரேனும் எந்த நிமிஷத்திலேனும் பார்க்கக்கூடும், இனி நான் போகிறேன். முதலில், படுக்கையினின்றும் தொங்கிக்கொண்டிருக்கிற என் யஜமானரது கையை சரியான இடத்தில் வைப்பேன். (அப்படியே செய்துவிட்டுப் போகிறாள்).

**அரசன் :** (திடீரென எழுந்து) நில், வாசவதத்தா, நில், அந்தோ,

---

2. **விரிசிகை :-** முன்னர் உதயணனின் அன்புக்குரியவளாயிருந்தவள்.

7. சென்றேன் விரைவாய் அவள் பின்னால்:
செல்லக் கதவிற் றலைமோதி
நின்றேன்! அந்தத் தையலையும்
நேரே மீண்டும் கண்டேனோ?
பொய்யா மின்பக் கனவேயோ?
மெய்யோ, இதுதான் அறியேனே!

*விதூஷகன் : (உள்ளே வந்து ஆ, நீங்கள் விழித்துக்கொண்டீர்களா!)*

*அரசன் :* நண்ப!, உனக்கு ஒரு நல்ல செய்தி சொல்லப்போகிறேன். வாசவதத்தை உயிரோடிருக்கிறாள். அவளைச் சற்றுமுன் பார்த்தேன்.

7. a) அழகெனும்படை தாங்கி, என்மன
அரணிடிந்திட மோதினாள்!
விழியெனும் கடையூடு காரிகை
மேவி நின்றனள் சந்ததம்!

*விதூஷகன் :* ஐயோ, வாசவதத்தையா! வாசவதத்தை எங்கே இருக்கிறாள்? அவள் இறந்துபோய் வெகுகாலமாயிற்றே.

*அரசன் :* அப்படிச் சொல்லாதே. அன்பனே,

8. இந்த மெல்லணைமீதில் இத்ததி
யானுறங்கவும், அரிவைதான்
வந்துநித்திரை நீக்கி நொய்தென
மாயமாய் மறைவாகினாள்!
விரவுதீயிடை மங்கை நோவுற
வெந்துமாண்டனளென்று நல்
உரவின் மந்திரிசொல்ல நம்பினன்:
உண்மை தேர்ந்தனன் இன்றரோ!

8. a) தேய்விலாதது, நாகமோதிய
சிந்துரம், பத்மாவதி
ஆய நன்னுதல்மீது கண்டதும்
அறியலாயினன் உண்மையை!
'இன்னம் ஆருயிர் வாழுகின்றனள்
எழிலவந்தியின் இறைமகள்!'
என்னும் ஆசையின் உணவு நெஞ்சினில்
எழ, அதிர்ந்தது மெய்யெலாம்

**விதூஷகன் :** அடே அப்பா. அது அசாத்தியமான காரியம். உஜ்ஜைனியில் ஸ்நானம் செய்யும் சிறு குளங்களைப்பற்றி நான்சொல்லியதனால், உங்களுக்கு அரசி வாசவதத்தையின் நினைவு வந்திருக்கும். அந்த நினைவோடே உறங்கியதனாற் கனவு கண்டிருப்பீர்கள்.

9. கண்டது கனவென்றால் - அந்தக்
   கனவே வேண்டுவன் ஆயுளெலாம்!
   மண்டிய துயிலறவும் - நனவின்
   வாழ்வினை எய்தவும் ஆசையிலேன்?
   கண்டது பிரமையெனில் - அந்தக்
   காட்சியை வேண்டுவன் எந்நாளும்!
   மண்டிய மயலறவும் - உணர்வை
   வாய்க்கவும் இனிநான் ஆசையிலேன்!

**விதூஷகன் :** நண்பரே, 'அவந்தி சுந்தரி' என்னு மொரு மோகினி இந் நகரத்தில் வட்டமிட்டுக்கொண்டிருக்கிறாள். உங்கள் கண்ணுக்குப் புலப்பட்டது அவளாயிருக்கலாம்.

**அரசன் :** ஓ, அப்படியன்று.

10. கண்விழித்ததும் கண்டதுண்மைகாண்
    பண்மிழற்றுமப் பாவைதன்னை நான்!
    குழல் முடித்திலாள்; விழிலஞ்சனக்
    குறியிழைத்திலாள், அரியகற்பெனும்
    செழுமணிச்சுடர் மாண்புதேய்வறச்
    செம்மை போற்றினாள்தன்னை, அன்பனே! (கண்)

அதுவல்லாமல், நண்ப,

11. துயிலில் இக்கரம் தழுவி அன்புறத்
    தோகைப்பற்றினாள், எனினும் இன்னமும்
    மயிர் பொடித்திடக் காண்க! நெஞ்சிலே
    மருவும் எண்ணமும் புகலவல்லதோ? (கண்)

**விதூஷகன் :** இப்படிப்பட்ட பொய்த்தோற்றங்களை இனியும் நினையாதிருங்கள். வாருங்கள், வாருங்கள். மாதர் மாளிகைக்குப் போவோம்.

**பரபத்தி :** (உள்ளேவந்து) யஜமானருக்கு ஜே! நமது பேரரசாகிய தர்சக

மகாராஜர் தங்களுக்கு இந்தச் செய்தி சொல்லச் சொன்னார். கெடுநடத்தையோனான ஆருணியைத் தாக்குவதற்காகவே உங்கள் மந்திரி ருமண்வான் என்பவன் பெரும்படையோடு சமீபத்தில் வந்திருக்கிறான். அதுபோலவே, என்னுடைய யானைதேர்புறவி காலாட்படைகளும் போர்க்கோலம் பூண்டு சித்தமாயிருக்கின்றன. அன்றியும்,

12. சிதறி வீழ்ந்தனர் செருநர்! இன்றுநம்
 தேசமக்களோ துணிவு பொங்கினார்!
 அதிப, அன்புபூண் டாலிபோம்வரை
 அழிவிலாது பிற்படையை ஒம்புவோம்!
 பகைவர் வேரறச் சிதைவர் நிச்சயம்!
 பரவுகங்கையைத் தாண்டி நம்படைத்
 தொகை யெழுந்ததே! வருக மீளவும்
 சொந்த வற்ச நாட்டிறைமை பூணவே!

*அரசன் : (எழுந்து) மிகவும் நன்றாயிருக்கின்றது. இனி,*

13. போரிடை அலையென மதகரி பிளிறிப்
 புரவியும் ஆர்க்கப் பெருமழைபோல
 கூரிய சுடுகணை சீறியவேளை,
 கொல்லுவன் எதிரியை நீசனை, நானே!

*(எல்லோரும் போகிறார்கள்)*

*(ஐந்தாம் அங்கம் முற்றிற்று)*

# அங்கம் 6

(கௌசம்பி, வத்ஸராஜனுடைய அரண்மனை)

## மத்தியாங்கம்

(மகாசேனருடைய பரபத்தியக்காரன் வருகிறான்)

**பரபத்தி :** என்ன, ஓ, இந்தப் பொற்கமான் வாசலிற் காவல் செய்பவர் யார்?

**துவாரபாலகி :** (வந்து) ஐயா, நான் தான் விஜயை. என்ன செய்யச் சொல்கிறீர், ஐயா?

**பரபத்தி :** தெரிவையே, உதயண மகாராஜருக்கு இந்தச் செய்தியைச் சொல். வத்ஸ நாட்டைத் திரும்பக் கைப்பற்றிக் கொண்டதனால், அவருடைய கீர்த்தி உயர்வுற்றிருக்கின்றது. ''மகாசேனராஜனால் அனுப்பப்பட்ட ரைப்ய குலத்தவனான பரபத்தியக்காரன், அரசி வாசவதத்தையின் தாதியாகிய வஸுந்தரை என்பவளுடன் வந்திருக்கிறான். அந்தத் தாதியைப் பேரரசி அங்காரவதி அனுப்பியுள்ளாள். இருவரும் வாசலண்டை காத்திருக்கிறார்கள்'' என்று அரசனுக்கு அறிவி.

**துவாரபாலகி :** ஐயா, செய்தி சொல்லுவதற்கு இது சரியான இடமுமன்று, சமயமுமன்று.

**பரபத்தி :** இந்த இடமும் சமயமும் ஏன் ஏற்கமாட்டா?

**துவாரபாலகி :** சொல்லுகிறேன். கேளும், ஐயா, இன்றைய தினம் 'ஸுயமுனா அரண்மனை'[1] யில் யாரோ வீணை வாசித்துக்கொண்டிருந்தார். அதைக்கேட்டவுடன் ''கோஷவதி என்னும் தொனி கேட்கின்றதே'' என்று மகாராஜர் சொன்னார்.

**பரபத்தி :** அதற்குப்பின்?

---

1. முத்ரா ராக்ஷஸத்திற் குறிக்கப்பட்டுள்ள பாடலிபுத்திரத்து 'ஸுகங்கா' அரண் மனையைப் போன்றது.

**துவாரபாலகி** : பின்பு எவனோ ஒருவன்போய் 'இந்த வீணை எங்கே கிடைத்தது?'' என்று அதை வாசித்துக் கொண்டிருந்தவனைப் போய்க் கேட்டான். அதற்கு அவன் ''நர்மதா நதிக்கரையில் நாணற் புதரில் இதைக் கண்டெடுத்தேன். மகாராஜருக்கு இது உப யோகப்படுமானால் இதை நீ அவருக்குக் கொண்டுபோய்க் கொடுக்கலாம்'' என்று பதில் சொன்னான். அதை அரசனிடம் கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அதை அவர், தன் விலாவில் அணைத்துக் கொண்டு அப்படியே மூர்ச்சித்தார். நினைவு வந்தவுடனே அவர் கண்ணீர் பெருகி முகத்தை மறைக்க, ''ஓ, கோஷவதி, உன்னைக் காண்கிறேன், அவளைக் காண்கிலனே!'' என்று சொன்னார். இதனாலேதான் இந்தத் தருணம் ஏற்றதன் றென்று சொன்னேன். இப்படிப்பட்ட சமயத்தில் உங்கள் செய் தியை எப்படிச் சொல்வேன்?

**பரபத்தி** : அம்மணி, எங்கள் வரவை அறிவி. நாங்கள் வந்துள்ள காரியமும் அதற்கு ஒருவாறு சம்பந்தப்பட்டதே.

**துவாரபாலகி** : அப்படியாயின், உடனே போய்ச் சொல்வேன், ஐயா. ஆ, மகாராஜர் ஸமுத்ரகிருஹ மாளிகையினின்று இறங்கி வந்துகொண் டிருக்கிறார். இங்கே சொல்வேன்.

**பரபத்தி** : அப்படியே செய், அம்மா.

(போகிறார்கள்)

(மத்தியாங்கம் முற்றிற்று)

(அரசனும் விதூஷகனும் வருகிறார்கள்)

**அரசன்** :

1. பொங்குமின்ப நாதமுறும் வீணையே,
புரையிலாத அழகுபூண்ட அரசியின்
கொங்கை மீதும் அன்புகொண்ட மடியிலும்
கூடிநின்று நீயுமன்று குலவினாய்!

இருளடர்ந்து திருவகன்ற அடவியில்,
ஏது நீயும் உயிர்பிழைத்த வகையரோ?
மருவியங்கு பறவையிட்ட எச்சம்
வண்ணமேனி ஒளி மழுங்க வைத்ததே!

நீ உணர்ச்சியில்லாத ஜடப்பொருள் கோஷவதி. அங்ஙனம் இல்லையெனின் அவ்வனிஷ்டம் பிடித்த அரசியை எங்ஙனம் மறப்பதற்காகும்?

2. உணராய், கோஷவதி!
உனையவள் பொன்னிடையில்
அணையா நிற்கையிலே
அணுகிய தனியின்பம்,

ஆயிழை ஒய்வுறவும்
அவளிரு முலைமீதில்
மேயினை! அம்மகிழின்
வெறியை மறந்தனையோ?

கோமகள் இடையிடையே
குறுநகை பூத்ததையும்,
தேமொழி ஆடியதும்,
தீர மறந்தனையோ?

கண்டிலள் எனை என்றால்
கருவிழி நீருக, அவ்
ஒண்டொடி ஏங்கியதும்
உள்ள மறந்தனையோ?

**விதூஷகன் :** இத்திராத்துக்கம், அரசே, போதும்.

***அரசன் :*** *அப்படிச் சொல்லாதே, அன்பனே:-*

3. நெடுநாளெனது நெஞ்சினில் எய்தி
அடங்கியிருந்த ஆசையை எல்லாம்
எழுப்பியிதிந்த இழுக்கிலா வீணை!
ஆயினும் இதனை அன்புற ஏந்தி
இன்னிசை பயின்ற இறைமகள் தன்னைக்
கண்டிலேனாகக் கவலையில் மூழ்கி
வரையிலாத்துயரம் மனதிலுற்றேனே!

வசந்தகா, கோஷவதியைக் கைதேர்ந்த விணைஞரிடம் கொண்டு போய்ப் புதிய தந்திபோட்டுச் சீக்கிரம் கொண்டுவா.

**விதூஷகன் :** உத்தரவுப்படியே. (வீணையையெடுத்துக் கொண்டு போகிறான்).

(துவாரபாலகி வருகிறாள்)

**துவாரபாலகி :** மகாராஜருக்கு ஜே! மகாசேன அரசர் அனுப்பிய ரைப்ய குலத்துப் பரபத்தியக்காரரும், பேரரசி அங்காரவதி அனுப்பிய இளவரசி வாசவதத்தையின் தாதியாகிய வசுந்தரையும் வாசலில் வந்து காத்திருக்கிறார்கள்.

**அரசன் :** அப்படியானால் பத்மாவதியை அழைத்துக் கொண்டுவா.

**துவாரபாலகி :** உத்தரவுப்படியே (போகிறாள்)

**அரசன் :** இது என்ன? இந்தச் செய்தி[2] எவ்வளவு சீக்கிரம் மகாசேனருக்கு எட்டியது!

(பத்மாவதியும் துவாரபாலகியும் வருகிறார்கள்)

**துவாரபாலகி :** இவ்வழி வாருங்கள், அரசியாரே!

**பத்மாவதி :** எஜமானருக்கு ஜே!

**அரசன் :** பத்மாவதி, மகாசேனர் அனுப்பிய ரைப்ய குலத்துப் பரபத்தியக்காரரும், பேரரசி அங்காரவதி அனுப்பிய இவளரசி வாசவதத்தையின் தாதியாகிய வஸுந்தரையும் வாயிலில் வந்து காத்திருக்கிறாளென்று கேள்விப்பட்டாயா?

**பத்மாவதி :** என் உறவினர்களைப் பற்றிய நற்செய்தி கேட்டுக் களிப்பேன், நாதரே!

**அரசன் :** வாசவதத்தையின் உறவினர்களை உன் சொந்த உறவினர்களாகக் கொண்டாடுவது உன் பெருமைக்கு ஏற்றதாயிருக்கின்றது. உட்கார், பத்மாவதி. ஏன் நிற்கிறாய்?

**பத்மாவதி :** இவர்களை வரவேற்கையில் நான் பக்கத்தில் அமர்ந்திருக்க வேண்டுமென்பது இறைவனின் விருப்பமா?

**அரசன் :** அதில் என்ன குற்றம்?

**பத்மாவதி :** அவர்களுடைய இளவரசியாகிய வாசவதத்தையின் இடத்தில் நான் இப்போது இருப்பதனால் எனக்குத் துக்கவுணர்ச்சியில்லையென அவர்களுக்குத் தோன்றும்.

2. பத்மாவதியின் விவாகத்தையேனும், வத்ஸ ராஜ்யத்தைத் திரும்பப் பெற்றதையேனும், அல்லது அவ்விரண்டையுமேனும் குறிக்கும்.

அரசன் : ஆனால், எனது அரசியாகிய உன்னைப் பார்ப்பதற்கு உரிமை வாய்ந்த அவர்கள் பார்க்க வொட்டாமற் செய்வது வழக்கத்திற்கு அடுக்காது. ஆகையால், உட்கார்.

பத்மாவதி : எஜமானரது சித்தம்! (உட்காருகிறாள்) அவ்வன்புடைய பெற்றோர் என்ன சொல்வார்களோவென்று என் மனத்தில் அருவருப்பாயிருக்கிறது.

அரசன் : அது இயற்கையே, பத்மாவதி.

4. கன்னனையாய்! அவரென்ன ஏது கூறிக்
கடிவாரோ என உள்ளம் அஞ்சும் அஞ்சும்!
திண்ணியலான் தனிமகளைக் கவர்ந்தேன்; அன்றே
செந்தீயில் மடவரலை இழந்தேன் அந்தோ!

சீரனைத்தும் பறிபோக, நிலையிலாத
திருவுமெனை யகன்றது; வெந்துயரம் சேர்க்கும்
காரியத்தால், அறிவின்றி, ஈன்றான் சீற்றக்
கனல் மூட்டும் குமரனைப்போல் உழைகின்றேனே!

பத்மாவதி : உற்றவேளை வரும்போது எதையும் தடுக்க முடியாது.

துவாரபாலகி : கஞ்சுகியும், தாதியும் வசாலண்டை காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசன் : அவர்களை விரைந்து அழைத்துவா.

துவாரபாலகி : சித்தம் சுவாமி! (போகிறாள்)

(கஞ்சுகியும், தாதியும் துவாரபாலகியும் வருகிறார்கள்)

பரபத்தி :

5. பற்றிளர் அரசாளும் - இந்தப்
பதியினில் எய்தியதால்
முற்றவும் உவகையிலே - உள்ளம்
மூழ்கி மகிழ்ந்திடினும்,

எனதிறை ஈன்றருளும் - செல்வ
ஏந்திழைதன் கதியை
மனதிடை எண்ணுகையில் - துன்பம்
மல்கி மெலிந்திடுவேன்.

அரசை இழந்திடினும் - இளவல்
அத்துணை ஏக்கமுறான்!
மருவிய காதலியை - விதியே
வந்து கவர்ந்தனையே.

**துவாரபாலகி :** இதோ எங்கள் பிரபு இருக்கின்றார், ஐயா, சமீபத்தில் போங்கள்.

**பரபத்தி :** *(அரசனை அணுகி)* மகாராஜருக்கு ஜே!

**தாதி :** மகாபிரபுக்கு ஜே!

**அரசன் :** *(கஞ்சுகியை நோக்கி, மரியாதையாக)* ஐயா,

6. மன்னர்க் கிறைவன் சுகமேயோ?
வையத்தரசர் தமை, ஆக்கி
உன்னியழிக்கும் திறலுள்ளான்!
உறவைப்பேணும் எனைமறவான்!

**பரபத்தி :** ஆம், மகாசேனர் சௌக்கியமாயிருக்கின்றார். இவ்விடத்தில் எல்லாரும் சௌக்கியமாவென்று அவர் விசாரிக்கின்றார்.

**அரசன் :** *(ஆசனத்தினின்றெழுந்து)* மகாசேனருடைய கட்டளைகள் யாவை?

**பரபத்தி :** இது வைதேகி[3] வமிசத்தோன்றலுக்கு இருக்கத்தக்க பெருந் தகைமையே. இனித் தயவு செய்து ஆசனத்தமர்ந்து, மகாசேனரது நல் எண்ணத்தை ஆதரவுடன் கேளுங்கள்.

**அரசன் :** மகாசேனரது உத்தரவுபடியே *(உட்காருகிறான்)*

---

3. வைதேகி - ஏனெனில், உதயணன் மிருகவதியென்னும் கோசலத்து அரசியின் குமாரன், மிருகவதியோ, வைதேகி என்னும் சீதையின் வமிசத்தில் உதித்தவள்.

*பரபத்தி* : பகைவர்களால் கைக்கொள்ளப்பட்ட உங்கள் இராஜ்யத்தை நீங்கள் திரும்பப் பெற்றதற்கு மகிழ்ந்து வாழ்த்து கூறுகின்றார். ஏனெனில்,

7. சேர்ந்த சிந்தையும் மெலிவு மெய்தினார்
துணிவும் ஆற்றலும் திகழ நிற்பரோ?
ஆர்ந்த வீறிலார் அரச மாட்சியை
அடையும் எண்ணமும் மொழியும் ஆகுமோ?

*அரசன் :* ஐயா, இதெல்லாம் மகாசேனரது ஆசீர்வாதத்தின் பயனேயாகும்.

8. பட்ட தோல்வியும் நாணமும் கொண்டு
பங்கமெய்திய வேளையில்,
கிட்டி என்னையும் சேயென அன்பிற்
கீர்த்தி மன்னவன் தழுவினான்?

அண்ணல் ஈன்றருள் மடவரல் தன்னை
அபகரித்திட வஞ்சகம்
பண்ணினேன்! எழில் நங்கையைப் பின்னர்
பாதுகாக்கவும் தவறினேன்!

பூவை போனதால் தேய்ந்திலான் அன்பு
பொருநன்! ஓங்கிய தூதரை
ஏவினான் அவன் அருளினால் மீட்டும்
எய்தினேன் அணி நாட்டையும்!

*பரபத்தி :* நல்லது, மகாசேனர் சொல்லியனுப்பிய செய்தி இவ்வளவே. பேரரசியர் அனுப்பிய செய்தியை இவ்வம்மை கூறுவள்.

*அரசன் :* ஆ, அம்மா!

9. சுகமோ, அப்பேரரசி, பதினாறு கொற்றத்
தோகையர்க்கும் தனிமுதல்வி, எனதன்னை இன்ப
நகராளும் அதிகார தேவதையு மாவாள்!
நயனத்தில் நீர்சோர எமையெண்ணி நைந்தாள்.

*தாதி* : பேரரசியார் சௌக்கியமா யிருக்கின்றார். மகா பிரபுவாகிய உங்களுடைய க்ஷேமத்தையும், உங்களைச் சேர்ந்தவர்களின் க்ஷேமத்தையும் விசாரிக்கின்றார்.

**அரசன் :** என்னைச் சேர்ந்தவர்களெல்லாருடைய க்ஷேமமுமா! என்னவர்களாயிருந்தவர்களின் க்ஷேமம் எப்படியிருந்ததென்று உனக்குத் தெரியுமே.

**தாதி :** இந்த அளவற்ற வருத்தம் போதும், மகாராஜரே.

**பரபத்தி :** தைரியங்கொள்ளுங்கள், பிரபுவே. இங்ஙனம், உங்கள் துக்கத்திற்கு உரியவளாயிருப்பதனால், மகாசேனரின் குமாரி இறந்துபோனாளெனினும் உண்மையில் இறந்துபோகவில்லை. ஆனால், உண்மையுரைக்கின்,

10. காலமெய்திடக் காலனும் வருவான்!
கயிறறுந்ததும் கலயமோ வீழும்!
சாலமக்களும் மரமும் இவ்விதியைத்
தழுவி மாளுவார், வேளைவந்துற்றால்!

**அரசன் :** அங்ஙனம் சொல்லாதேயும், ஐயா.

11. வரநின்ற பிறவியிலும் மறவேன் வென்றி
மாசேனன் ஈன்ற திருப்புதல்வி தன்னை!
அருமந்த செல்வி; எனதரசி, அந்நாள்
ஆசையுற மாணவியும் ஆனாள், அன்றே!

எமனெனைக் கைப்பற்றி உயிர்கொண்டாலும்,
இடமகலும் மண்ணெல்லாம் நீரானாலும்,
தேமதுர மொழியாளின் நினை வெந்நாளும்
சிந்தையிலே நிலையாகத் திகழும் நின்றே!

**தாதி :** பேரரசியார் எண்ணம் வருமாறு : - வாசவதத்தை இறந்துபோனாள். மகாசேனருக்கும், எனக்கும் நீர் எங்களுக்குக் கோபாலகனையும் பாலகனையும் போல, அன்புக்குரியவராய் இருக்கின்றீர். முதன் முதலில் இருந்தே நாங்கள் உம்மை எங்கள் மருமகனாக வகித்திருந்தோம். அந்தக் காரணத்தினாலேயே உம்மை உஜ்ஜைனிக்கும் கொண்டுவரச் செய்தோம். அக்கினி சாக்ஷியாக அவளை உமக்கு விவாகம் செய்து கொடுக்கு முன்னரே, வீணைகற்கும் காரணம் வைத்து, அவளை உம்முடைய வசத்தில் ஒப்பித்தோம். முறைப்படி விவாகம் நடக்கு முன்னரே உம்முடைய ஆத்திரத்தினால் நீர் அவளுடன் கள்ளத்தனமாக ஓடிப்போனீர். அதன்மீது உமது உருவப் படத்தையும், வாசவதத்தையின் உருவப்படத்தையும்

பலகையிற் சித்தரித்து உங்களுக்குப் பதிலாக அவ்வுருவப்படங்களை வைத்து விவாக மகோற்சவத்தை முறைப்படி கொண்டாடி முடித்தோம். அவ்வுருவப் படங்களை உமக்கு இப்போது அனுப்புகின்றோம். அவைகளைக் காண்பதனால் உமக்கு ஒருவாறு திருப்தி ஏற்படுமாக.''

**அரசன் :** பேரரசியாருடைய வாய்மொழிகள் எவ்வளவு இனிமையும், திருப்தியும் தருகின்றனவோ அவ்வளவு!

12. ஆயிரம் அரியணை யினும்
அருமை இம் மொழி அன்று நான்
தீய செய்தன சிந்தியால்
தேவி அன்பு திரிந்திலாள்!

**பத்மாவதி :** ஆருயிரே, எனது தமக்கையின் உருவப்படத்தைப் பார்த்து வந்தனம் செய்ய விரும்புகின்றேன்.

**தாதி :** பாரும், அரசியாரே, பாரும் (வாசவதத்தையின் படத்தைக் காட்டுகிறாள்).

**பத்மாவதி :** (தனக்குத்தானே) உம்! மாது ஆவந்திகையின் சாயல் இருக்கிறதே. (உரக்க) இது அரசி வாசவதத்தையின் சரியான உருவப் படமா? (அதை அரசனிடம் கொடுக்கிறாள்).

**அரசன் :** (அதை உற்றுப் பார்க்கிறான்). இது அவளுடைய படமன்று; அவளே யென்று நினைக்கிறேன். ஓ, ஐயோ!

13. அந்தோ, இந்த அழகிய மேனி
அறிவுற வந்த வகை யென்னே!
வெந்தீயிடை இவ்வெழிலுறு வதனம்
வெந்தது முற்றக்கொடி தம்மா!

**பத்மாவதி :** எனது பிராணநாதரின் உருவப்படத்தை நான் கண்ணால் பார்த்தால், மற்றது அரசியாரின் சரியான உருவப்படமோ அல்லவோ என்று நான் சொல்வதற்காகும்.

**தாதி :** அது இதோ இருக்கின்றது, அரசியாரே, பாருங்கள் (அதைக் கொடுக்கிறாள்)

**பத்மாவதி** : (அதை வாங்கிப் பார்க்கிறாள்) எனது உயிர்த்துணையின் உருவப்படம் அப்படியே அவரைப் போலவே இருக்கின்றது. இதனால், மற்ற உருவப்படமும் அரசியாரின் தவறற்ற உருவமாகவே இருக்குமென்று ஊகிக்கிறேன்.

**அரசன்** : தேவி! படத்தைப் பார்த்தது முதல் உனக்குச் சந்தோஷமாக இருப்பதாகவே தோன்றுகின்றது; ஆனால், மனக்கலக்கமும் தோன்றுகிறதே, அது ஏன்?

**பத்மாவதி** : இங்கொரு மாது இருக்கின்றாள். அந்தப்படத்திலுள்ளது போலவே இருக்கின்றாள்.

**அரசன்** : என்ன! வாசவதத்தையைப் போலவா?

**பத்மாவதி** : ஆம்.

**அரசன்** : அங்ஙனமாயின் அவளை உடனே இங்கு அழைத்துவா. அவள் இங்கே எப்படி வந்து சேர்ந்தாள்?

**பத்மாவதி** : உயிருக்குயிரே, என் விவாகத்திற்கு முன்னால் ஒரு பிராமணர் அவளை அழைத்துக்கொண்டு வந்து என் காப்பில் வைத்துக்கொள்ளும்படி ஒப்புவித்துப் போனார். அவள் தமக்குச் சகோதரியென்றும், அவளுடைய கணவன் வேறு தேசம் போயிருக்கிறானென்றும் எனக்குச் சொன்னார். அவள் பிற புருஷரைப் பார்ப்பதில்லை. என்னுடன் இருக்கும்போது அவள் யாரென்று நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

**அரசன்** : (தனக்குத்தானே)

14. நாடுசுற்றுமோர் அந்தணன் தங்கை அவளாயின்
நான்மனத்திடை எண்ணிய எண்ணம் தவறாகும்
நீடுதெண்டிரை வையகந் தன்னிற் சிலவேளை,
நிறையு மொற்றுமை வடிவினிலுற்றார் உளரன்றோ?

(துவாரபாலகி வருகிறாள்)

**துவாரபாலகி** : மகாராஜருக்கு ஜே! வாசலில் ஒரு பிராமணர் வந்திருக்கிறார். அவர் தம் சகோதரியை நம் அரசியாரிடம் சிறிது காலம் இருக்கும்படி ஒப்புவித்துப் போனாராம். அவளைத் திரும்ப அழைத்துக் கொண்டு போவதற்கு வந்திருக்கிறாராம்.

*அரசன் :* பத்மாவதி, நீ சொல்லிய பிராமணர் அவரேயா?

*பத்மாவதி :* அவராகத்தான் இருக்கவேண்டும்.

*அரசன் :* உன் மாளிகைக்குரிய மரியாதைகளோடு அவரை உடனே அழைத்துவா.

*துவாரபாலகி :* புத்தி, சுவாமி! (போகிறாள்).

*அரசன் :* பத்மாவதி, அம்மாதை இப்போது இவ்விடம் அழைத்து வருவாயா?

*பத்மாவதி :* சித்தம், நாதா, (பத்மாவதி போகிறாள்).

(யௌகந்தராயணரும், துவாரபாலகியும் வருகிறார்கள்)

*யௌகந்த :* (தமக்குத்தாமே)

15. புரவலன் நன்மை கருதி நானன்று
பூவையை மறைத்தேன்! மேவுமென் செயலும்
எண்ணமும் எல்லாம் அண்ணலின் சுகத்தை
நாடியே நின்றன! தேடி நானிட்ட
திட்டமும் வெற்றி கிட்டிய திந்நாள்!
ஆயினும், எந்தன் நாயகன் என்னை
எவ்விதம் மதிப்பான்? ஈதுணரேனே!

*துவாரபாலகி :* எங்கள் இறைவர் இதோ இருக்கின்றார், அவரண்டை போங்கள் ஐயா.

*யௌகந்த :* (நெருங்கி நடந்து) மகாராஜருக்கு ஜே!

*அரசன் :* இந்தக் குரலை நான் இதற்கு முன்னால் கேட்டுள்ளேன்போல் இருக்கின்றதே. ஓ, பிராமணரே, உமது தங்கையைப் பத்மாவதி யின் ஆசிரமத்தில் விட்டுப் போனீரா?

*யௌகந்த :* நிச்சயமாக, விட்டுப்போனேன்.

*அரசன் :* (துவாரபாலகியை நோக்கி) அங்ஙனமாயின் இவருடைய சகோதரியை இப்போதே என்முன் அழைத்துவா.

**துவாரபாலகி :** புத்தி, மகா சுவாமி. (துவாரபாலகி போகிறாள்)

(பத்மாவதியும், ஆவந்திகையும், துவாரபாலகியும் வருகிறார்கள்)

**பத்மாவதி :** வா அம்மா, உனக்குச் சுப சமாசாரம் சொல்லப் போகிறேன்.

**ஆவந்திகை :** அது என்ன?

**பத்மாவதி :** உன் தமையனார் உன்னைத் திரும்ப அழைத்துக் கொண்டு போக வந்திருக்கிறார்.

**ஆவந்திகை :** நல்ல வேளை. அவருக்கு இன்னும் என் ஞாபகம் இருக்கின்றதே.

**பத்மாவதி :** (அரசனண்டை போய்) மகாராஜருக்கு ஜே! இதோ என் மதிப்பிற்குரியவள்.

**அரசன் :** முறைப்படி இவளைத் திரும்ப ஒப்பித்து விடு, பத்மாவதி. வைக்கப்பட்ட பொருளை சாக்ஷிகளின் முன் திருப்பிக் கொடுக்க வேண்டும். இங்குள்ள பெருமை வாய்ந்த ரைப்பியரும் இந்நற் குணமாதும் சாக்ஷியொப்பம் வைப்பார்கள்.

**பத்மாவதி :** (யௌகந்தராயணரை நோக்கி) இதோ ஐயா, இவ் வம்மையின் பொறுப்பைத் திரும்ப மேற்கொள்ளும்.

**தாதி :** (ஆவந்திகையை உற்றுப் பார்த்து) ஆனால், இது ராணி வாசவதத்தையாயிற்றே!

**அரசன் :** என்ன! மகாசேனரது புத்திரியா? ஓ, தேவீ! பத்மாவதியுடன் உள்ளகம்போ.

**யௌகந்த :** இல்லை, அப்படியன்று. இவள் உள்ளே போகக்கூடாது. இப்போது, நான் சொல்லுகிறேன் கேளும், என் சகோதரி.

**அரசன் :** என்ன சொல்லுகிறீர்? நிச்சயமாக இவள் மகாசேனரது குமாரியே.

**யௌகந்த :** ஓ. அரசே!

16. மானப்பரத வமிசத்தில்
        வளரும் பெருமை வாய்த்தவளே!
    ஞானத் தூய்மை சீலமெலாம்
        நண்ணித் திகழும் வதனத்தோய்!

    நெறியோ? அவளைத் தடைசெய்து
        நீயும் நிறுத்தத் துணிவாயோ?
    இறையோர்க் கெல்லாம் இறை மாட்சி
        இதுவென் றுணர்த்தும் பெருமானே!

*அரசன் :* நல்லது, ஆனால், அதிசயமான இவ்வடிவ வொற்றுமையைப் பார்ப்போம். *(யவனிகையை)* திரை[4]யை ஒதுக்கு.

*யௌகந்த :* மகாராஜருக்கு ஜே!

*வாஸவதத்தை :* மகாராஜருக்கு ஜே!

*அரசன் :* தெய்வ சாக்ஷியாக, இவரே யௌகந்தராயணர். இவளே மகா சேனரது புத்திரி.

17. மீண்டும் கனவோ, நனவேயோ?
        விழிமுன் அவளைக் காண்கின்றேன்!
    காண்டற் கினியாள் தனைவீணிற்
        கண்டேன் அன்றும் இவ்வாறே!

*(வாசவதத்தையைக் கவனித்துப் பார்க்கிறான்)* அவந்தி மகாராஜ ரின் செல்வக்குமாரியென்பதில் இப்போது சந்தேகம் இல்லை.

17. a) மாண்டாள் இனி மங்கை; - விண்ணில்
        வாய்ப்பேன் என நின்றேன்!
    ஈண்டே மடமின்னை - எய்தும்
        இன்பம் பெறலானேன்.

*யௌகந்த :* ஐயா, ராணியாரை மறைத்து வைத்திருந்ததனால் பெருங் குற்றவாளியானேன். என்னை மன்னிக்க வேண்டுகிறேன். *(அரசன் பாதத்தில் பணிகின்றார்).*

---

4. **திரை:-** திரையென்பது முகமறைக்கும் முக்காடு போலும். அரங்கமேடையின் திரைச்சீலையன்று.

**அரசன் :** (அவரைத் தூக்கியெடுத்து) நீர் நிச்சயமாக யௌகந்தராயணரே!

18. பித்தனாய் நடித்தாய், பின்னர்
    பெருஞ்சமர் தொடுத்தாய், மேலும்
உத்திநூல் கூறும் ஆழ்ந்த
    உபாயமும் கைக்கொண்டாய்நீ!
மெலிவுறும் சிந்தையாகி
    வீழ்ந்தநாட் குழியினின்றும்
நலமுற எடுத்து வாழ்வு
    நல்கினாய், நல்லோய், வாழி!

**யௌகந்த :** நான் என்ன செய்துவிட்டேன்? எனது எஜமானரது அதிர்ஷ்டப் போக்கையனுசரித்து நடந்தேன்.

**பத்மாவதி :** ஆ, இப்போது இவள்தான் ராணி, வாசவதத்தை! அம்மா, தோழியாக உம்மைப் பாவித்து இதுவரையில் நான் நடத்தி வந்ததில் என்னையறியாமல் முறைதவறி நடந்திருக்கிறேன். தலைவணங்கிப் பணிந்து இப்போது மன்னிப்பு வேண்டிக் கொள்கிறேன். (வாசவதத்தையின் பாதத்தில் பணிகிறாள்).

**வாசவதத்தை :** (பத்மாவதியைத் தூக்கிப்பிடித்து) எழுந்திரு, எழுந்திரு ஓ, நற்குணவதி, குற்றமேதேனும் உண்டெனில், அது ஒரு காரணமும் இல்லாமல் நீ எனக்கு நமஸ்கரிப்பதேயாம்.

**பத்மாவதி :** உமக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

**அரசன் :** யௌகந்தராயணரே, ராணியை மறைத்து வைத்திருந்ததில் உமது உத்தேசம் என்ன?

**யௌகந்த :** கௌசாம்பியைக் காப்பாற்றுவதொன்றே எனது நோக்கம்.

**அரசன் :** அவளைப் பத்மாவதியின் வசத்தில் ஏன் விடுத்து வைத்தீர்?

**யௌகந்த :** பத்மாவதி உங்கள் வாழ்க்கைத் துணைவியாவளென்று சோதிட சாஸ்திரிகளான புஷ்பகனும், பத்ரகனும் முன்னராகச் சொல்லியிருந்தார்கள்.

**அரசன் :** ருமண்வானுக்கும் இது தெரியுமா?

**யௌகந்த :** பிரபுவே, அவர்களெல்லோருக்கும் தெரியும்.

***அரசன் :*** ருமண்வான் என்ன படுகள்ளனாயிருக்கிறானே!

**யௌகந்த :** மகாராஜா, கனவானான இந்த ரைப்யனும் சீலவதியான இவ்வம்மையும் இன்றைக்கே திரும்பிப் போய், வாசவதத்தை க்ஷேமமாயிருக்கிறாளென்று உஜ்ஜைனியில் அறிவிக்கட்டும்.

***அரசன் :*** அங்ஙனமன்று, பத்மாவதியுடன் நாமெல்லோருமே ஒருமித்துப் போவோம்.

## முடிவுரை

19. இமய விந்தியம் இருசெவிக் கலனாய்
  இலக, நீர்க்கடல் குழுமிப்பெரிய
அமுத நாடெலாம் சிங்கவேறனையான்,
  அதிபன், எம்மிறை அரசு செய்திடவே!

வெற்றிமன்னவன் ஒப்பிலா அரசின்
  மேன்மை பொங்குக! தனிமையிற் பரவும்
கொற்ற வெண்குடை நிழலில் எஞ்ஞான்றும்
  குடிகள் அன்புறக் குலவி வாழ்ந்திடவே!

*(எல்லோரும் போகிறார்கள்)*

*(ஆறாம் அங்கம் முற்றிற்று).*

*(ஸ்வப்ன வாசவதத்தம் நிறைவுற்றது).*

**சுபம்!**

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை |
|---|---|
| இராசேந்திரன் | 55.00 |
| முல்லை | 25.00 |
| திராவிட மொழியின் மூவிடப்பெயர் | 40.00 |
| தமிழ்நாட்டு வரலாற்றின் இலக்கிய ஆதாரங்கள் கி.மு.200 - கி.பி.1300 | 100.00 |
| வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணியும் | 65.00 |
| தமிழ் நாடகமேடை முன்னோடிகள் | 40.00 |
| தமிழ் வள்ளல் பாண்டித்துரையார் | 25.00 |
| தேவநேயப்பாவாணரின் மொழியியல் - வரலாற்றுக் கொள்கை | 35.00 |
| தமிழ்த்தூது | 20.00 |
| கபிலர் | 70.00 |
| கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 20.00 |
| நாட்டிய நன்னூல் | 25.00 |
| சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும் | 65.00 |
| கதிர்வேற்பிள்ளை-தமிழ்ச் சொல்லகராதி, மூன்று பாகங்கள் | 600.00 |
| எண்பத்து மூன்றில் த்மிழ், பகுதி-3 | 30.00 |
| காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் ஓர் ஆய்வு | 60.00 |
| திருக்குற்றாலநாத சுவாமி கோவில் வரலாறும் பண்பாடும் | 60.00 |
| உத்தர ராம சரிதம் | 30.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 1 | 50.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 2 | 40.00 |
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | 40.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 75.00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | 65.00 |
| தமிழக மேடை நாடகப் பெண்கலைஞர்கள் குறிப்பேடு | 25.00 |
| **A Grammar of Contemporary Literary Tamil** | 80.00 |
| **Cilappatikaram** | 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | 125.00 |
| **Tamil Culture and Civilization** | 60.00 |
| **Tolkappiyam and Astadhyayi** | 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | 50.00 |
| தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல் பகுதி 1 | 50.00 |
| தடிவீரசுவாமிகதை வன்னியராயன்கதை | 55.00 |
| சடத்தலம் | 40.00 |
| காத்தவராய நாடகம் | 30.00 |
| மதங்க சூளாமணி | 40.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 32.00 |
| தமிழில் நவீன நாடகம் | 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80.00 |

---

**பாஸ மகா கவியின் இரட்டை நாடகங்கள் விலை ரூ. 36/-**